குண்டூசி

ஜூலை 54.... எட்டு அணா

OFFICE OF ... REGISTRAR OF BOO...
28 JUL 1954
403.
3-54
400

Distributors: **A. V. R. A. & Co.,** **Madras, Bombay.**

இப்பொழுது தமிழ்நாடெங்கும்
கதையிலே கருத்துக்கும்
ஆடல்களிலே கண்ணுக்கும்
பாடல்களிலே செவிக்கும்
இன்பம் தருவது
பெண்
AVM
புரொடக்ஷன்ஸ்



சென்னை நகரம்: எஸ். ஆர். பிக்சர்ஸ், சென்னை — வட ஆற்காடு, தென்னாற்காடு, செங்கற்பட்டு, சித்தூர்: கீதா பிக்சர்ஸ், குடியாத்தம் — திருச்சி, தஞ்சை: மாவூர் காளி பில்ம்ஸ், திருச்சி — மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி: இந்தியா டாக்கீ டிஸ்டிரிபியூஷன் கம்பெனி, திருநெல்வேலி — கோவை, நீலகிரி, சேலம்: கோயமுத்தூர் பிக்சர்ஸ், கோயமுத்தூர் — மைசூர், குடகு, தென்கன்னடம்: விஜயா டாக்கி டிஸ்டிரிப்யூட்டர்ஸ், பங்களூர் ஸிடி — மலையாளம்: ஸென்ட்ரல் பிக்சர்ஸ், கோட்டயம், எர்ணாகுளம் — எப். எம். எஸ்: பல்வந்த் சிங் & கம்பெனி, பம்பாய்.

வார்த்தெடுத்த கான்கிரீட் கட்டிகள்

சுவர்களுக்கான தொளையுள்ள கான்கிரீட் கட்டிகள், தரைகளுக்கும், கூரைகளுக்கும் உபயோகப்படும் 'T' வடிவம் கொண்ட ரெயின் போர்ஸ்ட் கான்கிரீட் உத்திரங்கள், கதவுகள் ஜன்னல்களுக்கான ரெயின் போர்ஸ்ட் கான்கிரீட் சட்டங்கள் முதலானவைகள் விலை குறைந்த, தீப் பிடிக்காத உறுதியான வீடுகளைக்கட்ட பயன்படுகின்றன. மேற்கூறிய மூன்று வகைகளுக்கு மட்டும கான்கிரீட் பொருள்களை வாங்குவதால் சாதாரண கட்டிடச் செலவில் மூன்றில் ஒரு பங்கை மிச்சப்படுத்த முடிகிறது.

பிரிடிஷ் ஸ்டாண்டர்ட் நிபந்தனைகளுக்கு ஓரளவு மிஞ்சியே நிற்கும் ஏ. சி. சி நீலகிரி பிராண்டு சிமெண்டு இப்பொழுது தென் இந்தியாவில் கிடைக்கிறது

ஏ.சி.சி.

நீலகிரி பிராண்டு

சிமெண்டில்

லாபகரமான வீடுகளைக் கட்டுவதற்கு



உங்கள் தேவைகளுக்கு உடனே எழுதுங்கள்.
அருகாமையிலுள்ள சி. எம். ஐ. ஸ்டாகிஸ்டு
அல்லது வியாபாரியிடம அல்லது நேராகவோ

தி சிமெண்டு மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிட்.

9, மௌண்ட் ரோடு, மதருஸ். 4/12, ரேஸ் கோர்ஸ் ரோடு, கோயமுத்தூர். ஷுகர் கம்பெனி பில்டிங், பெங்களூர்.

கான்கிரீட் உபயோகித்து கட்டுவது சம்பந்தமான எல்லா பிரச்னைகளுக்கும் தி கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா 9, மௌண்டு ரோடு, மதருஸ் அல்லது ஷுகர் கம்பெனி பில்டிங், பெங்களூர் என்ற விலாசத்திற்கு எழுதி தொழிற்நுட்ப ஆலோசனைகளை இலவசமாகப் பெறுங்கள்

குண்டூசி

ஆசிரியர்: பி.ஆர்.எஸ்.கோபால்

கலைஞனும், கட்சியும்

கலைஞனுக்கு—அதுவும் நடிப்புக் கலைஞனுக்கு—கட்சி உண்டா? கட்டுப்பாடுகளும், வரம்புகளும் உண்டா?

இக்கலையில் ஈடுபட்டுள்ளோரும், கலையை ரஸிப்போரும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒரு முக்கிய பிரச்னை இது.

தூயமனதுடன் இப்பிரச்னையை முன்னரே ஆராய்ந்த லக்ஷியவாதிகள் கூறுகின்றனர்:

"கட்சிகளுக்கு மேம்பட்டவனே உண்மைக் கலைஞன். கலை மானிட வர்க்கத்தின் பொதுச் சொத்து; அனைவரும் அறியக் கூடிய பொது பாஷை; அதற்கு எவ்வித வரம்பும் கட்டுப்பாடும் கிடையாது."

இதுவே சரியான லக்ஷியம்; நேர்மையான பாதை. இந்த லக்ஷிய அடிப்படையிலேயே நம் கலைகள் யாவும் தற்போதைய உன்னத நிலையை அடைந்துள்ளன. நம் நடிப்புக் கலையும் இதற்கு உட்பட்டதுதான்.

இவ்வித உன்னத லக்ஷியத்துடன் வளர்ந்தோங்கிய நம் நடிப்புக் கலை, சமீப வருஷங்களில், சில அரசியல் கட்சியினர், சுயநலமிகள், சந்தர்ப்ப வாதிகள் போன்றோரிடம் சிக்கித் தவிக்கிறது. நடிப்புக் கலைக்குள்ள அபாரமான சக்தியை இவர்கள் சுயநலத்திற்கும், தமது கட்சிப் பிரகடனத்திற்கும், துவேஷப் பிரசாரத்திற்கும் பயன்படுத்தி வருகின்றனர். இவர்கள் விரித்துள்ள வஞ்சக வலையில் சில நாடக சினிமா நடிக நடிகையரும், டைரெக்டர்களும், பட முதலாளிகளும் வீழ்ந்து விட்டனர். இதன் விளைவுகளை நாம் சில சமீப காலப் படங்களிலும், நாடகங்களிலும் பார்த்து வருகிறோம்.

துவேஷமும், சுயநலமும் சேர்ந்து அரசியல் சமூக நிலைமையைக் குழப்பிக் கொண்டிருக்கின்றன. இவ்விதக் குழப்ப நிலைமை கலைக் களத்திலும் ஏற்படுவதை நம் நடிக நடிகையரும், படத் தயாரிப்பாளர்களும் விரும்புகிறார்களா? அரசியல் நிலைமைக்கேற்ப—மந்திரி சபை மாறுதலுக்கேற்ப — நம் சினிமா நாடக உலக நிலைமை மாறுவதை அவர்கள் வரவேற்கிறார்களா? இதுவரை எல்லா மக்களின் ஆதரவையும் பெற்று வரும் நம் நடிக, நடிகையரும், படத் தயாரிப்பாளர்களும் தம் ஆதரவாளர்களைப் பகுதி பகுதியாகப் பிரித்து, ஒரு சிலரின் ஆதரவு மட்டுமே போதும் என்று திருப்தி அடையப் போகிறார்களா?

நடிகர் வர்க்கம் எல்லாத் தர மக்களின் ஆதரவையும் பெற்றால் தான் ஜீவித்திருக்க முடியும். ஆனால், சமீப காலமாக, ஆலவிருட்சம் போன்று விளங்கிய சில நாடக சினிமா நடிகர்கள் வயிற்றுப் பிழைப்

பட்டை-7 ஊசி-10 பிரதி-82
ஜூலை – 1954

பிற்காக — தற்காலிக நன்மைக்காக — பணப் பேராசை காரணமாக—உளுந்து, பயிறு போன்ற "இடைக்காலப் பயிர்களாக" மாறியிருப்பது பரிதாபப்பட வேண்டிய விஷயமாகும்.

சில பட முதலாளிகளோ லக்ஷக் கணக்கில் பணத்தைச் செலவழித்து விட்டு, சொற்பக் கணக்கில் ஆதரவு தேடி அதோகதி அடைந்து வருகின்றனர்.

பட முதலாளிகளுக்கு வேண்டியது பணம். எல்லா ரஸிகர்களிடமிருந்தும் வசூலானாலே அவர் போட்ட முதலை எடுப்பது கஷ்டமாயிருக்கிறது. அப்படி யிருக்க தம் ஆதரவாளர்களின் பெரும் பகுதியினரின் வெறுப்பையும், எதிர்ப்பையும் அவர்கள் ஏன் சம்பாதித்துக் கொள்ள வேண்டும்?

நடிகர்கள் கட்சிப் பாகுபாடுகளுக்கும், குறுகிய கட்டுப்பாடுகளுக்கும், அரசியல், சமூகக் குழப்பங்களுக்கும் புறம்பே நின்று உன்னத லக்ஷியங்களுடன் தொண்டு புரிய வேண்டும். படத் தயாரிப்பாளர்களோ சர்வ ஜன ரஸனைக்கும், ஆதரவுக்கும் உரியதான படங்களையே தயாரிக்க வேண்டும். இல்லையேல், நாளாவட்டத்தில் எதிர்ப்பு சக்திகள் ஒன்று திரண்டு—நாடக சினிமாத் தொழில்களுக்கு பேராபத்தை ஏற்படுத்தி வைக்கும்.

வருஷ சந்தா

இந்தியா, இலங்கை ... ரூ. 6
வெளி நாடுகள் ... ... ரூ. 9

தனிப் பிரதி

இந்தியா ... ... 8 அணா
இலங்கை ... ... 50 சதம்
வெளி நாடு ... ... 12 அணா

கட்டுரையாளர்களுக்கு

'குண்டூசி'யில் வெளியிடுவதற்கு நல்ல சிறு கதைகள், கட்டுரைகள், ஹாஸ்யத் துணுக்குகள் முதலியவை வரவேற்கப் படுகின்றன. வெளியிடப்படுபவைகளுக்குத் தக்க சன்மானம் அளிக்கப்படும்.

அங்கீகரிக்கப்படாத விஷயங்களைத் திரும்பப் பெற வேண்டுபவர்கள் போதிய ஸ்டாம்ப் உள்ள கவர்களை முன்னதாகவே வைத்து அனுப்பவேண்டும்.

குண்டூசி காரியாலயம்,
26, கிடங்குத் தெரு,
சென்னை—1.

குறிப்பு :—"குண்டூசி"யில் வெளியாகும் கட்டுரைகள் கதைகள், விகடத் துணுக்குகள் முதலியவைகளில் காணப்படும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. அவைகள் நிஜ நபர் எவரையும் குறிப்பிடுபவை அல்ல. —ஆசிரியர்.

"மாங்கல்யம்"—ஒரு நல்ல முயற்சி

நாகராஜனின் நல்ல வசனங்கள்

குறுகிய காலத்தில், குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு வெற்றி கண்டுள்ள படம்—எம். ஏ. வி. பிக்சர்ஸாரின் "மாங்கல்யம்".

கதையில் புதுமை ஒன்றுமில்லை. ஏற்கெனவே வெளிவந்துள்ள "தேவதா" (தெலுங்கு), "விளையாட்டு பொம்மை" ஆகிய படங்களில் வந்துள்ள பல சந்தர்ப்பங்களே இதிலும் இடம் பெற்றுள்ளன. கதையின் இறுதி ஒரே குளறுபடியாக இருக்கிறது.

படத்தின் வெற்றிக்கு ஜீவநாடியாக இருக்கிறது வசனங்கள். அதிகப் படாடோபமின்றி சுபாவமாக, எளிய நடையிலே கருத்துமிக்க வசனங்களை எழுதியிருக்கிறார் நாகராஜன். ஆங்காங்கே நல்ல முறையில் சமூகத்தைப் பாழ்படுத்தும் கட்சியாளர்களுக்கும் அழகாக டோஸ் கொடுத்திருக்கிறார்.

டாக்டர் குமாராக வருகிறார் ஏ. பி. நாகராஜன். வசனங்களை உணர்ந்து பேசுகிறார்; நன்றாகவும் நடிக்கிறார். ஆனால், அவரது தோற்றம் கவர்ச்சிகரமாக இல்லாததுடன், முகத்திலே பாவமே இல்லை. நண்பன் கோபியாக நடிக்கும் நம்பியார் தமாஷாக வெகு சுபாவமாக நடித்திருக்கிறார். நாடக கம்பெனி முதலாளி ராஜாவாக எஸ். ஏ. நடராஜன் மிகவும் நன்றாக நடித்திருக்கிறார். கச்சிதமாக இருக்கிறது இப்படத்தில் அவரது நடிப்பு. நாடக கம்பெனி மானேஜராக எமுமலையும், 'கூஜா' மணியாக ஏ. கருணாநிதியும் நன்கு நடித்திருக்கிறார்கள். இவர்களது நடிப்பு சில இடங்களில் மிகையாக இருந்தாலும் கலகலப்பை ஏற்படுத்துகிறார்கள்.

நடிகைகளில் லக்ஷ்மியாக வரும் பி. ஆர். சுலோசனா துடிதுடிப்பாக நடிக்கிறார். ஆனால், வாயை அவ்வளவு கோணலாகப் பண்ணிக்கொள்ளாதிருந்தால் நன்றாயிருக்கும். வேலைக்காரி செல்லமாக பி. எஸ். சரோஜா நடித்திருக்கிறார். இவரது நடிப்பில் சுறுசுறுப்பேயில்லை. நாடக நடிகையாக மாறிய பிறகு நடிப்பில் கொஞ்சம் உணர்ச்சி இருக்கிறது. நளினாவாக நடிக்கும் எஸ். மோஹனாவின் நடிப்பு சோபிக்காமல் போனமைக்குக் காரணம் அவருடைய சரீரம் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. குமாரின் தாயாக வரும் ஸி. டி. ராஜகாந்தம் தாம் ஒரு ஹாஸ்ய நடிகை என்பதை மறந்து இயற்கையாக நடித்திருக்கிறார்.

"மிதிலா மெட்டாலிக்ஸ்" ஸ்ரீ. ஏ. ஆர். விஸ்வநாதன் செட்டியாரின் குமாரி வஸந்தாவுக்கும், கல்லக்குறிச்சி ஸ்ரீ. கே. ராஜகோபால் செட்டியாரின் குமாரன் ஆர். கிருஷ்ணமூர்த்திக்கும் சென்ற 27—5—54ந் தேதியன்று கும்பகோணத்தில் திருமணம் நடந்தது.

டைரெக்டர்கள் கோஷ்டியில் புதிதாகச் சேர்ந்திருக்கும் இப் படத்தின் டைரெக்டர் கே. சோமுவுக்கு "மாங்கல்யம்" புகழ் ஏணியின் முதல்படியாக உதவியிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். பல இடங்களில் படம் பார்ப்போரைத் திகைக்க வைக்கிறார். 'நாம் ஒன்று நினைக்க அது ஒன்றாகும் கட்டங்கள்' (**Suspense**) பலவற்றை சாமர்த்தியமாகக் கையாண்டிருக்கிறார். படத்தின் விறுவிறுப்பு விஷயத்தில் மிக அக்கரை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

பல குறைகளும் இல்லாமல் இல்லை. தொடர்ச்சி (கண்டின்யுடி) விஷயத்தில் -முக்கியமாக கார்கள்—பல குறைகள் இருக்கின்றன. கிராமத்தில் நடக்கும் ஐயனார் கோயில் நடனம், ஹார்மோனிஸ்ட் மாரடைப்பால் மாண்டுபோகும் கட்டம் இவைகள் கதைப் போக்கிற்கு சம்பந்தமில்லாதவை. பின்னால் குறிப்பிட்ட சம்பவம் சமீபத்தில் ஒரு நாடக சபையில் ஒரு ஹார்மோனிஸ்ட் இறந்து போனதைக் கிண்டல் பண்ணுவதாக இருக்கிறது. இது நல்லதல்ல. "ராணி மங்கம்மாள்" நாடகம் ரொம்பவும் நீண்டுவிட்டது. '"மாங்கல்யம்" படம் பார்க்கிறோமா, அல்லது "ராணி மங்கம்மாளா?" என்ற சந்தேகம் ஏற்படும் அளவுக்கு நீண்டுவிட்டது. பிணத்தைப் போட்டுக்கொண்டு குமார் அலறும் இறுதிக் கட்டம் 'போர்' அடிக்கிறது.

இப்படத்தில் சங்கீத அம்சத்தை சிறப்பாகக் கையாண்டிருக்கிறார் சங்கீத டைரெக்டர் கே. வி. மஹாதேவன். செல்லத்தைப் பிரிந்து வருந்தும் குமார் வருந்துவது போன்ற கட்டங்களில் பின்னணியில் நல்ல இசையை அமைத்திருக்கிறார். பாட்டுகளில் "கூஜா"ப் பாட்டு கொஞ்சம் பிராபல்யமாக இருக்கிறது. இப்படத்தில் மற்றொரு விசேஷம் கதாநாயகன் ஒரு பாட்டுக்கூட பாடாததுதான்.

ஒளிப்பதிவு நன்றாயிருக்கிறது. பல இடங்களில் உயாவாகவும் இருக்கிறது. முக்கியமாக பறங்கிமலை பங்களா ஷாட்டுகளைச் சொல்லலாம். ஒலிப்பதிவு பாதகமில்லை.

மொத்தத்தில் "மாங்கல்யம்" ஒரு நல்ல முயற்சி; ஆபாசமில்லாத, நல்ல கருத்துக்கொண்ட ஒரு படம்.

—" ஜாம்பவான் "

N. ஆறுமுகம் பிள்ளை, காரைக்குடி

"பெண்"—ஒரு சிறந்த பொழுதுபோக்கி

நல்ல நடனமும், சங்கீதமும் நிறைந்த படம்

ஏவி. எம். மின் தமிழ் வாழ்க்கையும் ஹிந்தி "பஹாரும்", தெலுங்கு "ஜீவிதமும்" பிரமாதமான வெற்றியைப் பெற்று, ஏவி. மெய்யப்பனை ஒரு முதல்தர அகில இந்தியப் பட முதலாளியின் ஸ்தானத்திற்கு உயர்த்தி வைத்தன. இவ்விதம் கிடைத்த வெற்றி மாலை தம் கழுத்தில் நிரந்தரமாகவே இருக்க வேண்டும் என்ற உணர்ச்சியுடன்;உன்னத முறையில் திட்டமிட்டு, மூன்று பாஷைகளில் தயாரித்த படம் தான் "பெண்". சென்ற மாதம் இப்படம் தமிழ் நாடெங்கும் வெளி வந்து நல்ல வரவேற்பைப் பெற்றுவருகிறது.

ராணி ஒரு படித்த புதுமைப் பெண்—பெண்ணை இழிவுபடுத்துவோரை எதிர்ப்பவள் அவள். ஆண்களை மதிக்கும்—அடக்கவொடுக்கம் உடைய கண்மணி, அவளுடைய தோழி.

பெண்ணினத்திற்காக பரிந்து பேசுபவன் ராஜா. அவனுடைய நண்பன் ரகுவோ குறும்புத்தனமும், நேர்மையும் நிறைந்தவன்

இந்த நால்வரும் ஒரு ரஸ்தாவில் விசித்திரமான சந்தர்ப்பங்களுக்கிடையே சந்திக்கின்றனர். ராஜா கண்மணி இருவரும் காதல் கொள்ளுகின்றனர்.

ராஜாவின் தகப்பனர் 'பெண்ணைப் பேயெ'னத் திட்டும் புராதன மனிதர், அவருக்குப் பயந்து கொண்டு அவரிடம் சொல்லாமலே ராஜா கண்மணியை மணந்து கொள்ளுகிருன்.

பிறகு இவ்விஷயம் தகப்பனருக்குத் தெரிகிறது. அவர் பையனை வரவழைத்து அவனுக்கும் ராணிக்கும் திருமணம் ஏற்பாடு செய்கிருர்.

தன்னைக் கைவிட்ட கணவன் தன் தோழியையேதான் மணந்து கொள்ளப் போகிருன் என்பதை அறிந்த கண்மணி பிராணத் தியாகம் செய்ய முயல்கிருள். தகுந்த சந்தர்ப்பத்தில் ரகு தோன்றி அவளைக் காப்பாற்றுகிருன். அதோடு ராஜாவின் அயோக்கியத்தனத்தை வெளிப்படுத்தி ராஜா-ராணி திருமணத்தை நிறுத்துகிருன். இதற்குப் பரிசாக ராணி அவன் மனைவியாகிருள்!

ரா. வெங்கடாசலத்தால் எழுதப்பட்ட இக்கதையில் புதுமை எதுமில்லை. கதையின் மூலக் கருத்தும் சரிவர ஸ்தாபிக்கப்படவில்லை. வசனம் பாத்திரங்களுக்கேற்ற முறையில் இலகுவாக அமைக்கப்பட்டுள்ளன.

படத்தில் ஆங்காங்கே பலவித நடனங்கள் விசேஷ அம்சமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நடனமும் சுவை மிக்க ஒரு நல்விருந்தாக உள்ளது. ஆனல், இவை அவசியத்திற்கு அதிகமாய் இருப்பதால், படத்தின் முற்பகுதியில் கதைப் போக்கு தடைப்படுகிறது.

பேனுவுக்கும், கத்திக்கும் வாக்கு வாதம்—இல்லை பாட்டு வாதம்—நடப்பதாக ஒரு நடனத்தை பிரம்மாண்டமான—நூதன—ஸெட்டிங்குகளுடன் தயாரித்திருக்கிருர்கள். ஸெட்டிங்ஸ் பிரமாதமாயிருக்கிறது. ஆனல் நடனம் பூரண சோபிதம் பெறவில்லை.

ஒரே நபர் ஒரே காட்சியில் இரு வேஷங்களில் தோன்றி நடிக்கும்காட்சிகளைத் தயாரிப்பதில் ஏவி. எம். இணையற்றவர்கள். வைஜயந்தி இரு வேஷங்களில் தோன்றி ஆடும் காட்சிகளை சினிமா டெக்னிக் அதிகம் அறிந்தவர்கள் கூடப் பிரமிக்கும் வண்ணம் தயாரித்துள்ளது போற்றத் தக்கது.

இப்படத்தில் டி.எஸ். பகவதி,ராஜேஸ்வரி, பி, சுசீலா, ஸி. எஸ். ஜெயராமன், சந்திரபாபு, மோதி ஆகியோர் புகழக்கூடியபடி பின்னணி பாடியிருக்கின்றனர். ஏவி. எம். படங்களில் எப்பொழுதுமே நாம் காது குளிர—புதுமையான கருத்தும் மெட்டும் அமைந்த பாட்டுகளைக் கேட்க முடியும் என்ற நம்பிக்கையை இப்படமும் பூர்த்தி செய்கிறது. நடனத்தைப் போலவே பாட்டும் இப்படத்தில் நன்கமைந்திருக்கின்றன. "சொன்ன சொல்லை", "பொல்லாத்தனத்தை", "பரதரென்ற எங்கள் முனி", ஆகிய மூன்றும் காதில் ஒலிக்கும் பாட்டுக்களாகும்.

படத்தின் ஆரம்பத்தில் உள்ள மோட்டார் போட்டி விருவிருப்பாக அமைந்திருக்கிறது.

இப் படத்தில் யாருடைய நடிப்புமே சோடை சொல்லக் கூடியதாயில்லை.

[தொடர்ச்சி 79ம் பக்கத்தில்]

வாழ்க்கை வர்ணனை

சினிமாப் படங்களில் காட்டப்படும் கத்திச் சண்டை, தடிச் சண்டை, மல்யுத்தம் முதலியவைகளுக்கு பட ரஸிகர்கள் மௌனப்பட காலம் முதலே விசேஷ மதிப்பும் ஆதரவும் அளித்து வருகின்றனர். இந்தச் சண்டைக் காட்சிகளுக்கு அபரிமிதமான பாராட்டும், ஆதரவும் ஏற்பட்டிருக்கின்றன.

மௌனப் பட காலத்தில் சண்டைக் காட்சிகளும் வீரம் நிறைந்த காட்சிகளுமே படத்தின் ஜீவநாடியாக இருந்துவந்தன. பிறகு, பேசும் படங்கள் வரவே இக்காட்சிகள் அவற்றிலும் புகுத்தப்பட்டன. சில படங்கள் இதனால் நிறைய வசூலைப் பெற்றன. ஆனால், இக்காட்சிகளை தத்ரூபமான முறையில் "தயாரிக்கும் விஷயத்தில் பேசும் பட முதலாளிகள் விசேஷ கவனம் செலுத்தவில்லை.

பி.எஸ்.வீரப்பா

வந்த படங்களிலோ இக் காட்சிகள் விளையாட்டுத் தனமாகவும். கோமாளித்தனமாகவும், நம்ப முடியாத வகையிலும் இருந்தன. ஆதலால் இத்தகைய காட்சிகளுக்கும், அவை நிறைந்த படங்களுக்கும் பொதுஜன ஆதரவு குறைந்துவிட்டது.

"சந்திரலேகா" படம் வெளி வந்ததும் கத்திச் சண்டைக் காட்சிகளுக்கு ஒரு விசேஷ மதிப்ப ஏற்பட்டுவிட்டது. அதன் பின் அநேகமாக எல்லாப் படங்களிலுமே இக் காட்சிகள் இடம்பெற்று வருகின்றன. படங்களின் வெற்றி அம்சங்களுள் சண்டைக் காட்சிகளையும் ஒன்று



மேலே : "மதன மோஹினி" என்ற தமிழ்ப் படத்தில் வீரப்பாவின் ஒரு தோற்றம் இது.

"நாம்" தமிழ்ப்படத்தில் வீரப்பாவும். ஜெயஸ்ரீயும் தோன்றும் ஒரு காட்சி.

கச்சேர்த்துக் கொண்டுள்ளனர், பட முதலாளிகள். இக் காட்சிகள் காரணமாகவே சில படங்கள் பிரமாதமான வசூலையும் ஆதரவையும் பெற்றிருக்கின்றன; வேறு சில படங்களோ படுதோல்வியினின்றும் தப்பி யிருக்கின்றன. ஒரு மூலையில் ஒதுக்கப்பட்டிருந்த சில நடிகர்களுக்கு இதனல் நக்ஷத்திர மதிப்பும் ஏற்பட்டு விட்டது.

சண்டைக் காட்சிகள் தத்ருபமாகப் படமாக்கப்படவே அதில் பங்கெடுத்துக் கொள்ளும் நடிகர்களெல்லாம் உண்மையில் சண்டையிடுவதில் பயிற்சி உள்ளவர்கள்தான் என்று சினிமா ரஸிகர்கள் நம்பத் தொடங்கியுள்ளனர் அதனல் "நடிகர்களான........வும் ....வும் எங்கள் ஊருக்கு வந்து கத்திச் சண்டை செய்வார்களா?........ நிறையப் பணம் வசூலாகும்."

"நான் கத்திச் சண்டை பயின்றிருக்கிறேன். நடிகர்.......ஸ்ரீமான்...........என்னுடன் வாள் போரிட சம்மதிப்பாரா?"

"இதயகீதத்" தில் மஹாலிங்கத்துடன்.

"நடிகர்களான,............ இவர்களுள் கத்திச் சண்டையில் மிகத் தேர்ந்தவர் யார்?" —என்று இது போன்ற கேள்விகளை ரஸிகர்கள் அடிக்கடி என்னிடம் கேட்கின்றனர். பாவம், படங்களில் சண்டைக் காட்சிகள் மூலம் நல்ல பெயர் வாங்கும் நடிகர்கள் நேரில் அசல் சண்டையில் ஈடுபட நேரிட்டால், அவர்கள் கதி என்னவாகும்? இரண்டு மூன்று பேர்களைத் தவிர மற்றவர்களெல்லாம் சண்டையிடுவதாக வெறுமனே பாசாங்கு தானே செய்கிறார்கள்! இவர்களுக்காக தூரக் காட்சிகளில் சண்டையிடும் நபர்கள் வேறு ஆயிற்றே! ஆனால், இந்த சினிமா உலக தந்திர மந்திரங்களெல்லாம் பட ரஸிகர்களுக்குத் தெரிய நியாயம் ஏது? சண்டைக் காட்சிகள் மூலம் நக்ஷத்திர மதிப்பைப் பெற்றுள்ள நடிகர்களுள் ஒரு சிலர் மட்டும் நிஜமாகவே சண்டையிடுவதில் தேர்ச்சி பெற்றவர்கள் என்று சொன்னேனல்லவா? அத்தகையோரில் பி. எஸ். வீரப்பா ஒருவராவார். படத்தில் நீங்கள் காணும் சண்டைக் காட்சிகளிலெல்லாம் அவரே தான் பூராவாக நடித்திருக்கிறார். எனவே, "வீரப்பா" என்ற பெயர் இந்த சினிமா வீரருக்கு எவ்வளவு பொருத்தமாக இடப்பட்டிருக்கிறது, பாருங்கள்!

மேலே: "மருத நாட்டு இளவரசி" படத்தில்.

வலதுபுறம்: "ஜெனோவா" தமிழ் படத்தில்.

வீரப்பா 1914ம் வருஷத்தில், கோவை ஜில்லா காங்கயத்திற்கு இரண்டு மைல்கள் தூரத்

''காவேரி'' தமிழ்ப் படத்தில்.

திலுள்ள சிவன்மலை கிராமத்தில் பிறந்தவர். இவருடைய தகப்பனர் சின்னப்ப முதலியார் அந்த சமயம் பயிர்த்தொழிலில் ஈடுபட்டிருந்தார். இவரது தாயாரின் பெயர் பாப்பம்மாள், வீரப்பாவுடன் பிறந்தவர்கள் இரண்டு தமக்கைகளும், ஒரு தம்பியும், ஒரு தங்கையும் ஆவர்.

வீரப்பா பிறந்தபோது அந்தக் குடும்பம் மிக ஏழ்மை நிலையிலிருந்தது. கொஞ்ச காலத்திற்குப் பிறகு, 'வேறு ஊருக்காவது சென்று வளம் பெறலாம், என்ற எண்ணத்துடன் இக்குடும்பம் பொள்ளாச்சியை அடைந்தது.

பொள்ளாச்சி நகரம் தென்னிந்தியாவிலேயே பெரியதான சந்தை கூடும் ஒரு முக்கிய வியாபார ஸ்தலமாகும். பொள்ளாச்சியை அடைந்த சின்னப்ப முதலியார் வியாபாரத்தில் ஈடுபட்டார். சில வருஷங்களுக்குள் அவரது குடும்பம் நல்ல செல்வ நிலையை அடைந்து சௌக்கியமாக வாழத் தொடங்கியது. இரண்டு பெண்களுக்குப் பின்னர் பிறந்த-குடும்பத்தின் முதல் பிள்ளை என்ற காரணத்தினாலும், குடும்பம் நல்ல நிலையிலிருந்ததனாலும் பெற்றோர் வீரப்பாவை மிகச் செல்லமாக வளர்த்து வந்தனர்.

வீரப்பா ஆருவது வயதில் பள்ளியில் சேர்ந்தார். அவர் ஆருவது வகுப்பை அடைவதற்குள்ளாகவே, பொள்ளாச்சி சுற்றுப் புறங்களில் "பிளேக்" என்ற கொடிய எலி நோய் கோர தாண்டவம் புரியத் தொடங்கியது. வீரப்பா குடும்பம் உள்பட ஊர் பூராவாகக் காலியாகி விட்டது. நோய் தீர்ந்து குடும்பம் பொள்ளாச்சிக்குத் திரும்பியது. ஆனல் வீரப்பா பள்ளிக்குத் திரும்பவில்லை! இதைப் பற்றிப் பெற்றோர் கவலைப் படவில்லை. "பையனுக்கு வியாபாரம் கையிலிருக்கையில் பையன் படிக்காவிட்டால் போகிருன்" என்று பெற்றோர் அசிரத்தையாக விட்டுவிட்டனர்.

''சொர்க்கவாசல்''
படத்தில்

பொள்ளாச்சியிலும், சுற்றுப் புறங்களிலும் நடனம் நாடகங்கள், மௌனப் படங்கள் இவைகளை வீரப்பா பார்க்காமல் விட்டதில்லை. அந்தக் காலத்தில் ஸ்டன்ட் படங்களே அதிகம் வந்து கொண்டிருந்தன. அவைகளில் தான் கண்ட சண்டைக் காட்சிகளை அப்படியே—கத்திக்குப் பதில் மூங்கில் குச்சிகளை வைத்துக்கொண்டு நடத்திப் பார்ப்பார். நாடகங்களில் தாம் பார்த்த கதா பாத்திரங்களைப் போல் தாமும் நடித்துப் பழகுவார். குஸ்திச் சண்டை பயிலும் கோதாக்களுக்குச் சென்று கவனிப்பார். இப்படியாக அவர் (பெற்றோருக்குத் தெரியாமலே) வீரச் செயல் புரியும் ஒரு நடிகர் ஆகிவிடுவதற்கு தீவிரமாய் முயன்று கொண்டிருந்தார்.

"சொர்க்க வாசல்"

வீரப்பாவுக்கு வயது பதினாறாகியும் கூட, ஏதாவது ஒரு தொழிலில் ஈடுபடவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்படவில்லை. அவர் படிக்கவில்லையே; தொழில் செய்யவில்லையே என்றெல்லாம் அவரது பெற்றோர்களும் கவலைப்படவில்லை. அவர் கவலைப்பட்டதெல்லாம் அவருக்கு கல்யாணம் முடித்து வைப்பதைப் பற்றித் தான். அந்தக் கவலையைத் தீர்ப்பதற்கென ஒரு பெண்ணைப் பெற்றுவைத்துக் கொண்டிருந்தார்-சிவன்மலை தேவஸ்தான தர்ம கர்த்தா அப்பாச்சி முதலியார்; சிவன்மலையில் 1930-ம் வருஷத்தில் அந்தப் பெண்ணை வீரப்பா மணந்து கொண்டு கிரகஸ்தரானார்.

"ராஜமுக்தி"

தம் தொழில், திறமை, வீரம் இவற்றுக்கு ஏற்றபடி வீரப்பாதான் பொருத்தமான பெயரைப் பெற்றிருக்கிறார் என நினைக்கவேண்டாம். அவருக்கு வாய்த்துள்ள மனைவியும் வீரலக்ஷ்மி என்ற பொருத்தமான பெயரைப் பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது.

விவாகத்திற்குப் பிறகு வீரப்பாவின் மனதில் பொறுப்புணர்ச்சி உதயமாயிற்று. இனியும் சோம்பித் திரிவதும் சுகமளிக்காது என்று கண்டு

[தொடர்ச்சி 80ம் பக்கத்தில்]

"மருதநாட்டு இளவரசி"யில் ஸி. எஸ். டி. ஸிங் & வீரப்பா

குண்டூசியைக் கேளுங்கள்

சினிமா, நாடகம், நடனம், சங்கீதம் ஆகிய கலைகள் சம்பந்தமாக உங்களுக்குள்ள சந்தேகங்களைத் தீர்ப்பதற்கே இந்தப் பகுதி ஏற்பட்டிருக்கிறது. யாருடைய மனமும் நோகாதபடி தமாஷாகவே பதில் அளித்து, மேற்சொன்ன கலைகளைச் சீர்திருத்துவதே என்னுடைய நோக்கமாகும்.

என். டி. கிருஷ்ணன் (அகராத்தூர்)

நான் ஒரு கதையை எழுதியிருக்கிறேன். அது மிக நன்றாயிருக்கிறது. அதை எந்த ஸ்டுடியோவுக்கு அனுப்பலாம்?

"காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு தான்; கதாசிரியனுக்கும் தன் கதை பொன்கதைதான்". நீரே உம் கதையைப்பற்றி உயர்வாக நினைத்துக் கொள்ளுவதற்குப் பதில் சில நண்பர்களிடம் கொடுத்து அபிப்பிராயம் கேளும். அவர்களும் நன்றாயிருப்பதாகக் கூறினால், ஏவி. எம்., வாஹினி போன்ற ஏதாவது ஒரு பொறுப்பான ஸ்டுடியோவுக்கு அனுப்பி வையும்.

பி.ஜி. கோபாலகிருஷ்ணா (பஸவங்குடி)

சிவாஜி கணேசனின் தற்போதைய விலாஸத்தைத் தெரிவிக்கவும்,

சிவாஜி கணேசன், பெஸன்ட் ரோடு, கோபாலபுரம், சென்னை-14.

ஆர். ஆறுமுகம் (பூனா)

"பைத்தியக்காரன்" படத்தின் கதை வசனம் எழுதியவர் நீலகண்டனா? அண்ணாத்துரையா?

இருவருமல்ல; அதை எழுதியவர் சகஸ்ரநாமம்.

தணிகாசலம் (பாண்டிச்சேரி)

சிவாஜி கணேசன் சொந்தத்தில் ஒரு படக் கம்பெனியை ஆரம்பிக்கப்போவதாகக் கேள்விப்படுகிறேன். ஆரம்பித்துவிட்டாரா? அதன் விலாஸத்தைக் **கட்டாயம்** தெரிவிக்கவும்.

தற்போதைக்கு அவருக்கு இந்த எண்ணம் இருப்பதாகத் தெரியவில்லை. இருந்தபோதிலும் நீர் விலாஸத்தைக் **கட்டாயம்** தெரிவிக்கும்படி கேட்பதால் தெரிவிக்கிறேன்:—'சிவாஜி கணேசன் ஆரம்பிக்காத பில்ம் கம்பெனி, ஏதோ ஒரு தெரு, சென்னை-46.' இப்படி நீர் விலாஸம் எழுதினால் கடிதம் கட்டாயம் போய்ச் சேரும்—மேற்படிக் 'கம்பெனி'க்கு அல்ல; அநாமதேயக் கடிதக் காரியாலயத்திற்கு!

கே. பி. எழிலானந்தன் (திருப்பதி)

"ஜாதகம்" படத்தில் சூர்யகலா பாடிய பாட்டுக்கள் அவராலேயே பாடப்பட்டவையா? அல்லது இரவல் குரலா?

இரவல் குரல்தான்.

பி. வி. ஸ்ரீநிவாஸன் (பாலக்காடு)

நான் சில நக்ஷத்திரங்களுக்கு வாழ்த்துச் செய்திகள் அனுப்பலாமா?

வேண்டாம்; ரஸிகர்கள் எவ்வளவு தான் வாழ்த்தினாலும் பயன் படாது. நக்ஷத்திரங்களின் (சினிமா) வாழ்க்கை அல்பாயுசாகவே முடிவடைந்து வருகிறது!

எம். ஆர். வி. வேலாயுதப் புலவர் (பூண்டுலோயா)

சினிமாவில் சேருவதற்காக பல கம்பெனிகளுக்கு எழுதினேன். அமிருதஸரஸிலுள்ள ஒரு கம்பெனியிலிருந்து மட்டும், "புறப்பட்டு வரும்படி" கடிதம் வந்திருக்கிறது. நான் போகலாமா?

பின்னால் ஏற்படக்கூடிய ஏமாற்றங்களை நீர் தவிர்த்துக் கொள்ள விரும்பினால் முன்னதாகவே படத்தின் பெயர், படத்தின் பாஷை, டைரெக்டர், உமக்கு அளிக்கப் போகும் வேஷம், முதலியவைகளை அவர்களிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொண்டு, உமக்குத் திருப்தி ஏற்பட்டால் நீர் போகலாம்.

வி. ஏ. சுப்ரமண்யம் (தளவாகொல்லை)

''ஔவையார்'' படத்திற்கு 'பிள்ளையார்' என்று பெயர் வைத்திருக்கலாம் அல்லவா?

நீர் கொஞ்சம் சும்மாயிரும். பிறகு 'பிள்ளையார் பிடிக்க குரங்கான' கதையாகிவிடப் போகிறது!

எம். ஸ்ரீநிவாஸன் (மயிலாப்பூர்)

நாகேஸ்வர ராவ் எதுவரையில் படித்திருக்கிருர்?

அவர் படிப்பை ஆரம்பப் பாடசாலையோடு நிறுத்திவிட்டதாகத் தெரிகிறது.

ஏ. தனபால் (யாழ்ப்பாணம்)

பிரபல ''ரோமியோ-ஜூலியத்'' கதையை, நாகேஸ்வர ராவ்-பானுமதி இவர்களை நடிக்கச் செய்தும், கண்டசாலாவை பின்னணிபாடச் சொல்லியும் படமாக எடுத்தால் எப்படி யிருக்கும்?

நல்ல யோசனைதான். ''பிறந்த குழந்தைக்கே பெயர் வைக்க'' எனக்கு அவகாசமில்லை. அப்படியிருக்க நீரோ ''பிறக்காத குழந்தைக்கு ஜாதகம் பார்க்க''ச் சொல்லுகிறீர்!

எம். பொன்னையன்
(இரண்டாங்கட்டளை)

என். டி. ராமராவ், நாகேஸ்வர ராவ், பி. எஸ். வீரப்பா ஆகியோருள் கத்திச் சண்டையில் திறமை அதிகம் உடையவர் யார்?

சினிமாவுக்கு வேண்டிய அளவு கத்திச் சண்டை பயின்று நீர்கூட **நடித்து** விடலாம். அண்மைக் காட்சியில் நீர் சண்டையிடுவதாக நடிப்பதையும், தூரக் காட்சிகளில் உமக்காக வேருெருவர் நிஜமாகவே சண்டை யிடுவதையும் சேர்த்துப் படமாக்கிவிடலாம். மேற்படி மூவருள் வீரப்பா மட்டும் நிஜமாகவே கத்தி சண்டையிடக் கற்றவர்.



''காவேரி'யில் நான் நடிக்கவேண்டிய காட்சிகள் அத்தனையும் இதுபோல் பஞ்சணைக் காட்சிகளாகவே இருந்துவிட்டால் மிக சொகுசாய்த் தானிருக்கும்'' என்று லலிதா சந்தோஷ மடைகிருரோ, என்னவோ?

இ. எல். எம். எம். ரஹீம்
(அக்கரைப்பற்று, இலங்கை)

எனக்கு சினிமாவில் சேர வேண்டுமென்று அவாத் துடிக்கிறது. அதற்கான யோக்கிய தாம்சங்களும் எனக்கு உள்ளன சேருவது எப்படி?

இப்பொழுது சினிமாவில் நடிப்பவர்களெல்லாம் ஏதேதோ உபாயங்கள் மூலம் சினிமா உலகில் நுழைந்தவர்களே. ஆனல் ஒருவர் கைக்கொண்ட உபாயம் இன்னெருவர் விஷயத்திலும் பலன் அளிக்கும் என்று சொல்லுவதற்கில்லை. ஆதலால் உமக்குத் தோன்றும் ஏதோ உபாயங்களுடன் இடைவிடாமல் முயற்சி செய்து பாரும்.

டி. எஸ். துரைசிங் (கொழும்பு-14)

பல வருஷங்களுக்கு முன்பே ''கோவலன்'', ''சத்தியவான் சாவித்திரி'' இவை படமாக வெளிவந்திருக்கின்றன வல்லவா?

ஒவ்வொன்றும் இரண்டு மூன்று படங்களாகக்கூட வந்திருக்கிறது என்பது உமக்குத் தெரியாதோ?

வெ. பிச்சைக்கண்ணு (புதுத்தெரு)

பானுமதி, கண்ணாம்பா, எம். சரோஜா—ஆகிய மூவருள் பேச்சுத் திறமையில் சிறந்தவர் யார்?

பானுமதி சாதாரணமாகப் பேசமாட்டார்; ஆனல் பேசப் பிடித்துவிட்டாலோ லேசில் நிறுத்தமாட்டார். கண்ணாம்பா சிலருடன் எண்ணிப் பேசுவார். எம். சரோஜா அக்கா (எம். லக்ஷமி பிரபா) துணையிருந்தால் தைரியமாய் பேசுவர். இவை நேர் அநுபவம். ஆனல்,படங்களிலோ ஆணித்தரமாகப் பேசுவதில் கண்ணாம்பாவும், அழகாகப் பேசுவதில் பானுமதியும், 'வெடுக்' கென்று பேசுவதில் எம். சரோஜாவும் தேர்ந்தவர்கள்.

எஸ். மாணிக்கம் (நாவலபிட்டிய)

எம். எல். வஸந்தகுமாரிக்கு எவ்வளவு வருஷங்களுக்கு முன் திருமணம் நடந்தது? யாரை மணந்து கொண்டிருக்கிருர்? குழந்தைகள் உண்டா?

சினிமா நடிகர் ஆவதற்காக சென்னைக்கு வந்து, விகட வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தியை சுமார் நான்கு வருஷங்களுக்கு முன் வஸந்தகுமாரி கணவராக்கிக்கொண்டார். இரவல் குரல் கொடுப்பதில் பிரசித்திபெற்ற எம். எல். வஸந்தகுமாரி 'சொந்தக்குரல்கள்' இரண்டைப் பெற்றிருக்கிருர்!

எஸ். கே. திலிப்குமார் (சிங்கப்பூர்)

விஜயாவின் அடுத்த படம் என்ன?

அவர்கள் "மிஸ் அம்மா" என்ற படத்தை தெலுங்கு-தமிழ் இரு பாஷைகளிலும் தயாரித்துக் கொண்டிருக்கிருர்கள்.

துரைசாமி (புதுடில்லி)

பிரபல வைஜயந்திமாலாவுக்குப் பாடத் தெரியுமா?

தெரியாது என்று சொல்லி விடுவதற்கில்லை. ஒரு இசைத் தட்டில்கூட மிக சிரமத்துடன் பாடி யிருக்கிருரே! அதை நீர் கேட்டீரானல், பிறகு "வைஜயந்தி படங்களில் ஆடட்டும், பாடவேண்டாம்" என்று நிச்சயம் கூறிவிடுவீர்.

இந்த பிரம்மாண்டமான நூதன நடனக் காட்சியை ஏவி. எம். வெளியிட்டுள்ள "பெண்" தமிழ்ப் படத்தில் நீங்கள் பார்க்கலாம்.



சமீபத்தில் வெளி வந்து வெற்றிகரமாய் ஓடிக் கொண்டிருக்கும் 'பெண்' படத்தில் வைஜயந்திமாலாவின பலவித நடனங்கள் இடம் பெற்றுள்ளன



கே ஆர். ஆர்எம். ராமசாமி(வலயப்பேட்டை)

திரு. வி. க. நாடக மன்றத்தின் விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

நெ. 7 பாலு முதலி தெரு, வடக்கு தியாகராய நகர், சென்னை-17 —என்று எழுதும்.

பி. ராமலிங்கம் (பாண்டிச்சேரி)

கே. பி. சுந்தராம்பாளின் விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

"கே. பி. சுந்தராம்பாள், கொடுமுடி (தெ. இ. ர)" என்ற விலாஸத்தை முன்பே தெரிவித்திருக்கிறேன்.

வி. ஸி. லம்போதரன் (திருத்துறைப் பூண்டி)

சாவித்திரியின் விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

11, வைத்தியராமன் தெரு, தியாகராயநகர், சென்னை—17.

ஆர். வெங்கட்டராமன் (கோமல்)

டி. எஸ். பாலய்யா சொந்தத்தில் படம் எடுக்கப் போவதாகக் கேள்விப்படுகிறேன். உண்மைதானு?

அவர் முன்பு இதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தது உண்மைதான். ஆனல் படஉலக நிலைமை தற்போது சரியாயில்லாததால் தம் முயற்சியை ஒத்திப் போட்டிருக்கிருர்.

* * *

ஏவி. எம்.மின் "செல்லப்பிள்ளை" என்ன வாயிற்று? படம் வெளிவருமா?

"பெண்"ணை வெளியே அனுப்பி விட்டதால் இனி "பிள்ளை" விஷயத்தைக் கவனிப்பார் ஏவி. எம்.

டி. ஆர். ராமதாஸ் (ஈரோடு)

கோட்னிஸ், கே. அருணசலம் இவர்கள் டைரெக்ஷனில் வெளிவரப் போவதாக விளம்பரப்படுத்தப்பட்ட "ஜெய் ஹிந்த்"(நேதாஜி வாழ்க்கை) படம் என்னவாயிற்று?

'நேதாஜி இறக்கவில்லை'! என்று இன்னமும்கூட வாதிப்பவர்கள் உண்டு. ஆனல் இப்படத் தயாரிப்பு பற்றிய எண்ணங்கள் மண்ணுகிவிட்டதைப் பற்றி அபிப்பிராய பேதமே யிராது.

ஏ. வெங்கடேசன் (சேலம்)

நக்ஷத்திரங்களை நான் சந்தித்துப் போட்டோ எடுத்துக்கொள்ளுவதற்கு அனுமதிப்பார்களா?

நம் நக்ஷத்திரங்கள் மீது பழி தீர்த்துக் கொள்ளுவதற்கு உமக்கு வேறு வழி தோன்றவில்லை போலிருக்கிறது!

மு. அப்துல்வாஹித்(குருவாங்,மலாயா)

டி. ஆர். ராஜகுமாரியின் விலாஸத்தை தெரிவிக்கவும்.

டி. ஆர். ராஜகுமாரி, 'கன்னிகா குமாரி பவனம்', ஹபிபுல்லா ரோடு, சென்னை-17.—என்று எழுதும்.



என். ஜெகன்னாதனின் டைரெக்ஷனில் தயாராகிவரும் வாஹினியில் ''வைரமாலை'' தமிழ்ப் படத்தில் மனோஹரும், வி. எஸ். ராகவனும் தோன்றும் ஒரு காட்சி இது.

கே. சபாரத்தினம் (திருகோணமலை)

நான் ஒரு கதை எழுதி அனுப்பினால் அதைப் பட முதலாளிகள் படமாகத் தயாரிப்பார்களா?

அடடா! நீர் கதை எழுத நினைத்ததே ஒரு பெரும் கதையாக இருக்கும் போலிருக்கிறதே!

எஸ். மாணிக்கம் (சென்னை)

எம். ஜி. ராமச்சந்திரனின் வாழ்க்கை வர்ணனையை நீங்கள் ஏன் 'குண்டுசி'யில் வெளியிடவில்லை?

நீர் கூறுவது தவறு. முன்பே அவர் 'வாழ்க்கை வர்ணனையை ''குண்டூசி''யில் வெளியிட்டிருக்கிறேன். அதில் ''நான் ஒரு—கதர் அணியும்—தீவிர காங்கிரஸ் வாதி'' என்று எம். ஜி. ஆர். கூறியதைக் கூடக் குறிப்பிட்டிருக்கிறேன்.

என். திருவேங்கடம் (நந்திவனம்)

பி. பானுமதி, வி. என். ஜானகி, எம். சரோஜா, ஸி. ஆர். ராஜகுமாரி ஆகிய நால்வரில் வாள் பயிற்சியில் தேர்ந்தவர் யார்?

இவர்கள் வாள் பயிற்சியில் தேர்ந்தவர்களல்ல; ஆனால், வேல் பயிற்சியிலோ மிகத் தேர்ந்தவர்கள். பெரிய வீராதி வீரர்களெல்லாம் இவர்களது வேல் விழிக்கு இரையாகி யிருக்கின்றனர்!

வெ. அ. சுப்ரமண்யம் (தலைவாக்கொலை, இலங்கை)

நம் நடிகைகள் ஆண்கள் மாதிரி உடை அணிந்துகொண்டு சில சமயம் நடிக்கிறார்களே. ஏன். அது மாதிரி எப்பொழுதுமே அவர்கள் உடை அணிந்துகொள்ளுவதில்லை?

அவர்கள் ஆண் உடைகளை அணிந்து கொண்டு, தங்களுக்கு சமூகத்தில் அளிக்கப்படும் தனி மதிப்பை இழக்க விரும்புவார்களா?

கு. அ. ராஜாமணி (கட்டகுளம்)

குமாரி வனஜாவின் வாழ்க்கை வரலாற்றைத் தெரிவிக்கவும்.

மன்னிக்கவும்; சென்ற அக்டோபரில் வெளிவந்த ''குண்டூசி'' தீபாவளி மலரை யாரிடமாவது வாங்கிப் பாரும். நீர் கேட்கும் வனஜாவின் வாழ்க்கை வர்ணனை அதில் வெளி வந்திருக்கிறது.

சிவலிங்கம் (வத்தளை)

என் நண்பர் பத்மினியை மணம் செய்து கொள்ள வேண்டும் என்பதற்காக உண்ணு விரதம் இருந்து வருகிருர். இதற்கு என்ன செய்யலாம்?

சரிதான்; பத்மினி வரவர பருத்துக் கொண்டு வருவதன் கா ர ண ம் இப் பொழுதுதான் தெரிகிறது! உம் நண்பர் உண்ணுவிரதம் இருந்துகொண்டு மிச்ச மாகும் 'அரிசியை பத்மினிக்கு அனுப்பி வருகிருர் போலிருக்கிறது!

எஸ். கிருஷ்ணன் (பங்களூர்)

கே. எல். வி. வஸந்தா ஏன் படங்களில் நடிப்பதை நிறுத்திவிட்டார்?

அவருக்குக் காது இருக்கிறதா இல் லையா என்று ரஸிகர்கள் தொடங்கிய சர்ச்சைக்குப் பயந்தென்னவோ அவர் படங்களில் நடிப்பதை நிறுத்தவில்லை. மாடர்ன் தியேட்டர்ஸின் அசல் ராணி யாக விளங்கும்போது அவர் ஏன் நடிக்க வேண்டும்?

எஸ். இ. முகம்மதுஜக்கிரியா (ஆவூர்)

"மனோஹரா" படத்தில் சிவாஜி கணேச னுக்குப் பதில் எம். ஜி. ராமச்சந்திரனை நடிக் கச் செய்திருந்தால் படம் மேலும் நன்ருக இருக்கும் என்று நான் கருதுகிறேன். உங் கள் அபிப்பிராயம் என்ன?

உம் அபிப்பிராயத்தை நான் ஆதரிப் பதிற்கில்லை. "மனோஹரா"வில் கணே சன் குறைகூற முடியாதபடி நன்ரு கவே நடித்திருக்கிருர்.

எஸ். சபாரத்னம் (கல்முனை)

குமாரி துளஸி நடிக்கும் "புது வாழ்வு" படம் எப்பொழுது வெளிவரும்?

இப்படம் இப்பொழுது துரிதமாய் தயாராகிக் கொண்டிருக்கிறது. ஆனல், எப்பொழுது வெளிவரும் என்று சொல்லுவதற்கில்லை.

பி. வி. வி. சாமி (பத்தனை, இலங்கை)

"பெண்களுக்கும் ஆண்கள்தான் மேக்கப் செய்கிருர்கள்" என்று "குண்டுசி" மூலம் அறிய, அவமானமாக இருக்கிறது. உம் அபிப்பிராயம் என்ன?

இதற்கே நீர் அவமானப்படுவதா யிருந்தால், இதையும்விட மோசமான பல விஷயங்கள் சினிமா உலகில் நிரம்பி யிருக்கின்றனவே, அவற்றை யெல்லாம் அறிந்தால் நீர் தற்கொலையே புரிந்து கொண்டு விடுவீர் போலிருக்கிறதே!

ஜே. சக்ரவர்த்தி (வேதாரண்யம்)

அநேக அன்பர்கள் சினிமாவில் சேரு வதற்காக உம்மிடம் அடிக்கடி யோசனை கேட்கிருர்களே. இதை யுத்தேசித்து நீரே ஒரு பட முதலாளியாகவோ, டைரெக்டரா கவோ ஆகிவிட்டால் என்ன?

ஆகலாம்; ஆனல் ஒரு சில அன்பர் களின் திருப்தியை முன்னிட்டு ஒரே யடியாய் ரஸிகர்களின் அதிருப்தியைச் சம்பாதித்துக் கொள்ளுவதற்கான யோசனையல்லவா இது! மேலும், எனக்குப் பொருத்தமானது பத்திரி கைத் தொழிலே என்பது எனக்குத் தெரியும்.

"மறுமலர்ச்சி" என்ற தமிழ்ப் படத்தில் ஸ்ரீராம் மலர்ச்சியின்றித் தோன்றுவது காதலில் ஏற்பட்ட ஏமாற்றத்தினலோ?

பில்ம் பெடரேஷன் கமிட்டி

படத் தொழில் பிரச்னைகளை விவாதித்தது

ஜெமினி ஸ்டூடியோவில், பில்ம் பெடரேஷன் தலைவர் எஸ். எஸ். வாஸன் தலைமையில், பில்ம் பெடரேஷன் கமிட்டிக் கூட்டம் சென்ற மாதம் 14, 15 தேதிகளில் கூடி, படத்தொழிலை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளைப்பற்றி ஆராய்ந்தது. குறிப்பாக, படத்தொழில் விசாரணைக் கமிட்டி சிபார்சுகள் மீது சர்க்கார் முடிவுகள் பற்றி விவாதிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்திற்கு பம்பாய், கல்கத்தா, பிரதிநிதிகளும் வந்திருந்தனர். இவர்களைத் தவிர, படத் தொழிலின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் விசேஷ அழைப்பின் பேரில் வந்திருந்தார்கள். விசாரணைக் கமிட்டி சிபார்சு செய்துள்ளபடி படத் தொழிலைக் கட்டுப்படுத்தும் அதிகாரங்களுடன் கூடியதாய் ஒரு சட்ட பூர்வமான பில்ம் கவுன்ஸில் நிறுவும் யோசனையை சர்க்கார் கைவிட்டதை கமிட்டி வரவேற்றது. சர்க்கார் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் ஒரு புரொடெக்ஷன் பீரோ, பில்ம் இன்ஸ்டிட்யூட், தணிக்கை ஸ்தாபனம் ஆகியவைகளுடன் கூடிய ஒரு தேசிய பில்ம் போர்டு நிறுவ உத்தேசித்திருப்பதை வரவேற்று இந்த ஸ்தாபனம் எல்லா சந்தர்ப்பங்களிலும் ஒரு ஆலோசனை ஸ்தாபனமாக இருந்து வருவதைப் பற்றித் தங்களுக்கு ஆட்சேபனை இல்லை யென்றும், அந்த ஸ்தாபனங்களை ஏற்படுத்துவதற்காக தொழிலின் மீது மேற்கொண்டும் சுமை ஏற்றக் கூடாதென்றும் கமிட்டி தெரிவித்தது. ஆலோசனை கூறும் ரீதியிலுள்ள அலுவல்களை தணிக்கை ஸ்தாபனத்துடன் ஒரே அதிகாரத்தின் கீழ் வைப்பது உசிதமல்ல வென்றும் கமிட்டி கருதியது. மேலும் படத் தொழிலைச் சேர்ந்த தொழில் நுணுக்கச் சிப்பந்திகளிடையே இப்போது நிலவி வரும் வேலையில்லாத் திண்டாட்டம் சமயத்தில் ஒரு பில்ம் இன்ஸ்டிடியூட்டுக்கு அவசியமே இல்லை என்றும் கமிட்டி கருதியது.

பிலிம் நிதிக் கார்ப்பரேஷன் யோசனையை சர்க்கார் கைவிட்டது சம்பந்தமாக அது இயங்கும் விதம் பற்றி விசாரணைக் கமிட்டி குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் விரும்பத் தக்கதல்ல வென்றும், தொழிலின் நிதி நிலைமையை ஸ்திரப்படுத்த சர்க்கார் உதவவேண்டியது அவசிய மென்றும், எனவே சர்க்காரும் தொழிலும் பரஸ்பரம் ஏற்படக் கூடிய நிபந்தனைகளின் கீழ், கூடிய சீக்கிரம் ஒரு நிதிக் கார்ப்பரேஷனை நிறுவுவது நல்லதென்றும் கமிட்டி கருதியது.

நாட்டில் தியேட்டர்களை (திறந்த வெளி தியேட்டர், டூரிங் சினிமாக்கள் உள்பட) பெருக்க இந்திய சர்க்கார் எல்லா ராஜ்யங்களிலும் தீவிர நடவடிக்கை எடுக்கச் செய்ய வேண்டும் என்று கமிட்டி வற்புறுத்தியது.

கட்டாயமாக அங்கீகரிக்கப் பட்ட படங்களை'க் காட்டவேண்டு மென்பதற்காகவும், அவைகளுக்குப் கட்டணம் வசூலிப்பதற்கும் தனது ஆட்சேபத்தை கமிட்டி வலியுறுத்தியது.

சிறந்த படங்களுக்கு சர்க்கார் பரிசு வழங்கும் திட்டத்தை கமிட்டி வரவேற்றது. ஆனால், படத் தொழிலில் உள்ளவர்களே மற்றவர் படங்களை மதிப்பிடச் செய்வது விரும்பத்தக்கதல்ல'வென்று கமிட்டி அபிப்பிராயப்பட்டது. 'பரிசுத் திட்டத்துக்காக படங்களைப் பதிவு செய்யச் சொல்வது அனாவசியம். தணிக்கை போர்டுகளைக் கொண்டே பரிசுக்குத் தகுதியான படங்களின் பூர்வாங்க ஜாபிதாவை தயாரிக்கச் சொல்லலாம்' என்று கமிட்டி யோசனை கூறிற்று.

"நவ சினிமா"

கொழும்புவில் சென்ற மாதம் புதிதாக ஒரு தியேட்டர் ஆரம்பமாகியுள்ளது. "நவ சினிமா" என்ற இத் தியேட்டரை சென்ற மாதம் 25ம் தேதி, நகர மேயர் டி. ருத்ரா ஆரம்பித்துவைத்தார்.

தமிழ் நாடெங்கும் இப்பொழுது
நடைபெற்றுவரும் '' மாங்கல்யம் ''
தமிழ்ப் படத்தில் பி. எஸ். சரோஜா.



பி. எஸ். வீரப்பா



நீங்கள்

இன்று

உங்கள் பற்களை

மக்ளீன்

செய்தீர்களா?

ஆம், அதன் இரகசியம் இதுதான் ...

பற்களைத் தவறாமல் சுத்தம் செய்து வருவதால் அவை நெடு நாளைக்கு ஆரோக்யமாக இருக்கின்றன என்பதைத் தெளிவாக்கி விடுவோம். பிரதி தினமும், இரு வேளையும் மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை உபயோகிப்பதால், அதிக வெண்மையான பற்களும், உறுதியான ஈறுகளும், நறுமணமுள்ள சுவாசமும் நிச்சயமாக உண்டாகின்றன. இவ்வித்தியாசத்தை நீங்களே காணலாம். மக்ளீன்ஸிலுள்ள ஒரு ப்ரத்யேகமான பொருள் பற்களின் மேல் படிந்துள்ள மங்கலான பூச்சை மாற்றி பற்களின் மேல் இயற்கையாக ஒளிரும் வெண்மையை வெளிக்கொணர்கிறது.

"... என்னைப்
போலவே தங்
களது பற்களை
ப்பற்றிப் பெரு
மைப் படுபவர்
களுக்கு மக்ளீன்
ஸ் பற்பசையை
யே சிபார்சு
செய்கிறேன்"

க்ளோரோபில் சேர்ந்தும் கிடைக்கும்.

MTY-38-TAM.

தென்னிந்தியப் பட உலகிலே, ஏவி. எம்.மின் "அந்த நாள்" படம் ஒரு மைல்-கல் என்று சொன்னால் மிகையாகாது. டஜன் கணக்கிலே நடனமும், பாட்டுகளும் உள்ள படங்களையே பார்த்துப் பழக்கப்பட்ட ரஸிகர்களுக்கு துணிந்து புதிய முறையில் ஒரு படத்தை அறிமுகம் செய்தாரென்றால் அவரது துணிச்சலைப் பாராட்ட வேண்டியது தான். ஆனால், இதில் ஒரு விஷயம் இருக்கிறது. பாட்டே இல்லாது இந்தியாவில் வெளிவந்த முதல் பேசும் படம் இது தான் என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பல பத்திரிகைகள் உள்பட—பலர் வெளிப்படையாகக் கூறியும் வருகிறார்கள். இது ஒரு தவறான அபிப்பிராயமாகும். தமிழ் நாட்டில் வேண்டுமானால் இப்படத்தை முதல் முயற்சி என்று கூறி மார் தட்டிக் கொள்ளலாம்; அவ்வளவுதான்!

* * *

ஒரு பாட்டு கூட இல்லாமல் முதன் முதல் ஒரு படம் தயாரித்த பெருமை பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்ததாகும். "ஜேய் ஸ்வதேஷ்" என்ற ஒரு ஸ்டண்ட் படத்தை பாட்டே இல்லாமல் ஜே. பி. எச். வாடியா தயாரித்து வெளியிட்டிருக்கிறார். இப் படம் வெளியிடப் பட்டது சென்ற யுத்த காலத்திற்கு முன்பேயாகும். இது தவிர, வங்காள பாஷையிலும் பாட்டே இல்லாத பல படங்கள் வெளியாகி யுள்ளன. அவைகளில் சில பிரமாத வெற்றியும் கூடப் பெற்றிருக்கின்றன. ராஜ்கபூர் தயாரித்து வெளியிட்ட "பூட் பாலிஷ்" படத்தைக் கூட, ஒரு பாட்டு கூட இல்லாமல் தயாரித்து வெளியிடுவதெனத் தான் முதலில் தீர்மானம் செய்து வைத்திருந்தார். ஆனால் அந்தத் தீர்மானம் ஏனோ தெரியவில்லை காற்றோடு போய் பாட்டோடு வெளிவந்து விட்டது.

அது அப்படியிருக்க, "அந்த நாள்" படம் தயாராகி வெளிவந்ததே ஒரு தமாஷ் தான்! ஏவி. எம். குறைந்த கால அளவில், குறைந்த செலவில், நக்ஷத்திரமே இல்லாத ஒரு வெற்றிப் படத்தைத் தயாரிக்க முடியும் என்பதை நிரூபிக்கவே முதலில் இந்த முயற்சியில் இறங்கினார். அவரது ஜப்பான் விஜயமே இந்த நல்ல எண்ணத்தை அவருக்கு ஏற்படுத்தியது என்று பெரும்பாலோர் கருதுவதிலும் ஓரளவு உண்மை இருக்கவே செய்கிறது. கூடவே பாட்டோ, நடனமோ இல்லாத ஒரு படத்தை ஜனங்கள் ரஸிக்கும்படி செய்ய முடியும் என்பதையும் ஸ்திரப்படுத்தத் தீர்மானித்தார் அவர். நக்ஷத்திர நடிகர்களே வேண்டாம் என்ற அபிப்பிராயத்தில் தான் கதாநாயகனை நடிக்க வெங்கட்ராமன் என்ற ஒரு இளைஞர் கல்கத்தாவிலிருந்து வரவழைக்கப் பட்டார். ஆனால், நடந்தது என்ன? வெங்கட்ராமனைக் கதாநாயகனைக் கொண்டு படம் ஓரளவுக்குத் தயாரிக்கப்பட்ட பின்னர் அந்த யோசனை கைவிடப்பட்டது. சிவாஜி கணேசன் 'ஒரு நாள் ஷூட்டிங்கிற்கு இன்ன கூலி' என்று புது மாதிரியாக பேரம் பேசப்பட்டு, ஒப்பந்தம் செய்யப்பட்டார். கதாநாயகனாக வந்த வெங்கட்ராமன் போலீஸ் இன்ஸ்பெக்டராக நடிப்பதுடன் திருப்தி அடைய வேண்டியதாகி விட்டது.

* * *

'நக்ஷத்திரமே வேண்டாம்' என்ற கொள்கை போன இடம் தெரியவில்லை. பல படங்களில் ஒரே சமயத்தில் நடித்து வந்த சிவாஜி கணேசனைக் கொண்டு படத்தை நாற்பதே நாட்களில் முடிக்க நினைத்தால் அது முடியக்கூடிய காரியமா? ஆகவே, போட்ட திட்டப்படி எதுவும் நடக்கவில்லை. குறிப்பிட்ட காலத்திற்குள் படத்தை முடிக்க முடியாமல் போனதுடன், தயாரிப்புச் செலவும் முதலில் போட்ட 'பட்ஜெட்' எல்லையைத் தாண்டி விட்டது. மற்றொரு வேடிக்கை, கடைசி வரை "ஒரு நாள்" என்று அடிபட்டு வந்த படத்தின் பெயர் இறுதியில் "அந்த நாள்" ஆக மாறிவிட்டது.

"அந்த நாள்" வெளி வந்து, தமிழ்ப் பட உலகில் ஒரு சலசலப்பை—சிலரிடை முணுமுணுப்பை—ஏற்படுத்தியிருக்கிறது" என்பது உண்மை. ஏவி. எம்.மைப் பின்பற்றி மற்ற பட முதலாளிகளும் பாட்டு, நடனம் இவை இல்லாமல் படத்தைத் தயாரிக்கத் தொடங்கி விட்டால் நாம் என்ன பண்ணுவது?" என்ற காலக்ஷேபக் கவலை சிலருக்கு ஏற்பட்டிருக்கிறது. முக்கியமாக நடன, சங்கீத டைரெக்டர்களுக்கு இது ஒரு பேரிடியாக இருக்கக் கூடும். எல்லோருமே 'அந்த நாளை'த் தேடிக்கொண்டு போய் விட்டால், தங்கள் பிழைப்பு என்ன ஆவது? பிறகு தங்களைத் தேடி வருவது யார்?—இந்த பயம் அவர்களுக்கு ஏற்படுவது சகஜம்தானே!

* * *

இவ்விருவரையும் தவிர, அந்த நாள் நிலை வந்துவிடக் கூடாதே என்று பயப்படுகிறவர்கள் வேறு சிலரும் இருக்கக் கூடும். தங்களது நடனத் திறமை ஒன்றையே மூலதனமாகக் கொண்டு பட உலகில் ஸ்திரமாக இருந்து வரும் சில நடிகைகளுக்கும் அஸ்தியில் ஜுரம் ஏற்பட்டிருக்கலாம். நடனம் இல்லாத படம் தான் தயாரிப்பது என்று' ஆகிவிட்டால், பிறகு அவர்களை எந்தப் பட முதலாளி சீண்டப் போகிறார்? ஸபாக்களையும், கல்யாணக் கச்சேரிகளையும் அவர்கள் தஞ்சம் புக வேண்டியது தான். அந்த நிலை வராதிருக்க வேண்டுமே எனப் பிரார்த்தனை செய்யக் கூடியவர்களில் குரல் தானம் செய்யும் பின்னணிப் பாடகர், பாடகிகளையும் சேர்த்துக் கொள்ளலாம். பாட்டு இல்லையென்றால் அவர்கள் பாட்டுக்கு நிர்விசாரமாய் இருக்க முடியுமா? பாவம், அவர்கள் பாட்டு இரவல் கொடுக்கும் பிழைப்பில் மண் விழுந்து விட்டால், அவர்கள் சாப்பாட்டு விஷயம் என்ன ஆவது?

* * *

ஆகவே, "அந்த நாள்" படத்தைப் பாராட்டி வரவேற்கப் பெரும்பாலோர் இருந்தாலும், அதைக் கண்டிக்கும் ஒரு கோஷ்டியாரும் இல்லாது போக மாட்டார்கள் என்று ஆகிறது. அப்படி ஒரு நிலை ஏற்பட்டு விட்டால் என்ன ஆகும் என்று தமாஷாக நினைத்துப் பார்ப்போம். அப்படிப்பட்டவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு சங்கம் ஏற்படுத்திக் கொள்ளக்கூடும். சங்கத்தின் வாயிலாக இந்த மாதிரிப் படங்களைக் கண்டித்து தீர்மானங்கள் நிறைவேற்றக் கூடும். அதற்கும் பலன் ஏற்படா விட்டால் படத் தயாரிப்புக் கம்பெனிகளுக்கு முன்னாலும், ஸ்டுடியோக்களின் வாசலிலும் கோஷ்டியாக சத்யாக்கிரஹம்,



வைத்தியா பில்ம்ஸார் தயாரித்துவரும் "வைரமாலை" தமிழ்ப் படத்தில் மோகனாக நடிக்கிறார் இந்தப் புது முகம் மாலி.

அவள் வந்து பார்த்தாள். எனக்கு அழகான ஒரு ரோஜாப்பூ மாலை கொண்டு வந்தாள். என்னை ''சகோதரி'' என்று வாய் நிறையக் கூப்பிட்டாள். என் கண்களில் நீர் துளித்துவிட்டது; ஆம், ஆனந்தக் கண்ணீர்தான். என் விசிறிகள் என்மீது வைக்கும் பிரேமைக்கு என்றும் நான் நன்றியுள்ளவளாக இருக்கக் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

எனது மற்றொரு நினைவு, தொலைவில் இருக்கும், நான் பார்த்திராத ராவல்பிண்டி நகரமாகும். ராவல்பிண்டி என் தந்தை வாழ்ந்த ஊராகும். அதைப் பார்க்க வேண்டுமென்பது என் நெடுநாளைய அவா. தந்தைதான் மரணமடைந்துவிட்டார். நான் இதுவரை பார்த்தேயிராத—உயிரோடு இருக்கும் என் பாட்டனாரையாவது பார்க்க விரும்புகிறேன். எப்படியாவது ஒரு முறை பிக்கானீர் போய் அவரைப் பார்த்துவர எண்ணியிருக்கிறேன்.

உறவினர்களைப் பற்றிச் சொல்லப் போனால், நான் உறவினர்களை எப்பொழுதும் அதிகமாக நேசிக்கிறேன். சொல்லப் போனால், பட உலகப் பிரமுகர்களுடன் பழகுவதைவிட வீட்டில் என் மருமான், மருமாள்களின் மத்தியில் மன நிம்மதி அதிகம் காண்கிறேன். சென்ற வருஷம் ஜூன் மாதம் முதல் தேதி அதிகாலையில் நான் கண் விழித்த போது என்னைச் சுற்றிலும் அவர்கள், பூமாலை போன்று, ஆளுக்கொரு பரிசுகளுடன் நின்றுகொண்டு, ''பபூ! (அவர்கள் என்னை அழைப்பது இப்படித்தான்!) எழுந்தரு!'' என்று தூக்கத்திலிருந்து எழுப்பினார்கள். அப்பொழுதுதான், அதனால்தான் எனக்கு அன்று பிறந்த நாள் என்பது தெரிந்தது.

ஒரு சினிமா நக்ஷத்திரத்தின் வாழ்க்கையைப்பற்றி வெளி உலகம் என்ன நினைக்கிறதோ, அது எனக்குத் தெரியாது. ஒருக்கால் அவர்கள் எங்கள் வாழ்க்கை, 'மலர்ப் படுக்கை' என நினைக்கக்கூடும். ஆனால் நான் சொல்கிறேன். என் வாழ்க்கை மிகவும் சிரமமானதாக, கஷ்டங்கள் நிறைந்ததாக, ஒரு வேலைக்காரியின் வாழ்க்கையைப் போலவே இருந்திருக்கிறது. நான் இருப்பதனால் வெளி உலகத்திற்கு ஏதாவது பலன் உண்டோ என்னவோ தெரியாது; எனக்கு எந்தவிதப் பலனுமே யில்லை. நான் பொருளாதார நிலை குறித்துச் சொல்லவில்லை. வாழ்க்கைக்கு அதைவிட அவசியமான திருப்தி, மகிழ்ச்சி, சிநேகம், ஆகிய (இன்றைய உலகில் அபூர்வமாகிவிட்ட)வைகளைச் சொல்லுகிறேன்.

நான் எப்பொழுதுமே நினைக்கிறேன். எனது வாழ்க்கை ஒரு பெரிய போராட்டம் என்று; ஏதாவது ஒன்றில்லாவிட்டால் ஒன்றுடன் போராட்டம். நான் இந்தத் துறையில் புகுந்த சமயம், வெளியிலுள்ளவர்கள் சினிமாத் தொழிலிலுள்ளவர்களை துச்சமாக எண்ணியதை நினைத்து, அந்த எண்ணத்துடன் போராடினேன். ஒரு சமயம் எனக்கு தேக அசௌக்கியம் ஏற்பட்டு, தேக ஆரோக்கியத்திற்காக பஞ்சாக்னி என்ற மலைப் பிரதேசத்திற்குப் போனேன். அங்கு பல நாட்கள் தனிமையுடன் போராடினேன். நான் ஆயிரக்கணக்கான பேர்களுக்கு சிநேகிதமாகி விட்டேன். ஆனால், 'நர்கீஸ் என்ற தனி ஒருத்திக்காகவா, அல்லது சினிமா நக்ஷத்திரம் நர்கீஸ் என்பதற்காகவா என்னுடன் நட்பாயிருக்கிறார்கள்' என்று அடிக்கடி நான் ஆச்சரியப்படுவது உண்டு. இந்த எண்ணம் அடிக்கடி தோன்றி, என் மனம் கஷ்டப்படுவது உண்டு. நீங்கள் ஒரு சினிமா நக்ஷத்திரமாகவோ, அல்லது பிரபலஸ்தராகவோ இருக்கும் போது நட்பின் உள் ஆழத்தை அறிவது மிகவும் கஷ்டம். நான் மட்டும் சினிமா நக்ஷத்திரமாக இல்லாமலிருந்தால் ஒரு சிலரே என்னுடைய நட்பை விரும்பி யிருக்கக்கூடும். இந்த எண்ணம்தான் அடிக்கடி ஏற்பட்டு என் மனதைக் குழப்பும். ஆரம்ப காலத்திலிருந்து இத்துறையில் எனக்குக் கை கொடுத்து உதவி, எனது அந்தரங்கமான, தூய சிந்தனையுள்ள நண்பர்களைக் குறித்து அல்ல நான் கூறுவது. அவர்கள் அன்பும் ஆதரவும் மட்டும் இல்லாமலிருந்தால் என் வாழ்க்கை அடியோடு சூன்யமாகி யிருக்கக்கூடும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, நான் என்னுடனேயே போராடி யிருக்கிறேன். கடந்த இருபத்தி ஐந்து ஆண்டுகளில் நாம் அதிகமாக எதுவும் செய்துவிடவில்லை என்றே நான் நினைக்கிறேன். எனது பட உலக வாழ்க்கையில்கூட மக்கள் நினைவில் நன்றாகப் பதிந்திருக்கும் வகையில் [தொடர்ச்சி 62-ம் பக்கத்தில்]

சங்கமம்

"மாயாவி"

நீங்கள் படித்தது :

நம் கதாநாயகி நர்மதாவே தன் சோகக்கதையைக் கூறுகிருள். கொங்கணத்து கடற்கரை கிராமம் ஒன்றில், மீன் வியாபாரம் செய்து வந்த ஒருவரின் மகள் அவள். அவளுக்குப் பதினறு வயது பெரியவனை தமையன் காசிநாத்தும், அத்தை மகன் ரங்காராமும், தாயாரும் ஒன்ருக வசித்துவருகின்றனர்.

சிறு பெண்ணுக இருந்தபோது ஒரு நாள் நர்மதா மின்னல் தாக்குதலால் இரு கண்களேயும் இழக்கிருள். இதைத் தொடர்ந்து அவள் தகப்பனர் படகு மூழ்கி சமுத்திரத்திற்கு இறையாகிருர். அப்பா இறந்ததும் காசிநாத், தாம்லே என்ற பணக்காரரின் புத்ரி சரயூவை மணந்துகொண்டு வேட்டகத்தோடு ரத்னகிரியில் தங்கிவிடுகிருன். நாளாவட்டத்தில் அவனுக்கும், தாயார், தங்கை, அத்தான் இவர்களுக்கும் உறவு அறவே ஒழிந்துவிடுகிறது. கடிதப் போக்குவரத்து கூட நின்றுவிடுகிறது.

தாயார் கங்காபாயி குடும்பத்தை மிக கஷ்டததோடு நிர்வகிக்கிருள். வளர்ப்புப் பிள்ளேயான ரங்காராம் நன்றியறிதலுடன் நடந்து கொள்ளுகிருன். அவன் சம்பாத்தியத்திலேயே குடும்பம் நடக்கிறது.

நர்மதா கல்யாண வயதை அடைகிருள். ரங்காராம் வரன் வேட்டையில் ஈடுபடுகிருன். ஆனல்,

அந்தக் குருடியை மணந்துகொள்ள யாரும் முன்வரவில்லை. ஆதலால், ரங்காராமே மனமுவந்து அவளை மணந்துகொள்கிறான்.

கல்யாணத்தைத் தொடர்ந்து நர்மதா கர்ப்பிணியாகிறாள். பிறகு ஒரு ஆண் குழந்தைக்குத் தாயாகிறாள். ரங்காராமின் உள்ளூர் வியாபார வருமானம் குடும்பச் செலவுக்கே போதவில்லை. குழந்தை வேறு பிறந்துவிட்டது. ஆதலால், அவன் பம்பாய்க்குச் சென்று ஒரு வேலையில் அமருகிறான்.

அவன் பம்பாய் சென்றதும் கங்காபாய்க்கு கடும் ஜுரம் ஏற்படுகிறது. அக்கம் பக்கத்தினரின் உதவியுடன் நர்மதா அம்மாவுக்கு சிசுருஷை செய்துவருகிறாள். நாள் மூன்றாகியும் ஜுரம் தணியவில்லை. நர்மதா கவலை கொள்ளுகிறாள்... **இனி மேலே படியுங்கள்**

நர்மதா தான் கூறுகிறாள் :

அம்மாவின் நோய் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது. நாட்டு வைத்தியன், 'கடுப்புவலி ஜுரம்' என்று மூன்று நாட்கள் மருந்து கொடுத்துப் பார்த்தான். பிறகு, அடுத்த வீட்டு பன்ஸே மாமா சர்க்கார் ஆஸ்பத்திரி டாக்டரைக் கூட்டி வந்து காட்டினார். அவர் 'டைபாய்டு' போல இருக்கிறதே என்றதும் என் வயிற்றில் நெருப்பைக் கொட்டினாற் போலாயிற்று. உடனே பன்ஸே மாமாவைக் கொண்டே என் கணவருக்குக் கடிதம் எழுதச் செய்து விட்டேன்.

நேற்று அவரிடமிருந்து பதிலும் வந்துவிட்டது, அடுத்த கப்பலில் கிளம்பி வருவதாக, ஆயிற்று. இன்னும் சிறிது நேரத்தில் அவர் வந்து விடுவார். பல மாதங்களுக்குப் பிறகு ஏற்படும் அச் சந்திப்பின்போது என்னென்னவெல்லாமோ புதிய அனுபவங்களைப் பற்றிப் பேசி அவரோடு இன்பப் பொழுது போக்க வேண்டுமென்று கற்பனைகள் செய்து கொண்டிருந்தேன். ஆனால் இப்பொழுது இருக்கும் நிலை அப்படியா இருக்கிறது? அவர் வீடு வந்து சேரும் வரையில் அம்மா உயிர் தரித்திருப்பாளா—என்ற ஆபத்தான கட்டம் நேற்று மாலை தொட்டு ஏற்பட்டு விட்டதே!

எனவே, என் நினைவுகள் இன்பத்தில் உழலாமல் துன்பத்துக்கே தாவின. 'அம்மா இறந்துவிட்ட பின்பு, இந்தக் குருடி, இக் கைக்குழந்தையுடன், புதிய ஊரில் குடியேறி எப்படிக் குடும்பம் நடத்திச் சமாளிக்கப் போகிறேன் ?' என்ற பயம் கலந்த எண்ணம், கொந்தளித்த என் மனக் கடலிலே சீறியெழும் அலையாகச் சுருண்டு சுருண்டு விழுந்து கொண்டிருந்தது.

மணி ஐந்தடித்து விட்டதை அறிவித்துக்கொண்டு தொட்டிலில் கிடந்த என் கண்ணன் விசும்பினான். குழந்தைக்கு இன்னும் பெயர்கூட வைக்கவில்லை. "உன் வாழ்க்கை இருளைப் போக்கப் பிறந்தவன், நர்மதா; ஆகையால் அவனுக்குத் தினகரன் என்று பெயர் சூட்டப் போகிறேன்" என்று அவன் பிறந்த அன்று அம்மா சொன்னாள். அவளுடைய பேச்சைக் கேட்டு எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. ஆமாம்; குழந்தை பிறந்ததும் அது ஆணாக இருந்தால் எல்லோருமே இப்படித்தான் சொல்லுகிறார்கள்-"வாழ்வை மலர்விப்பவன்"; "குலவிளக்கைத் தூண்டுபவன்"; அப்படி-இப்படி என்று. ஆனால் அந்தப் பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களானதும்....

இதோ, காசி அண்ணாவைத்தான் பாருங்களேன். என் கணவருக்குக் கடிதம் எழுதியபோது, பன்ஸே மாமா சொன்னாரென்று அண்ணாவுக்கும் அம்மாவின் அபாய நிலையை அறிவித்து ஒரு கடிதம் எழுதச் செய்தேன். இன்றைக்கு ஐந்து நாட்களாகிவிட்டன. அந்தப் பாவியிடமிருந்து ஒப்புக்கு ஒரு பதில் கடிதம்கூட வரவில்லை. பிள்ளைகளாம் பிள்ளைகள்!

அது என்னவோ, அம்மாவுக்கு இத்தனைக்குப் பிறகும் அண்ணாவிடம் பாசம் இருக்கத்தான் இருந்தது. அவள் சொல்லுவாள். "கடலில் உள்ள நீர், ஆவியாக மாறிப் பிறந்த இடத்தைப் பிரிந்தாலும், மேகமாகச் சஞ்சரித்து, மழையாகப் பொழிந்து, நதியாக ஓடி இறுதியில் அந்தக் கடலிலேதான் சங்கமித்தாக வேண்டும்" என்று. ஆனால், அண்ணா? அவன் என்ன வறண்ட நதியா? இல்லாவிட்டால் மேகமாக மாறி இன்பவானிலே சஞ்சரித்துக் கொண்டிருக்கிறானா? 'தான் ஆடாவிட்

டாலும், தன் சதை ஆடும்' என்பார்களே! ஆமாம்;அவனுக்குச் சதை இருந்தால்தானே ஆடுவதற்கு? என்றைக்குப் பெற்ற தாயைப் புறக்கணித்துப் பெண்டாட்டியே கதியென்று போனானே, அன்றே அவன் சதை, தசை, நெஞ்சு, மூளை எல்லாம் பாறையாகிவிட்டனவே!

அண்ணாவின் போக்கை எண்ணிய என் மனசு அடுத்த தட்டில் என்கண்ணனின் போக்கையும் வைத்து எடைபோட ஆரம்பித்தது. இவனும் தன் மாமாவைப் போன்றவனாக இருந்துவிட்டால்........?

இருந்துவிட்டால் என்ன? இதோ அம்மா பெற்ற மகனை உயிரோடு இழந்து வாழவில்லை? பெறாத மகனை என் கணவர் அவளிடம் மாதுர் பக்தி பூண்டு காத்து வரவில்லையா? அதுபோல எனக்கும்........

விசையை முடுக்கிவிட்டால் 'விடு-விடு' என்று ஓடும் யந்திரத்தைப்போல என் மன யந்திரமும் தன் போக்கில் ஓடிக்கொண்டிருந்தபோது....

''நர்மதா'' என்ற அன்புக் குரல் வாசலில் கேட்டது. ஆம்; என் கணவர்தான் வந்துவிட்டார்!

ஓடிச்சென்று வாயிற் கதவைத் திறந்தேன். ஆசை ததும்பும் அவருடைய முகத்தைப் பார்க்கும் பாக்கியந்தான் எனக்கு இல்லாது போயிற்று. ஆனால் அவர் சாமான்களை இறக்கி வைத்துவிட்டு, என் அருகில் வந்து, தோள்மீது கைவைத்து, ''ரொம்பவும் இளைத்துவிட்டாயே, நர்மதா!'' என்றபோது நான் சொர்க்கத்தில் அல்லவா மிதந்தேன்!

ஆயின், அது என்னவோ, கடவுள் என்னை எப்பொழுதுமே அதிக நேரம் ஆனந்தப்பட விட்டுப் பார்ப்பதேயில்லை. துள்ளியோடும் குதிரைக்குக் கடிவாளத்தைப் பூட்டிச் சுண்டி இழுத்து நிறுத்திவிடுவது போன்று, என் களிப்பையும் அவர் அடிக்கடி இழுத்து நிறுத்திக்கொண்டேயிருந்தார்.

பல மாதங்களாகப் பிரிந்திருந்த கணவரின் முதற்கேள்விக்கு விடை அளிக்கு முன்பே, உள்ளே அம்மா பெருங் குரலில் விக்குவது கேட்டது.

நானும் அவரும் ஓடிச் சென்று பார்த்தோம்.

மறு நிமிஷம் ''மாயி'' என்று அவர் எழுப்பிய குரல் ''ஐயோ! அம்மா போய்விட்டாயா?'' என்று என்னை அலறிச் சாயச் செய்தது.

ஆம்; என் வாழ்வின் தூண் சாய்ந்துவிட்டது! இந்தக் கபோதியின் கைக்கோல் பறிபோய் விட்டது!

அம்மாவின் இறுதிச் சடங்குகள் ஒருவாறு நிறைவேறின. பெற்ற மகன் உயிரோடிருந்தும், வளர்த்த மகனின் கையால் கொள்ளி வாங்கும் பாக்கியம் தான் அவளுக்குக் கிடைத்தது.

அம்மா இறந்த விநாடியே என் கணவர் அண்ணாவைப் புறப்பட்டு வரும்படி தந்தி யடித்தார். ''இது வீண் செலவு தான்; அவன் வரப் போகிறதில்லை'' என்று நான் சொன்னேன். அம்மாவோ நோய்ப் படுக்கையில் கிடப்பதை அறிவித்து அவனுக்குக் கடிதம் எழுதச் செய்ததையும், அதை அவன் அசட்டை செய்து விட்டதையும் அவருக்கு அறிவித்தேன். ஆனால் அவரோ, ''சாகக் கிடப்பதற்கும் செத்துவிட்டதற்கும் வித்தியாசமுண்டு, நர்மதா; இந்தத் தந்தி கிடைத்ததும், அவன் ஆடாவிட்டாலும் அவனுடைய சதை ஆடும்; எப்படியும் நாளைக் காலையில் வந்துவிடுவான், பார்'' என்றார்.

என்னவோ? அவர் சொல்லுவது போல் ஒருகால் அவன் வந்தாலும் வரலாம் என்று நான் நினைத்தேன். முகம் மறந்துவிட்ட அண்ணாவை, இனி என்றென்றுமே காண முடியாத நிலையை நான் எட்டிவிட்டாலும், அம்மாவின் சாவை ஒட்டி எங்கள் உறவு புத்துயிர் பெறும் என்று நம்பினேன். ஆனால் அந்த இரக்கமில்லாத சண்டாளன், பெற்றவளுக்குக் கருமம் செய்வதுகூடப் பாவம் என்று கருதிவிட்டானோ, என்னவோ; வரவேயில்லை. அவனே அப்படி இருந்துவிட்டான் என்றால், அவன் வேட்டகத்தாரைப் பற்றிக் கேட்கவா வேண்டும்? அந்தப் பாவிகளும், ஒப்புக்கு ஓர் அநுதாபக் கடிதங்கூட எழுதவில்லை.

ஆனால், இதனாலொன்றும் அம்மாவின் ஈமச்சடங்குகளுக்குக் குந்தகம் ஏற்பட்டுவிடவில்லை. என் கணவரே எல்லாவற்றையும் குறையின்றிச் செய்து முடித்தார். ''எனக்கு அவர்கள் தாய்க்கும் மேலாக இருந்தார்கள், நர்மதா. ஆகவேதான் அவர்களுக்குக் கருமம்

செய்யும் வாய்ப்பு எனக்குக் கிட்டிற்று" என்று அவர் பெருமையுடன் கூறிக் கொண்டார். அம்மாவின் சடங்குகள் முடிந்த மறுநாளே, நாங்கள் பம்பாய்க்குப புறப்பட்டு விட்டோம். என் கணவர் வேலையேற்று ஆறுமாதங்கள்கூட ஆக வில்லை. ஆகவே, அவருக்குப் போதிய லீவு கிடைக்கவில்லை. பதினைந்து நாட்கள் தாம், அதுவும் சம்பளமின்றி 'ரஜா'க் கொடுத்திருந்தார்கள். அதில் பதிமூன்று நாட்கள் அம்மா வின் சடங்குகளை நிறைவேற்றுவதற்கே சரியாகிவிட்டன. ஆகையால், ஆற-அமரப் பிரயாணத்தை நிச்சயித்துப் பம்பாய் போய்ச் சேரமுடியாமல், ஒரு நல்ல நாள்கூடப் பார்க்காது, அவசரம் அவசரமாகக் கிளமபிவிட்டோம்.

ஏழையின் வீட்டில் அப்படியென்ன சாமான்கள் இருந்து விடப் போகின்றன? ஏதோ, இருந்த இரண்டொன்றைச் சில கோணிகளில் போட்டுக் கட்டி எடுத்துக்கொண்டு, எங்களைப் பிறப்பித்த சாலியத்திடம் பிரியாவிடை பெற்றுக்கொண்டோம். ஆமாம், இனிமேல் எங்களுக்கும், சாலியத்துக்கும் என்ன தொடர்பு இருக்கிறது? எந்த ஊர் சோறு போடுகிறதோ, அது தானே இனி எங்கள் சொர்க்கம்!

'சமுத்திர ராணி' என்ற கப்பலில் நாங்கள் பம்பாய்க்குப் பிரயாணமானோம். மாலை நாலு மணிக்கு அது சாலியத்தை விட்டுப் புறப்பட்டது. அன்றும மறுநாளும் பிரயாணம் செய்த பின்னர் அது எங்களை பமபாய்த துறைமுகத்தில் கொண்டு சேர்க்கும் என்று என் கணவர் சொன்னார்.

கடற்கரை நாட்டில் பிறந்திருந்தும், அதுதான் நான் செய்யும் முதல் கப்பல் பிரயாணம். ஏனென்றால், என்று கண் களை இழந்தேனோ, அன்றுதொட்டு நான் பிரயாணங்களை மேற் கொள்ள லாயக்கற்றவளாகி விட்டேனே!

கப்பலின் இரண்டாம்தட்டில் மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளாகிய எங் களுக்கு இடம் அளிக்கப்பட்டிருந்தது. முதல் தட்டு மேல் வகுப்புப் பிரயாணி களுக்கு. சமுத்திர ராணி பெரிய கப்பல். சுமார் முன்னூறு பிரயாணிகளை ஏற்றிச் செல்ல வல்லது.

சாலியத்திலிருந்து ரெயில் வழியாகவும பம்பாய்க் குப் போக முடியும். ஆனால் அதற்குக் கப்பல் கட்டணத்தை விட இரட்டிப்புச் செலவாகும். மேலும் இருபது மைல் பஸ்ஸில் பிரயாணம செய்து ரெயிலைப் பிடிக்க வேண்டும். பூனாவில் வேறு ரெயில் மாற்றியாக வேண் டும். இதனால் சாதாரணமாகப் பம்பாய் செல்லும் ஏழை பணக்காரர் எல்லாருமே கப்பலில்தான் போவது வழக் கம். வாரத்தில் இரண்டு முறை சாலியத்தின் வழியே பம்பாய்க்குக் கப்பல் போகும்.

முதல் நாள் இரவு பிரயாணம் நிம்மதியாகக் கழி ந்தது. மறுநாள் பகல் பனிரெண்டு மணி வரையில்கூட அந்தப் பிரயாணம் என் வரையில் இன்பமாகத்தான் இருந்தது. கணவருடன் செய்யும் முதல் பிரயாணம் என்பதால் எனக்கு அது இன்பமாக இருந்ததோ, என் னவோ? இரவு-பகல் என்றில்லாமல் சதா சிரித்துப் பேசிக் கொண்டிருந்ததில் பொழுது போனதே தெரிய வில்லை.

இனி நான் வாழவேண்டிய பம்பாய் நகரைப் பற்றி யும், அங்கே, கடந்த ஆறு மாதங்களாகத் தாம் தனி வாழ்வு வாழ்ந்த விமரிசைகளைப் பற்றியும் என்



கணவர் வேடிக்கை வேடிக்கையாகப் பேசினார். எங்கள் சந்தோஷத்தில் குழந்தை திவாகரனும் பங்கு கொண்டான்.

அடியம்மா! அந்தப் பச்சைக் குழந்தையைத் தோளைவிட்டு இறக்காது என்ன கொஞ்சல்தான் கொஞ்சினார் என் கணவர். ஏன்? அந்தப் போக்கிரிகூட அப்பாவுடன் சேர்ந்து கொண்டு என்னைப் புறக்கணிக்கத் தலைப்பட்டு விட்டான். பாலூட்டுவதற்கு நான் தூக்கிக் கொண்டால்கூட பெரிதாக அழுது நிர்தூளி பண்ணிவிட்டான் என்றால், பார்த்துக் கொள்ளுங்களேன்!

''ஏது? உங்கள் பிள்ளை மாமாவைப் பிச்சை வாங்க வைத்துவிடுவான் போலிருக்கிறதே! நாற்பது நாட்கள் ஆகாத இந்த முளை இப்பொழுதே அம்மாவை நிராகரிக்க ஆரம்பித்து விட்டானே!'' என்று நான் சிரித்துக்கொண்டே சொன்னேன்.

''என் பிள்ளை அப்படி ஒன்றும் இழிந்து போய்விட மாட்டான்; அவன் அம்மாவை நிராகரித்தாலும் அப்பா விடந்தானே ஒட்டிக் கொண்டிருக்கிறான்'' என்று என் கணவர் பெருமை தவழச் சொன்னார்.

''ஏண்டா போக்கிரி, அப்பாவிடம் போய் அப்படி ஒட்டிக்கொள்ளுகிறாயே; சிறிது நேரத்தில் வயிறு பசிக்குமே, அப்பொழுது இந்த அப்பாவா உனக்குப் பால் புகட்டப்போகிறார்?'' என்று நான் திவாகரனைக் கேட்டேன்.

''சிரிக்கிறான் பார், திருட்டுப் பயல்'' என்றார் என் கணவர். கண்ணில்லாக் கொடுமையை என்னவென்று சொல்ல? என் கண்மணியின் பொக்கை வாய்ச் சிரிப்பைக் காணக் கொடுத்து வைக்காத பாவியாகி விட்டேனே!

''அவன் சிரிப்பிலே ஓர் அதிசயக் கவர்ச்சி இருக்கிறது, நர்மதா. அந்தப் பூக்கன்னங்களில் அப்பொழுது விழும் குழி என்னைமாயமாய் மயக்கி விடுகிறது'' என்று கூறி ஆசையோடு மகனை முத்தமிட்டுக் கொண்டார் என் கணவர்.

தொடர்ந்து சொன்னார்: ''கன்னத்தில் குழிழச் சிரிக்கும் ஆண் குழந்தைகள் ஐசுவரியவானாக விளங்குவார்களாம். நம் திவாகரனும் அப்படித்தான் விளங்கப் போகிறான், வேணுமானால் பார்.''

''ஆமாம்; இந்தத் தரித்திரத்தின் வயிற்றில் பிறந்த அவனுக்கு எங்கே அத்தகைய பாக்கியம் கிடைக்கப்போகிறது?'' என்று நான் நிராசையுடன் சொன்னேன்.

''அப்படிச் சொல்லிவிடாதே. உனக்கு என்ன குறை, நர்மதா? வயதில் விவாகமாகவில்லையா? மனசு விரும்பிய மணாளன் கிடைக்கவில்லையா? குலம் விளங்கக் குழந்தை இல்லையா? ஒரு பெண்ணுக்கு இந்தப் பிராயத்தில் என்னென்ன தேவையோ, அவையெல்லாம் உனக்கும் கிட்டித்தான் இருக்கின்றன.''

''ஆனால், இதையெல்லாம் கண்டு அநுபவிக்க இந்தப் பாவிக்குக் கண்கள் இல்லையே! நீங்கள் என்னவோ சொல்லுகிறீர்கள். உண்மையில் அந்த ஹரிமாயியை நம்பித்தான் நான் இப்பொழுது பம்பாய்க்குப் புறப்பட உடன்பட்டேன். அவளைப்பற்றி மாத்திரம் நீங்கள் சொல்லியிரா விட்டால், இந்தக் கைக் குழந்தையுடன், புது நகரில், தனியே குடும்பம் நடத்தி விடுவேன் என்ற நம்பிக்கையே எனக்கு ஏற்பட்டிராது.''

அடடா! ஹரிமாயி யார் என்பதை உங்களுக்குச் சொல்ல மறந்து விட்டேனே!

அம்மா இறந்த மறுநாள், என் கணவர், ''குழந்தைக்கு ஏதேனும் பெயரிட்டு விட்டீர்களோ, நர்மதா?'' என்று கேட்டார்.

''இல்லை; அம்மா அவனுக்குத் தினகரன் என்று பெயரிட வேண்டுமென்று சொன்னாள். ஆனால் நான் பிள்ளைக்கு உரியவரான உங்களைக் கேட்காமல் எதுவும் செய்யக்கூடாது என்றுசொல்லி விட்டேன்'' என்றேன்.

''தினகரன் எனப் பெயரிட வேண்டுமென்றா மாயி சொன்னார்கள்? பேஷ்! சொன்னால் நம்பமாட்டாய் நர்மதா; நானும் கிட்டத்தட்ட அத்தகைய பெயரையே அவனுக்குச் சூட்டவேண்டும் என்பதாகத் தீர்மானித்திருக்கிறேன்'' என்றார் அவர்.

''கிட்டத்தட்ட என்றால்?'' என நான் கேட்டேன்; அப்பொழுதுதான் அவர் ஹரிமாயியைப்பற்றி எனக்குச் சொன்னார். [தொடர்ச்சி 51-ம் பக்கத்தில்]

"வெண்மையான, சுத்தமான

லக்ஸ் டாய்லட் சோப்பின்

நுரை மிகவும் மிருதுவானது, நறுமணம் கமழ்வது."

என்கிறார் எம்.வி.ராஜம்மா

இந்தியாவில் தயாரித்தது.

இந்த வெண்மையான, சுத்தமான சோப்பின் பாதுகாப்பை உங்கள் சருமத்திற்கு அளித்து யெளவன காந்தியைப் பெறுங்கள். எம். வி. ராஜம்மா கூறுவதாவது: "சருமத்தை பட்டுப்போல் மிருதுவாகவும், அழகாகவும் வைத்துக்கொள்ள லக்ஸ் டாய்லட் சோப்பின் மிக மிருதுவான, நறுமணம் கமழும் நுரையைப் போல் வேறெதுவுமில்லை. அது உங்கள் இயற்கை எழிலை மலரச் செய்கிறது. அன்றியும் அதன் நீடித்திருக்கும் நறுமணத்தையும் நீங்கள் மிகவும் விரும்புவீர்கள்."

"... அதனால்தான் என் வதனத்தை அழகாக வைத்துக்கொள்ள லக்ஸ் டாய்லட் சோப்பையே நம்பியிருக்கிறேன்."

முக்கிய செய்தி!

தலைமுதல் கால்வரை கவர்ச்சி அளிக்க

புதிய பெரிய சைஸிலும்

இப்பொழுது கிடைக்கிறது.
இன்றே வாங்குங்கள்!

சினிமா நட்சத்திரங்களின் அழகுதரும் சோப் ★

LTS. 420-50 TM

அஜித்

காற்றினிலே நக்ஷத்திரப் பேட்டி

[வாள் போர் நடைபெறும் சப்தம்; குதிரைகள் ஓடும் சப்தம் ஒலித்து மங்குகிறது.]

பால்ராஜ்:—அடேயப்பா, குதிரைகளின் குளம்பு சப்தத்தையும், வாள் வீச்சு ஒலியையும் கேட்டு நான் பயந்து விட்டேன். சிறிது நேரத்திற்குப் பின் ஒரு கவர்ச்சிகரமான மனிதன் என் அருகில் நிற்பதைக் கண்டேன். அவன் குதிரையை இழுத்து நிறுத்தி, என்னை அழைத்தான். நான் நெருங்கிப் போன போது யாரைப் பார்த்தேன், தெரியுமா? ஸப்ருதான். நான் ஸப்ருவிடம் அஜீத்தைப் பற்றிக் கேட்டேன். அவர் துலேவில் சுட்டிக் காட்டி "அதோ பார்" என்ருர். அங்கு இரண்டு இளைஞர்கள் வாள் போர் புரிவதைக் கவனித்தேன். "ஸம்ராட்" படத்தின் ஷூட்டிங் நடந்து கொண்டிருந்தது. படப் பிடிப்பு முடிவடைந்ததும் நான் அஜீத்தை சந்தித்து, லிப்டன் ரஸிகர்கள் அவரது பேட்டியைக் கேட்க ஆவலுள்ளவர்களாக இருப்பதாகச் சொன்னேன்.

அஜீத்:—பால்ராஜ், மாலே வந்தனம். கொஞ்சம் தாமதமாகி விட்டதற்காக வருந்துகிறேன்.

பா:—அதனல் பாதகமில்லே; ரஸிகர்களே நான் ஒரு தினுசாக காக்க வைத்திருக்கிறேன்.

அ:—அவர்களுக்கு நீங்கள் என்ன சொல்லிக் கொண்டிருந்தீர்கள்?

பா:—அவர்களுக்கு உங்களேயும், நீங்கள் நடிக்கும் "ஸம்ராட்" படம் பற்றியும் சொல்லிக் கொண்டிருந்தேன். அவர்கள் மிகவும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அ:—நான் இடையில் புகுந்து கெடுத்து விடவில்லே என நினைக்கிறேன்.

பா:—அப்படிச் சொல்லாதீர்கள். நீங்கள் இப்பொழுது லிப்டன் புரோகிருமில் பங்கெடுத்துக் கொள்ள வந்திருப்பதைவிட மகிழ்ச்சி அளிக்கக்கூடிய விஷயம் வேறு அவர்களுக்குக் கிடையாது.

அ:—ரொம்ப வந்தனம்.

பா:—அஜீத், தயவு கூர்ந்து முதலில் உங்கள் இனிய கானத்தை நாங்கள் கேட்க வழி செய்யுங்கள்.

அ:—இல்லே பால்ராஜ். நீங்கள் அதிகமாக எதிர்பார்க்கிறீர்கள்.

பா:—ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?

அ:—ஏனெனில், கேட்பது இனிமையாக இருக்கும். சரி, வேறு யாராவது பாடட்டும், நான் கவனமாகக் கேட்கிறேன். தவிர, நான் பாடுவது கிடையாது.

பா:—கவிதைகளிடம் உங்களுக்குத் தனி அபிமானம் உண்டு எனத் தெரிகிறது.

அ:—ஆம். அது எனக்குப் பரம்பரையாக வந்தது.

பா:—அஜீத், நீங்கள் எங்கு பிறந்தீர்கள்?

அ:—ஷாப்ஜஹான்பூரில் – ஷாப்ஜஹான்பூர் என்பது ஐக்கிய மாகாணத்திலுள்ள முக்கிய நகரமாகும்.

பா:—ஆம். உங்களை நன்கு தெரிந்திருக்கும் மக்களுக்கு. உங்கள் ஊரும்....

அ:—அப்படியில்லே. எனக்கு எட்டு வயதாக இருக்கும்போதே நான் அந்த ஊரை விட்டுக் கிளம்பி விட்டேன்.

பா:—எங்கே கிளம்பிப் போனீர்கள்?

அ:—என் தந்தை, அந்த நாளில் ஹைதராபாத் சமஸ்தானப் படையில் இருந்தார். எனக்கு எட்டு வயதாக இருக்கும் போது, ஹைதராபாத்துக்கு வரும்படி உத்தரவு வந்தது.

பா:—சர்க்காரிலிருந்தா?

அ:—இல்லே. என் தந்தையிடமிருந்து. நாங்கள் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் ஹைதராபாத்துக்கு வரவேண்டுமென உத்தரவு வந்தது.

பா:—அப்படியா? அப்படியானல் நீங்கள் எங்கு படித்தீர்கள்? ஹைதராபாத்திலா?

அ:—கோல்கொண்டா ஹைஸ்கூலில் நான் மெட்ரிக் பரீக்ஷை தேறினேன்.

பா:—மிகவும் பிரசித்தி பெற்ற ஊராயிற்றே?

அ:—உண்மையிலே மிகவும் பிரசித்தி பெற்றதுதான். கோஹினூர் வைரம் அதைப் பிரசித்தமாக்கி விட்டது. அது பிரசித்தமானதற்குக் காரணம் பிலிம் டைரெக்டர் மெஹ்பூப் குமாருடன்

படப் பிடிப்புக்கு அங்கு வந்தார். அந்த நாளில் நான் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தேன். படப் பிடிப்பைப் பார்த்தபோது எனக்கும் சினிமா நக்ஷத்திரமாக வேண்டுமென ஆவல் ஏற்பட்டது.

பா:—அப்படியானல் படிப்பை விட்டு விட்டு நடிகனைவதற்காக பம்பாய்க்கு ஓடி வந்து விட்டீர்களா?

அ:—இல்லை, அப்பொழுது ஒரு ஆசை ஏற்பட்டது, அவ்வளவுதான். எனது மெட்ரிக் பரீக்ஷைக்குப் பிறகு ஹைதராபாத் உஸ்மானியா காலேஜில் சேர்ந்தேன்.

பா:—அப்படியானல் கல்லூரியில் நீங்கள் பிரசித்தமான ஒரு நபராக இருந்திருப்பீர்களே!

அ:—ஆம். அந்த நாளில் எனக்கு செல்வாக்கு அதிகம்தான்.

பா:—இப்பொழுதும் கூட அப்படித்தான் என்று நான் நினைக்கிறேன்.

அ:—பால்ராஜ்! நாம் வேறு எதையாவது பற்றிப் பேசுவோம்.

பா:—சரி. கல்லூரி விளையாட்டுகளில் பொழுது போக்குகளில் நீங்கள் பங்கெடுத்துக் கொண்டீர்களா?

அ:—ஆம், வேண்டிய மட்டும். அதனுலேயே நான் படிப்பில்கூட அவ்வளவு அக்கறை காட்டவில்லை. காலை நேரங்களில் நாடக ஒத்திகையில் மும்மரமாக இருப்பேன். பிற்பகல் நேரங்களில் விளையாட்டு மைதானங்களில் பொழுதைப் போக்குவேன்.

பா:—நீங்கள் என்ன விளையாட்டு விளையாடுவீர்கள்?

அ:—புட் பால், ஹாக்கி, பேஸ்கட் பால், வாலிபால் முதலியன. நான் கல்லூரியிலேயே விளையாட்டுக்காரர்களில் சிறந்த ஒருவனுகவே யிருந்தேன். மற்ற மாணவர்களுக்கு என்னிடத்தில் மரியாதை உண்டு. நாங்கள், இக்காலத்தில் போர் வீரர்கள் ஆடும் ஸைக்கிள்

சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்: சுராஜ் ஏஜன்ஸீஸ். 37, ஜானிஜான்கான் ரோடு. திருவல்லிக்கேணி. மதராஸ். கோயமுத்தூர், பாலக்காடு, நீலகிரிக்கு சோல் ஏஜென்டுகள்: B. பாலபட்டாபி செட்டியார் (1933ல் ஸ்தாபிக்கப்பட்டது) கோயமுத்தூர்

போலோ ஆட்டத்தை அந்தக் காலத்திலேயே ஆடுவது வழக்கம். நான்தான் அவர்களுக் கெல்லாம் தலைவன். அப்பொழுதே என்னை நான் கதாநாயகனாக நினைத்துக் கொள்ளுவது வழக்கம்.

பா:—நீங்கள் எப்பொழுதாவது பள்ளிக்கூட நாடகங்களில் நடித்தது உண்டா?

அ:—உண்டு. முதல் முறை பள்ளிக்கூட நாடகத்தில் ஒரு பிச்சைக்காரனாக நடித்தது எனக்கு இன்றும் நன்றாக ஞாபகமிருக்கிறது. அதன் பிறகு நான் ஒரு கதாநாயகனாகவே நடித்து விட்டதாக நினைத்துக் கொள்ள ஆரம்பித்தேன்.

பா:—படிப்பில் அக்கறையே யில்லாதிருந்த நீங்கள் எப்படிப் பரீக்ஷையில் தேறினீர்கள்?

அ:—எப்படி? எனக்குத் தெரியாது. நான் பி. ஏ. முதல் வருஷம் படித்துக் கொண்டிருந்த போது எனது ஆங்கிலப் பேராசிரியர் என்னை அழைத்து எனக்கு ஒரு புத்திமதி கூறினார்.

பா:—என்ன அது?

அ:—அவர் சொன்னார். 'உன் பெற்றோரின் பணத்தை ஏன் இப்படி வீணாக்குகிறாய்? சேனையில் சேர்ந்தோ அல்லது பட உலகில் புகுந்தோ உன் அதிருஷ்டத்தைப் பாரேன்.

பா:—நீங்கள் எப்பொழுது பம்பாய்க்கு வந்தீர்கள்?

அ:—1943ம் வருஷம் ஜூன் மாதம் ஒரு செவ்வாய்க்கிழமை நான் இங்கு வந்தேன். உங்களுக்கு நம்பிக்கையில்லாவிட்டால் 1943ம் வருஷ காலண்டரை எடுத்துப் பாருங்கள். எனக்கு என் தந்தை கல்லூரிக்கு சம்பளம் கட்டப் பணம் கொடுத்திருந்தார். என்னுடைய புத்தகங்களை நான் விற்றுவிட்டேன். அந்தப் பணத்துடன் பம்பாய் வந்தேன். எனது ஆங்கிலப் பேராசிரியர் சொன்ன வார்த்தைகள் என் காதில் ரீங்காரம் செய்து கொண்டிருந்தன.

பா:—நீங்கள் பம்பாய்க்கு வந்து விட்ட விஷயம் உங்கள் வீட்டாருக்குத் தெரியுமா?

அ:—தெரியாது. பதினைந்து நாட்களுக்குப் பிறகு நான் பம்பாயில் இருப்பதாக அவர்களுக்கு எழுதினேன். கடிதம் கிடைத்ததும் என் தந்தை பம்பாய்க்கு விரைந்து வந்து என்னை சேனையில் சேரும்படி வற்புறுத்தினார். நானோ சினிமா உலகில் முயற்சிப்பது எனத் தீர்மானித்திருந்தேன்.

பா:—உடனேயே உங்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்க வேண்டுமே?

அ:—ஏன் அப்படி? பம்பாய் எனக்குப் பழக்கமான நகரம் இல்லை, கேட்டவுடன் கிடைத்துவிட. இங்கு ஒருவன் கஷ்டப்படத்தான் வேண்டும். கஷ்டப்பட்டால் கூட வெற்றி கிடைப்பது கஷ்டம்தான். அதிர்ஷ்ட முள்ளவர்களுக்கு புகழ் ஏணியில் ஏறுவது சுலபம்தான்.

பா:—வந்ததும் எங்கே தங்கினீர்கள்? பட உலகில் எப்படிப் புகுந்தீர்கள்?

அ:—அது ரொம்பப் பெரிய கதை. ரசிகர்களுக்கு அலுப்புத் தட்டிவிடுமோ என்று பயப்படுகிறேன்.

பா:—இல்லவே இல்லை. விட்டன் புரோகிரும் ரசிகர்களைப் பற்றி உங்களுக்கு நான் உறுதி கூறுகிறேன். அவர்கள் நிச்சயமாக மிக ஆவலுடன் கேட்பார்கள் என்று நான் கூறுகிறேன்.

அ:—நீங்கள் அவ்வளவு தூரம் சொல்லும்போது சரி. பம்பாய்க்கு வந்ததும் நான் ஒரு ஹோட்டலில் தங்கினேன். நான் அங்கு தங்குவதற்கு மாதம் ஐந்து ரூபாய் கொடுக்கவேண்டி

சென்ற மாதம் வெளிவந்து ஓடிக்கொண்டிருக்கும் எம். ஏ. வி. பிக்சர்ஸின் ''மாங்கல்யம்'' தமிழ்ப் படத்தில் சுலோசனா.

யிருந்தது. ஐந்து, ஆறு மாதத்திற்குப் பிறகு அதைக்கூட என்னால் கொடுக்க முடியாமல் போகவே, அங்கிருந்து கிளம்பிவிட வேண்டியதாகிவிட்டது.

பா:—அதன் பிறகு எங்கே தங்கினீர்கள்?

அ:—அப்பொழுதைய என் விலாஸம் நடைபாதை, பம்பாய்.

பா:—நடைபாதை என்பது பம்பாயில் உள்ள ஒரு ஹோட்டலின் பெயரா என்ன?

அ:—இல்லை, இல்லை. சாதாரண நடைபாதை. நடைபாதை யென்றால் உங்களுக்குப் புரியவில்லையா? தெரியாமல் இருப்பதே நலம்.

பா:—பணத்தை எல்லாம் செலவு பண்ணிவிட்டுத் திண்டாடினீர்கள் போலிருக்கு.

அ:—அதே தான் நான் சொன்னேன்.

பா:—அப்படியானால் அந்த நாட்களில் பல விசித்திரமான சம்பவங்கள் நேர்ந்திருக்குமே?

அ:—எவ்வளவோ. அவைகளை நான் மறக்கவே முடியாது.

பா:—எங்கே ஒன்று, இரண்டு சொல்லுங்களேன் கேட்போம்.

அ:—அந்த நாளில் கையில் காலணாவுக்கும் வழியில்லாத சமயத்தில் நான் தூங்கும் இடம் ஒரு சூதாட்ட விடுதி தான். நான் தூங்கிக் கொண்டிருந்த பொழுது, ஒரு நாள் போலீஸார் அங்கு வந்து சோதனை போட்டார்கள். சூதாடிகளுடன் நானும் கைது செய்யப்பட்டு, போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லப் பட்டேன். அன்றுதான் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு திரும்ப வர என்ன பாடுபட்டேன் தெரியுமா? நான் கோழையாக அழுதிருக்க வேண்டும்! ஆனால் நான் தைரியத்தை விடவில்லை.

பா:—அன்று தைரியத்தை விட்டிருந்தால் இன்று நீங்கள் எப்படி நட்சத்திரம் ஆகியிருக்க முடியும். ஏன் நீங்கள் தாற்காலிகமாகவாவது ஒரு வேலையைத் தேடிக் கொண்டிருக்கக் கூடாது.

அ:—எனக்கு ஒரு வேலை கிடைத்தது. ஆனால் முதலில் நான் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

பா:—என்ன வேலை அது?

அ:—என் நண்பன் மெட்ரோ சினிமா தியேட்டரில் கேட்கீப்பராக வேலை ஒத்துக் கொள்ளும்படி சொன்னான். அங்கு

கேசவர்த்தினி

கொண்டு கூந்தலைப் பெருக்கிக் கொள்ளுங்கள்

சுண்டைத் தீருங்கள். இனி தலை அரிப்பானேன்? இள நரையை நிறுத்துங்கள். நரையையும் தள்ளி வையுங்கள்.

கேசவர்த்தினியின் உதவியால் கூந்தல் புத்துயிர் பெற்று அழகுடன் விளங்கட்டும்.



ஷாம்புவினால் தலை சுத்தமாகவும், பரிமளமுள்ளதாகவும் ஆகட்டும்.

கேசவர்த்தினி அணா 14; ஷாம்பூ அணா 14; தபால் செலவு வேறு. எங்கும் கிடைக்கும். அல்லது

கேசவர்த்தினி ப்ராடக்ட்ஸ்,
கோயமுத்தூர்.



''உன் சைக்கிளுக்கு காற்று மட்டும் போதாது ; தண்ணீருங்கூட வேண்டுமோ ?'' என்று முத்துலக்ஷ்மி ராதாகிருஷ்ணனிடம் (''குடும்பம்'' படத்தில்) கேட்கிருரோ?

பல பட முதலாளிகளும், டைரெக்டர்களும் வரக்கூடும் என்றும் அவர்கள் என்னைப் பார்த்து தேர்ந்தெடுக்கக்கூடும் என்றும் நன்பன் சொன்னுன். இன்னுமொரு வேலையும் வந்தது. வாடகை வசூல் பண்ணவேண்டிய வேலை. உண்மையைச் சொல்லுகிறேன். அந்த இரு வேலைகளும் என்னுடைய நோக்கத்திக்குப் பொருத்தமற்றவை.

பா:—அங்கு பட முதலாளிகளையும், டைரெக்டர்களையும் நீங்கள் சந்தித்திருக்கவேண்டுமே ?

அ:—நான் ஒருவர் கண்களுக்காவது தப்பவில்லை. பட உலகப் பிரமுகர்கள் பலரைச் சந்தித்தேன். ''நீங்கள் மிக உயரமாக இருப்பதால் உங்களுக்குப் பட உலகில் சந்தர்ப்பம் கிடைப்பது கஷ்டம். ஏனெனில் உங்களுக்குத் தகுந்த கதாநாயகி கிடைப்பது கஷ்டம்'' என அவர்களில் ஒருவர் சொன்ஞர். வி. சாந்தாராமுக்கு ஒரு போட்டோவுடன் மனுப் போட்டேன். அவரும் எனது போட்டோவைத் திரும்ப அனுப்பிவிட்டார். பிறிகு நான் பிருத்விராஜை சந்தித்தேன். நேரே நான் அவர் வீட்டிற்குப் போனேன். எனக்கு ஞாபகம் இருக்கிறது. நான் மாடிப்படி ஏறிப் போனபோது அவர் படியில் நின்று கொண்டிருந்தார். ''சிக்கந்தர்'' படப் பிடிப்பு முடிவடைந்து அப்பொழுதான் திரும்பி வ்ந்திருந்தார். அவர் சிக்கந்தரைப் போல கம்பீரமாக நின்று கொண்டிருந்தார். சில நிமிஷங்களுக்கு அவரையே பிரமித்துப் பார்த்து விட்டு நான் வந்த விஷயத்தைச் சொன்னேன். அவர் பொறுமையாகக் கேட்டு அன்பாகப் பேசினுர். எப்பொழுதுமே எனது அபிமான இலட்சிய நடிகர் அவர்தான். இந்த சந்திப்பு அவரது குணுதிசயங்களை நன்கு வெளிப்படுத்தின. அவரிடம் நான் கொண்டிருந்த அன்பையும் மரியாதையையும் பன்மடங்காக்கிற்று.

பா:—அஜீத், இந்த வேலை தேடும் படலம் எவ்வளவு காலம் நடந்தது?

அ:—அந்தக் காலத்தில் இந்திய செய்திப் பட ஸ்தாபனம் பிரசாரப் படங்கள் தயாரித்து வந்தது. அங்கு எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அவர்களது பல படங்களில் பங்கெடுத்துக் கொண்டேன்.

பா:—நீங்கள் நடித்த முதல் முழு நீளப் படம் எது?

அ:—'' ஷா-இ-மிஸர் ''தான் எனது முதல் படம். விஷ்ணு ஸினிடோனுக்காக ஜி. ஆர். சேதி டைரெக்ட் செய்த படம் அது.

பா:—எந்தப் படம் உங்களுக்கு முதலில் ஒரு பெயரை ஏற்படுத்தியது.

அ:—''பி-குஸுர்''. நான் நடித்த ஒரு பிரசாரப் படத்தைப் பார்க்க நேர்ந்த டைரெக்டர் கே. அமர்நாத் மதுபாலாவுடன் நடிக்க அப்படத்தில் ஒரு சந்தர்பபம் கொடுத்தார். மதுபாலா சிறந்த நடிகை. தன்னுடன்கூட நடிக்கிறவர்களுடன் ஒத்துழைப்பதில் முன்நிற்கிருர். உண்மையில் அவருடன் நடிப்பது ஒரு வாய்ப்புத்தான்.

பா:—உண்மைதான். அந்தப் படம் உங்களை நன்கு அறிமுகப். படுத்தியிருக்கும்.

அ:—நான் நன்றி தெரிவிக்கக்கூடிய மற்றொரு நடிகை மீனு ஷோரி. அவருடன் நான் ''டோலக்'' படத்தில் நடித்தேன். ரூப்கே ஷோரியும் ஒரு உயர்ந்த மனிதர் என்பதை நான் கண்டு கொண்டேன்.

பா:—பட உலகில் புகுந்த பின் நீங்கள் என்ன தெரிந்து கொண்டீர்கள்.

அ:—குதிரை சவாரியும், நீந்துதலும். குழந்தைப் பிராயத்திலிருந்தே எனக்கு சண்டை போடுவது என்றால் ரொம்பப் பிடிக்கும். பட உலகில் புகுந்ததுமே வாள் போர் பழகிக் கொண்டேன். அது பல படங்களில் பயன்படுகிறது. "மொஹல்-கே-அஸாம்" படத்தில் கூட நான் வாள் போர் புரிகிறேன்.

பா:—வாள் போர், குதிரை சவாரி இவை தவிர இலக்கியத்திலும் உங்களுக்கு ரொம்பப் பிரியம் என்று கேள்விப் படுகிறேனே?

அ:—நிஜம்தான். உருது கவிதைகள் என்றால் எனக்குப் பைத்தியம். நான் பல பிரபல கவிஞர்களின் கவிதைகளைப் படிக்கிறேன். காலிப் எனது அபிமானக் கவிஞர். ஆங்கில இலக்கியத்தில், மபஸான், மவுகம் ஆகியோரின் இலக்கியங்களைப் படிப்பேன்.

பா:—சில கவிதைகளைச் சொல்லிக் காட்டினால் நன்றாக இருக்கும்.

அ:—கவிதைகள்! சரி ஆகட்டும். (உருது கவிதை ஒன்றைக் கூறுகிறார்).

பா:—மிக வந்தனம். இன்னும் ஒரு விஷயம். நீங்கள் வியாபாரச் சிறுவர்களைப் போல் பேசி விகடம் பண்ணுவதில் சமர்த்தர் என்று உங்கள் மனைவி மூலம் நான் கேள்விப் பட்டிருக்கிறேன்.

அ:—அவள் ஏன் அதை உங்களிடம் சொன்னாள்? அது ரொம்ப ரகசியமாயிற்றே!

பா:—அப்படி யெல்லாம் சொல்லி நழுவிவிட வேண்டாம். தயவு செய்து நாங்களும் கேட்கும்படி செய்யுங்கள். தவிர திரையில் அம்மாதிரி கதாபாத்திரமாக நடிக்க நீங்கள் நிறையப் பணம் கேட்கிறீர்களாமே!

அ:—திரையிலா? ஆம். ரேடியோவிலும் அதைச் செய்வதாக எனக்கு அபிப்பிராயம் கிடையாது. இருந்தாலும் நான் விட்டன் ரஸிகர்களை ஏமாற்ற விரும்பவில்லை,

[விகடம் செய்கிறார்)

பா:—அடேயப்பா அசல் வியாபாரியாகவே மாறிவிட்டீர்களே. நான் மட்டும் பட முதலாளியானால் நிச்சயமாக உங்களுக்கு இந்தப் பாத்திரத்தைக் கொடுத்துவிடுவேன். உங்கள் கல்யாணத்தைப் பற்றிச் சில கேள்விகள் கேட்கலாமா?

அ:—கல்யாணமா?....கவிதையையும்

வோத்ரா

பெண்கள் போற்றும் டானிக்

கேஸரி குடீரம் லிமிடெட்,

மதருஸ்—14.

தமிழ்நாடு ஏஜெண்டுகள்:

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

மேலகோபுர வாசல்

மதுரை.

வியாபாரத்தையும் பற்றிப் பேசிய உங்களை கல்யாணத்தைப் பற்றி நினைக்கச் செய்தது எது?

பா:—உங்களுடையது காதல் கல்யாணம், இல்லையா?

அ:—ஆம்.

பா:—பம்பாயில் நடந்தது உங்கள் திருமணம். இல்லையா?

அ:—ரொம்ப சரி.

பா:—நீங்கள் 'பிளாட்பாரம் வாசி'யாக இருந்தபோது அவளைச் சந்தித்தீர்கள், இல்லையா?

அ:—இல்லை. நான் டாக்குமெண்டரி படங்களில் பங்கெடுத்துக் கொண்டு, பம்பாய் ஸ்ட்ராண்ட் ஹோட்டலில் தங்கியிருந்த போது நான் அவளைச் சந்தித்தேன்.

பா:—அஜீத் என்பது உங்கள் உண்மைப் பெயர் இல்லையே?

அ:—இல்லை. என் உண்மைப் பெயர் ஹமீத் அலிகான். நான் படவுலகில் பிரவேசித்ததும் எனக்குப் பல பெயர்கள் யோசனை செய்யப்பட்டன. ஆனால் அஜீத் என்பது தான் பல நண்பர்களாலும் அங்கீகரிக்கப்பட்டது.

பா:—நீங்கள் ஹமீத் அலிகான். உங்கள் மனைவி.

அ:—அவள் ஸ்ரீமதி ஹமீத் அலிகான்.

பா:—(சிரிப்பு) சரியாகச் சொல்லி என்னை மட்டம் தட்டிவிட்டீர்கள்.

அ:—சரி. நாம் இனி வேறு ஏதாவது பேசுவோம்.

பா:—சிறு பிராயத்திலிருந்தே நீங்கள் சினிமாப் பார்ப்பீர்களோ? நீங்கள் முதல் முதல் பார்த்த இந்தியப் படம் எது?

அ:—முதல் படமா? ஆம், அது "அமர்ஜோதி" தான். நான் அதை மிகவும் ரஸித்தேன்.

பா:—நீங்கள் பார்த்த முதல் ஆங்கிலப் படம் என்ன?

அ:—முதல் ஆங்கிலப் படமா?.... பெயர் சட்டென்று ஞாபகத்திற்கு வரவில்லையே....ரொம்பப் பெரிய பெயராயிற்றே....ஆம்.... "அவர்கள் என்னைக் குற்றவாளி ஆக்கினார்கள்" என்பது.

பா:—இப்பொழுது கூட நீங்கள் அடிக்கடி ஆங்கிலப் படங்கள் பார்ப்பது உண்டா?

அ:—எனக்கு அவகாசமும் இருந்து நல்ல படமாகவும் வந்தால் நான் தவறுவதில்லை.

பா:—உங்கள் அபிமான மேனாட்டு நக்ஷத்திரம் யார்?

அ:—அபிமான நக்ஷத்திரம் இருவர். கிர்க் டக்லஸ், கிளார்க் கேபிள்.

பா:—அபிமான நடிகை?

அ:—கிடையாது. எனது அபிமான நடிகை எனது வாழ்க்கையில் சம்பந்தப்பட்டு விட்டாள். அவளை நான் மணந்து கொண்டுவிட்டேன்.

பா:—ஓ! ஸ்ரீமதி ஹமீத் அலிகானைச் சொல்லுகிறீர்களா?

அ:—பால்ராஜ், நீங்கள் ரொம்ப புத்திசாலிதான்.

பா:—உங்கள் மனைவியின் அபிமான நக்ஷத்திரங்கள் யார்?

அ:—காரி கூப்பர், ராக் ஹட்ஸன், பார்லி கிராஸ்கர் மூவரும்தான்.

பா:—படம் பார்க்கும் உங்கள் செலவு ரெட்டிப்பாகுமே. உங்கள் அபிமான நக்ஷத்திரங்கள் நடிக்கும் படங்களையும் பார்க்கவேண்டி யிருக்குமே.

அ:—தவிர்க்க முடியாத செலவுதான். நிம்மதியான வாழ்வுக்கு சமாதானம் அவசியமாயிற்றே!

பா:—வாழ்க்கையில் உங்கள் உண்மையான ஆசை என்ன?

அ:—குத்துச்சண்டை பற்றிய ஒரு படம் தயாரிக்க நான் விரும்புகிறேன். அதுதான் என்னுடைய ஒரே ஆசை. அது எப்பொழுது நிறைவேறுமோ, அது கடவுளுக்கே வெளிச்சம்.

பா:—நீங்கள் அப்படி ஒரு படத்தை தயாரிக்க வேண்டும்; நான் அதைத் தவறாமல் பார்க்கவேண்டும்.

அ:—வந்தனம் பால்ராஜ்; சுத்தமான நெய்யில் இன்று தயாரித்த இந்த இனிப்புப் பண்டங்களை உங்களுக்காகக் கொண்டு வந்தேன்.

பா:—உங்கள் வீட்டுக்கு வரும்போது இந்த இனிப்புப் பண்டங்களைப் பற்றிக் கூற நினைக்கிறேன். உங்கள் விலாசம் தேவை.

அ:—சந்தோஷமாகத் தருகிறேன். 'பெல் வியூ', மாஹீம், பம்பாய்! மறக்காமல் வாருங்கள். இனி எனக்கு விடை கொடுங்கள், உங்களுக்கும் ரசிகர்களுக்கும் மாலை வணக்கம்.

[நீங்கள் மேலே வாசித்தது, பிரபலமான லிப்டன் டீ கம்பெனியாரது ஏற்பாட்டின் பேரில் ரேடியோ ஸிலோன் மூலம் ஒலிபரப்பப்பட்ட பேட்டியாகும்.]

பொதுஜனம் பேசுகிறார்

★ "மனோகரா" ஜனரஞ்சகமான ஒரு படம். ஆனால், அதில் வரும் சில சம்பவங்கள் மூலக் கதையிலேயே இல்லாதவை. விஷம் கொடுக்கப்பட்ட கேசரிவர்மன் உயிர் பெற்றெழுவது; மாயப் பாதரட்சை; அருவமாக இருந்து கொண்டு கேசரிவர்மன் புரியும் அட்டகாசச் செயல்கள் போன்றவை, நம்ப முடியாத சம்பவங்கள் மட்டுமல்ல; பகுத்தறிவுக்கே புறம்பான கட்டங்களாகும். மக்களிடையே பகுத்தறிவை வளர்ப்பதாகக் கூறிக்கொள்ளும் கருணாநிதி, பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட இச் சம்பவங்களைப் புகுத்தியது ஏன்? புராணமே பொய் யென்று பிரசாரம் செய்து வரும் கருணாநிதி, பகுத்தறிவுக்கே வெடி வைக்கும் பொருத்தமற்ற இச்சம்பவங்களைப் புகுத்தியது ஏன்? மதக் கதைகளால் மக்களின் மதி மருண்டு போகிறது என்று முழக்கமிடும் கருணாநிதி, மக்களின் அறிவுக்கே மருட்சி தரும் படியான இக்காட்சிகளைப் புகுத்தியது ஏன்? பணத்திற்காகப் பகுத்தறிவையும் மறந்து அவர் இவ்வாறு செய்தாரா? அன்றி புகழுக்காக இவ்வாறு செய்தாரா? அல்லது....தன் கருத்துக்களைப் புகுத்த கலை ஓர் தக்க சாதனம் எனக் கருதி கதையை வளர்த்துவதற்காகத்தான் அவர் இவ்வாறு செய்தாரா? நாட்டில் பகுத்தறிவு வளரப் பாடுபடுவதாகச் சொல்லிக்கொள்ளும் கருணாநிதி, இதை சிந்திக்கட்டும்!

"சினிமாஸ்கோப்", எரவாஞ்சேரி.

தவருன சிருஷ்டி

தமிழ்ப் படங்கள் பெரும்பாலானவற்றில் கடனால் அவதிப்படும் பாத்திரங்கள் சிருஷ்டிக்கப்படுகின்றன. கடனால் வரும் கஷ்டத்தை மிகைப்படுத்திக் காண்பிக்க கடன் கொடுத்தவர் கடன் வாங்கினவரை மிரட்டும் கட்டங்களும் வருகின்றன. மேலும், சில படங்களில் முகம்மதியர் ஒருவர் கடன் கொடுப்பவராக இருப்பார். இந்தக் கட்டங்களில் தான் அவர் உபயோகிக்கும் தமிழ் மிகவும் மோசமானதாயும், நகைக்கக்கூடியதாயும் உள்ளது. இம்மாதிரித் தமிழை நாகை, மதராஸ் முதலிய இடங்களில் உள்ள நம் தமிழ் நாட்டு முகம்மதியர்கள் பேசவில்லை என்பது வசனகர்த்தாக்களுக்குத் தெரியாமற் போனது ஆச்சரியமாயுள்ளது. மேலும், முகம்மதிய நண்பர்களில் பல தமிழ் அறிஞர்கள் இருப்பதற்காகப் பெருமைப்பட வேண்டிய நாம் அவர்களின் மதிப்பைக் கெடுப்பது போன்றுள்ள வசனங்களை திரைப்படத்தில் சேர்த்திருப்பது கண்டு வருத்தம் அடைய வேண்டியிருக்கிறது. இதை இனியாவது திரைப்பட சிருஷ்டி கர்த்தாக்கள் கவனிப்பார்களா?

ஆ. நடராஜன், நன்னிலம்.

சந்தேகமென்ன?

திரை யுலகிலே புதுமையும், திறமை மிக்க டைரெக்ஷனும், கதைப் போக்குப்படி ஏற்ற சொற்சுவை பொருந்திய வசனமும், அளவுப்படி ஹாஸ்யமும், எல்லோரும் புகழும்படி நடிப்பும், அதற்கு ஏற்றவாறு நடிக்கும் பாத்திரங்களும், பட உலகிலே பிரசித்தி பெற்ற ஓர் துப்பறியும் நவீனமும், மக்களுக்கு பல நீதிகளைப் புலப்படுத்தும் பட்டமும், காதலும், பாட்டும், கேலிக் கூத்தும் இல்லாத படமும், இவையெல்லாம் ஒருங்கே அமையப்பெற்று தயாரித்து வெளியிட்டு மக்களால் புகழப்படும் படம் "ஒரு நாள்" என்பதில் சந்தேகமென்ன?

பி. ஆர். ஜனார்த்தனன், திருச்சி.

பகிஷ்கரிக்கவேண்டும்

"**தெ**ன்னாட்டின் பண்பையும், பண்பாட்டையும், கலையையும், கலாசாரத்தையும் கண்டு எள்ளி நகையாடிக்

☆ பரிசு பெற்ற கடிதம்

எழுதியவர்:

பி. ஸர்பதீன்,

c/o தெய்வசகாயா ஸ்டோர்ஸ்,

எரவாஞ்சேரி.

கொண்டு வெளிவந்திருக்கிறதாம் வட நாட்டிலிருந்து ஒரு பேசும் படம். பெயர் "சாச்சா செளத்ரி"யாம்" என்றெல்லாம் தமிழ் அன்பர்கள் மனத்தாங்கலுடன் பல பத்திரிகைகளில் எழுதியிருந்ததைப் படித்தேன். இவ்வளவு மனத் தாங்கல் கொடுக்கக்கூடிய விஷயங்கள் அப்படத்தில் இருப்பதாக சந்தேகமறத் தெரிவதால் அப்படத்தை நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து கட்டாயம் பகிஷ்கரிக்கவேண்டும். "என்ன தான் அப்படத்தில் இருக்கிறது? எப்படி அவர்கள் நமது கர்னடக சங்கீதத்தை மட்டம் தட்டியிருக்கிருர்கள்?" என்றெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அசட்டு ஆர்வத்துடன் நமது தமிழ் நாட்டு நண்பர்கள் அப்படத்தைப் பார்க்கப்போகக்கூடாதென வேண்டுகிறேன். அப்படி அவர்கள் சென்ருல் அது தமிழ் நாட்டிற்கே அவமானமாகும்.

ஏ. ஆர். ஸ்ரீனிவாஸன்,
தியாகராயநகர்.

பயனில்லை

யார் எதைச் சொன்னலும் அல்லது செய்தாலும் பிறர் நம்பக் கூடியதாயிருக்க வேண்டும். கற்பனைக் கதைகளாக, அர்த்தமில்லாத கட்டுக் கதைகளாயிருப்பின் தற்காலத்தில் நம்பக்கூடியவர் ஒருவரேனும் இல்லை. இந்த உண்மையை பட முதலாளிகள் உணர வேண்டும். "மனேஹரா" கதை நம்பத்தக்கதாக அமையவில்லை. கண்ணகியால் மதுரை எரிந்தது. திருநாவுக்கரசரின் நாவன்மையால் இறந்த குழந்தை மீண்டும் உயிர் பெற்றது போன்ற கதைகள் உண்மையானவையா இல்லையா என்பது கடவுளுக்குத்தான் வெளிச்சம். காலத்திற்குத் தகுந்தாற்போல கதைகள் அமையவேண்டும். "மனேஹரா"வில் ஒரு கற்புக்கரசியின் நாவன்மையால் பலமான இரும்புச் சங்கிலிகள் முறிந்து விடுகின்றன. மாடியிலிருந்து எறியப்பட்ட குழந்தை கீழே விழாமல் நின்று விடுகிறது. வசந்த சேனையின் உண்மைக் கணவன் பல மந்திர சக்திகளைக் கையாளுகிருன். இது போன்ற சந்தர்ப்பங்கள் தற்போது நடைபெறுவதே கிடையாது. நம் நாட்டில் கற்புக்கரசிகள் பலர் இருக்கின்றனர். ஆனல் கதைகளில் காண்பது போன்ற சக்திகள் ஒன்றேனும் அவர்களிடத்தில் இல்லை. மேலும் படங்களின் மூலம் மந்திரம், மாயம் போன்ற மூட நம்பிக்கைகளை மக்கள் மனதில் ஏன் பதியச் செய்ய வேண்டும். சரித்திர சம்பந்தமான கதைகளைப் படமாக்கினலும் "அனர்க்கலி"யைப் போன்று தயாரிக்க வேண்டும். படங்களின் மூலம் மக்கள் சிறந்த அறிவுபெற வேண்டுமே தவிர, பொய்க் கதைகளைப் பார்த்து மகிழ்வதில் பயனில்லை என்பது ரஸிகர்கள் பலரின் கருத்து.

ஆர். ராஜகுமாரி,
கீழ்ப்பாக்கம், மதருஸ்.

வேண்டுகிறேன்

"**கு**ண்டூசி"யில் தமிழ்ப்பட நட்சத்திரங்களின் வாழ்க்கை வர்ணனைகள் மட்டும் தான் இது காலம் வரை வெளியிடப்பட்டு வந்தன. பட உலகில் வெற்றிக்குப் பாடுபடும் மேக்கப் நிபுணர்களின் வாழ்க்கை வர்ணனைகளையும் இப்போது 'குண்டூசி' வெளியிட முன்வந்துள்ளது பெரிதும் வரவேற்கத் தக்கது. ஆனல், இவைகளோடு மட்டும் 'குண்டூசி' தன் சேவையை நிறுத்திக் கொள்ளக் கூடாது. பட உலகில் இப்போது முக்கியம் பெற்று விளங்கும் பின்னணிப் பாடகர்களைப் பற்றி பட நேயர்களுக்கு போதிய பரிச்சயம் இல்லாமல் இருக்கிறது. இந்தப் பெருங் குறையை நீக்கி, பின்னணிப் பாடகர்களுக்கும், சினிமா நேயர்களுக்கும் இடையிலுள்ள இடைவெளியை நீக்கி வைக்க வேண்டியது 'குண்டூசி'யின் கடமை! நம் படங்களில் பங்கெடுத்துக் கொண்டு வரும் பல பின்னணிப் பாடகர்கள், பின்னணிப் பாடகிகளினது வாழ்க்கை வர்ணனைகளையும் அவரவர்களது புகைப் படங்களுடன் தொடர்ந்து 'குண்டூசி'யில் வெளியிட வேண்டும் என, ஆயிரக்கணக்கான சினிமா நேயர்களின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

எஸ். சாரதா தேவி, காற்ருன்குடி.

முன் வருவார்களா ?

சமீபத்தில் வெளியான "அந்த நாள்" பட உலகிலே ஒரு மாபெரும் மாறுதலை மாற்ற முடியா மறுமலர்ச்சியை, மறக்க முடியாத புரட்சியை ஏற்படுத்தி விட்டது என்றே கூறலாம். தென் இந்திய பட உலகிலே, ஏன் இந்தியப் பட உலகினிலேயே முதன் முதலாக ஒரு

மெர்க்குரி பில்ம்ஸார் துரிதமாகத் தயாரித்துக்கொண்டிருக்கும் "போன மச்சான் திரும்பி வந்தான்" என்ற தமிழ்ப் படத்திலே இவர்களை நீங்கள் சந்திக்கப் போகிறீர்கள்.

புதிய சகாப்தத்தையே உண்டுபண்ணி விட்டது என்று சொல்லலாம். இனக் கவர்ச்சிமிக்க நடனங்களும், அனல் தெறிக்கும் அடுக்குச் சொற்களும், ஆவேசப்பேச்சுக்களும், இல்லாமலேயே படம் வெற்றிபெற முடியும் என்பதை எடுத்துக் காட்டி விட்டது "அந்த நாள்". கண்ணைக் கவரும் நாட்டியங்களும், கண்ணுக்கினிய காட்சிஜோடனைகளும், காதுக்கினிய பாடல்களும் படங்களில் இல்லாவிட்டால் படங்கள் வெற்றி முரசு கொட்ட முடியாது என்று எண்ணியிருந்தோரின் எண்ணங்களைத் தவிடுபொடியாக்கி, அவைகள் 'இல்லாமலேயே வெற்றியின் சிகரத்தை எட்டிப் பிடிக்க முடியும் என்பதை 'உள்ளங்கை நெல்லிக்கனி' போல் எடுத்துக் காட்டிவிட்டது "அந்த நாள்". இனியேனும் நம் பட முதலாளிகள் "அந்த நாள்" போன்ற படங்களைத் தயாரித்து வெளியிட முன் வருவார்களா?

"பம்பாய்த் தமிழன்"—பம்பாய்22

யார் குற்றம் ?

தென் நாட்டவரின் கலை, பண்பாடு யாவும் தெரிந்திருந்தும் அவற்றை இழிவுபடுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் வெளியிடப்பட்ட படமே "சாச்சா சௌத்ரி" என்பது நன்கு புலப்படும். இழிவுபடுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு அவர் செய்யவில்லை என்றால் தமிழர்கள் எழுப்பிய கண்டனக் குரலுக்கு மதிப்புத் தரும் வகையில் சில காட்சிகளை வெட்டியிருப்பாரேயல்லாது "இது ஹாஸ்யப் படமேயல்லாது இழிவு அல்ல" என போலிச் சமாதானம் கூறியிருக்க மாட்டார். படத்தைவெளியிடபம்பாய் தணிக்கைக் குழு அனுமதியளித்து விட்டது. அக்குழு தெரிந்துதான் அனுமதி தந்ததோ அல்லது தெரியாமலே அனுமதி தந்ததோ, அதுபற்றிக் கவலையில்லை. தென்னாட்டிலே அப்படம் திரையிடப்பட்டபொழுது தமிழர்களும், பத்திரிகைகளும் கண்டனக் குரல் எழுப்பியதைக் கேட்டும் சும்மா இருந்து விட்டனரே தென்பிராந்திய தணிக்கை குழுவினர். ஏன் மீண்டும் அப்படத்தை தணிக்கை செய்து மோசமான காட்சிகளை வெட்டி இருக்கக் கூடாது? "வடநாடு தென்னாடு வேற்றுமை வளர்ந்து வரும் இந்நாளில் இது போன்ற படங்களைத் தடைசெய்ய வேண்டும் அல்லது மீண்டும் அரசாங்கத்தார் தணிக்கை செய்ய வேண்டும்" என, கட்சி பேத

மற்ற தமிழ் நாட்டு உறுப்பினர்கள் டெல்லி மக்கள்சபையில் எடுத்துக் கூறியதும்'கவனிப்போம்'எனக்கூறிய செய்தி ஒலிபரப்பு இலாகா மந்திரி ஏன் இது வரை ஒன்றும் செய்ய முன்வரவில்லை. வாஸனின்படம், அடிக்கட்டுப்பாட்டை மீறியுள்ளது என வடநாட்டுத் தயாரிப்பாளர்கள் எல்லாம் ஒன்றுகூடி அன்று எதிர்த்தனரே. அது போன்று தமிழர்களை இழிவுபடுத்துகின்றது இப்படம் எனக் கூறி தமிழ் நாட்டுத் தயாரிப்பாளர்கள் யாவரும் கூடி திரையிடக்கூடாதென ஏன் எதிர்த்திருக்கக் கூடாது. கடைசியாக நமது கண்டனக் குரல்களுக்கு மதிப்புத் தரவில்லை; படத்திற்கு மதிப்பை (பிரசாரம் செய்து கூட்டத்தை) அதிகமாக்கி விட்டனர். தமிழனை இழிவு செய்யும் ஒரு படத்திற்கு தமிழகத்திலே நல்ல வசூல். சே....சே! இப்படம் வெளியிட்டவரை குற்றம் சாட்டுவதைவிட வெளியிட்டவர் 'ஆழம் தெரியாமல் காலை விட்டு விட்டோமே' என அலறும்படியாக படத்தை தடை செய்யாதது அரசியலார் குற்றமும் தென்பிராந்திய தணிக்கையாளர்களின் குற்றமுமாகும்.

''கிரீன்லாம்ப்''—தென்காசி.

தென்னாட்டுச் செல்வங்கள்

சினிமா ஒரு கலை. மனிதனின் மனதை மாற்றக்கூடிய அளவு சக்தியை அது பெற்றிருக்கிறது. அப்படிப்பட்ட சினிமாவில், சென்னை சர்க்கார் செய்தி இலாகாவினரின் செய்திக் கதிர் மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. ஊர் பேர் தெரியாத இடத்தில் நடக்கும் செய்திகளைப் படம் பிடித்துக் காட்டும் நமது சர்க்கார் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கட்டும். தென்னாட்டிலே ஆதிகாலம் தொட்டு கீர்த்திக்குக் பெயர்போன செல்வங்களைப் பார்க்க தகுதி இல்லாத நிலையில் இன்று மனிதன் இருக்கிறான். "தென்னாட்டுச் செல்வங்கள்'' என்ற தலைப்பில் பிரசித்தி பெற்ற மதுரை, சிதம்பரம், மகாபலிபுரம், அஜந்தா, இப்படிப்பட்ட கலைச் சிற்பங்களை வரிசைக் கிரமமாகத் திரையில் காட்டினால் நாஸ்திகம் பரவி வரும் இந்தக் காலத்தில் ஆஸ்திகத்து வழிகாட்டியாக இருக்குமென நம்புகிறேன். என் எண்ணம் ஈடேறுமா?

ஜி. அமிர்தலிங்கம், கும்பகோணம்.

அழிவுப் பாதையில்......

ஆம். இன்று தமிழ்சினிமாக் கலை அழிவுப் பாதையை நோக்கி வெகு வேகமாகச் செல்கின்றது. இன்று சினிமாக் கலை தமிழின் மறுமலர்ச்சிக்கு பெரும் இழுக்குத் தேடுகின்றது. எவ்வாறு? கதைகள் அநேகமாக பிறமொழிகளில் இருந்து இரவல்! வசனங்கள் ஒரே கலப்படம். நடிப்பு அப்பட்டமான காப்பி! சங்கீதம்? இதைப்பற்றிக் கூறவேண்டியதில்லை. எல்லா சங்கீதத்தையும் கலந்து விடுகின்றனர். உதாரணமாக, ''கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி'' படத்தின் சம்பவங்கள், நடிப்பு, வசனங்கள் இவற்றில் குறிப்பிடும்படியான அளவுக்கு மேல் பிறமொழிப் படங்களிலிருந்து காப்பியடிக்கப்பட்டுள்ளன. தமிழ்க் கலை, தமிழ் இலக்கியம் முதலியவற்றிற்கு இது துரோகமாகும். இச்செயலில் ப. நீலகண்டன் போன்றோர் ஈடுபடுவது மானக்கேடு! மொழி, கலாச்சாரம், நாகரீகம்,பண்பாடு இவற்றை வளர்க்க, இவற்றின் பெருமைகளை விளக்கப் பயன்படும் சினிமாக் கலை இன்று அவைகளை அழிக்கின்றது. படமுதலாளிகளிடம் ஒரு தவறான எண்ணம் இருக்கிறது. பிறமொழிப் படங்களிலிருந்து வசனம், நடிப்பு, சங்கீதம் இவற்றைக் காப்பி அடித்தால் மக்கள் ரசிப்பார்கள் என்று எண்ணுகின்றனர். இது பெரும் தவறு. சமீபத்தில் வந்த அநேக படங்களின் தோல்வியைக் கண்டு உணர்ந்து கொள்ளவேண்டும். இனியேனும் படமுதலாளிகள் தமிழ் மறுமலர்ச்சிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடாது.

வி. விஸ்வநாதன், கொல்லம்.

ஹாலிவுட்டிற்கு அடிமையா?

திரைப் படங்களின் மூலம் கல்வி அறிவை வளர்க்க முடியும் என்பதை பட உற்பத்தியாளர்கள் நிரூபிக்க வேண்டும். இதை உணராமல் ஹாலிவுட்டைப் பின்பற்றி படங்கள் தயாரிப்பதில் பிரயோசனமில்லை. கல்யாணத்திற்கு முன் காதல் நாடகமாடுவதும் கடற்கரைப் பக்கம் காரில் செல்வதும் ஆடிப்பாடி மகிழ்வதும், கணவனை பெயரைச் சொல்லி அழைப்பதும் நம் நாட்டுப் பண்பிற்கு முரண்பட்டவை. நம் சமூகத்தின் கட்டுத் திட்டங்களை நம்முடைய திரைப் படங்கள் பல புறக்

கணிக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மை. நம் நாட்டில் ஆடைப் பஞ்சம் இருப்பதை நம் படங்கள் சித்தரிக்க வேண்டியதில்லை. ஒரு சில பெண்கள் தவறுவதை நம்முடைய படங்கள் மிகைப்படுத்த வேண்டிய அவசியமுமில்லை. அமெரிக்காவிலுள்ள வாழ்க்கை முறை விசித்திரமானது; வேடிக்கையானது. அதை யொட்டி அங்கு படங்கள் தயாரிக்கப்படுகின்றன. நாம் ஏன் அவைகளைப் பின்பற்றி சீரழிந்து ஹாலிவுட்டிற்கு அடிமையாக வேண்டும் எனக் கேட்கிறேன்!

எஸ், செல்வராஜ், பழனி.

எது கதை?

சமீபத்தில் "இல்லற ஜோதி" என்ற ஒரு தமிழ் சமூகப்படம் திரையிடப்பட்டது. இதன் பெயர்தான் புதியதாக இருக்கிறதே தவிர, கதையிலோ, கருத்திலோ யாதொரு விதமான புதுமையும் இல்லை. இப்படத்தில் வரும் சம்பவங்கள் யாவும் பழைய படங்களான "காஞ்சன' "திரும்பிப் பார்" போன்ற பழைய படங்களின் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு அப்படியே பிரதிபலிக்கின்றன. ஏற்கெனவே இம் மாதிரிப் படங்களைப் பார்த்துப் பார்த்துப் பூத்துப்போன நமது கண்களுக்கு மேலும் இம்மாதிரிப் படங்களைப் பார்ப்பதனல் ஒரு விதமான வெறுப்புத்தான் ஏற்படுகிறதே தவிர, புதிய படம் ஒன்றைப் பார்த்தோம் என்ற உணர்ச்சி சிறிதளவுகூட ஏற்படுவதில்லை. சிறந்த முற்போக்குக் கொள்கையும், பகுத்தறிவு எண்ணங்களும் கொண்ட ஒருவர் எழுதிய கதை இது என்று சொல்வதற்கு மிகவும் வருந்தவேண்டி யிருக்கிறது. ஆகையால், இனிமேலாகிலும், ஆசிரியர்களும், படத் தயாரிப்பாளர்களும் புதுமையான சம்பவங்களும், சிறந்த கருத்துக்களும் கொண்ட கதைகளையே படமாக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

சி. கே. டேவிட், மதுரை.

இரவல் பேச்சுக்கள்

சினிமாவுலகில் தற்போது "இரவல்" என்பது சர்வ சகஜமாக ஆகிவிட்டது. ஆனல், நான் சிற்சில வசனங்களைத் தான் "காப்பி" அடிப்பார்கள் என்று நினைத்தேன்—இல்லை யில்லை; காதற்

பேச்சுக்களுக்கும் பஞ்சம் வந்துவிட்டது என்பது "கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி"படத்தைப் பார்த்தவுடன் தெரிந்துவிட்டது. கதாநாயகன் தன் அன்பைக் காதலியிடம் தெரிவிக்கும் கட்டம் வந்து விட்டவுடன், நாமே இன்ன இன்ன பேச்சுக்கள் மீண்டும் வரும் எனத் தெரிந்து கொள்ளலாம். அவை என்னவென்ருல், "அந்தப் புருக்கள் என்ன பேசிக் கொள்கின்றன தெரியுமா?" என்பான் கதாநாயகன். உடனே அதைப் புரிந்து கொண்டும் புரியாதவளாக நடிப்பாள் அவள். அடுத்தது, இரு மலர்களைக் காண்பிப்பான் அவன். அதற்கும் அதே விடைதான் கிடைக்கும். அடுத்ததாக சில படங்களில் மேகங்களைக் குறிப்பிட்டுப் பேசுவது போல் இருக்கும். (இது மேற்சொன்ன படத்தில் இல்லை; மன்னிக்கவும்) இந்த பேச்சுக்கள் பக்ஷிராஜாவின் "காஞ்சன" வில் வந்ததை அனைவரும் அறிவர். ஏன் இவ்வாறு வசனகர்த்தா செய்தார் என்பது எனக்குப் புரியவில்லை? இனியேனும் இவ்வாறு ஒரே மாதிரியான, சலிப்பைத் தரும் வசனங்கள் வராது என்று நினைக்கிறேன்.

எஸ். பார்வதி, பம்பாய்-19.

குற்றவாளி யார்?

கருணாநிதியின் வசனங்களை கனல் கக்கக் கடகடவென்று பேசி களிப்பூட்டும் கணேசனல் கருணாநிதியின் பெயர் புகழ் பெற்றதா? அல்லது கருணாநிதியின் வசனத்தால் கணேசன் புகழ் பெற்ருரா? இது சிந்தனைக் குரிய விஷயமென்ருலும், திரையில் வசனம் கருணாநிதி என்றதும் கரகோஷம் கிளம்புகிறது. கணேசன் வாயினின்று வரும் ஒவ்வொரு வசனத்திற்கும், சில ஜனங்கள் மாறுபட்ட அர்த்தம் கண்டுபிடித்து, கைதட்ட ஆயத்தம் செய்து கொள்கிருர்கள். 'மனேகரா'வில், "பரசுராமன்-அவதாரம், மனேகரன்-மனிதன், பிள்ளையார் மட்டும் தாயைப் போல் பெண் கேட்டாரே", "இந்திரனுக்கு அகலிகை, சந்திரனுக்கு தாரா" "தசரதனை ஏமாற்ற கைகேயி" இந்த வசனங்கள் வரும் இடமெல்லாம் சில செவி கூர்மையுள்ள அனர்த்தவாதிகள் செய்யும் கரகோஷம் தியேட்டரைப் பிளக்கிறது. மகான்கள் செய்யும் அக்ரமத்தையும், சாதுக்களின் துராக்கிரகத்தையும், மனேகரன் வாயிலாக வெளுத்துக் கட்டுகிருர் வசனகர்த்தா. மாத்ரு பக்தியும் மங்காத வீரத்தையு முடைய, மனேகரன் அதற்காக மக்களால் பாராட்டப்படவில்லை. அவன் பேசும் இரு அர்த்தப்படும் வசனங்களுக்காகவே பாராட்டப்படுகிருன். அதற்காக இந்த ஒரு சிலர் நாஸ்திகத்தை ஆதரிப்பதாக அர்த்தமில்லை. இந்த நாஸ்திகப் பேச்சிற்குக் கை தட்டுபவர்களே, நவாபின் "ராமதாஸி"ல் பக்தியால் உள்ளம் உருகிக் கண்ணீர் விடுவதைக் கண்டிருக்கிறேன். சிலரின் அசட்டுத்தனமான உணர்ச்சியால், நாஸ்திகப் படங்கள் அதிகரிக்கின்றன, ஜனங்களின் அசட்டுத்தனத்தால் இம்மாதிரி வசனங்கள் இடம் பெருகின்றன. வசனகர்த்தாவின் புத்திசாலித் தனத்தையோ, நடிப்பவரின் நடிப்பையோ மெச்சவேண்டுமானுலும், இம்மாதிரி கட்டங்களில், இதைக் காட்டுவது தவறு.

ராஜேஸ்வரி மாத்ருபூதம்,
மயிலாப்பூர்.

குறைந்த விலையில் சிறந்த ஜவுளிகள்

ஜார்ஜட், நினன் சாரிஸ், கட்டாவ் வாயில்கள், பிரிண்டட் புடவைகள், கைத்தறி புடவைகள், வேஷ்டிகள், ஜரிகை துப்பட்டாக்கள், வேஷ்டிகள், இங்கிலீஷ் கோட்டிங், ஷர்ட்டிங், பாப்ளீன் முதலிய எல்லா ஜவுளி தினுசுகளும் கிடைக்கும்.

விஜயலக்ஷ்மி டெக்ஸ்டைல்ஸ்

148, பிராடீஸ் ரோடு, மைலாப்பூர் பஸ் ஸ்டாண்டு, **மதராஸ்-4.**

மலர்கள்

பம்பாய் நாடக விழா மலர்

பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தினர் பிரதி வருடமும் நாடக விழா நடத்தும் போது ஒரு மலரையும் கூட வெளியிடும் வழக்கம்போல இந்த வருஷமும் ஒரு மலரை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த வருஷத்திய மலர் கண்ணுக்கும், கருத்துக்கும் நல்விருந்து அளிப்பதாக இருக்கிறது. சங்கத் தலைவரின் படத்துடன் கவர்ச்சிகரமான மூவர்ண அட்டையுடன் மலரின் தோற்றம் சிறப்பாக இருக்கிறது. பல பிரபலஸ்தர்களின் ஆசிச் செய்தியுடன் மலரின் உள்ளடக்கம் ஆரம்பமாகிறது. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, எஸ். வையாபுரிப்பிள்ளை ஆகியவர்களின் கவிதையும், மற்றும் பல கட்டுரைகளும் மலரில் இடம் பெற்றுள்ளன. இந்த மலரிலுள்ள மிகச் சிறந்த அம்சம் ''இந்திய நாடக மேடைகள்'' என்ற தலைப்பில் தமிழகம், வங்காளம், குஜராத், ஆந்திரம், மகராஷ்டிரம் ஆகிய ஐந்து முக்கியமான பாஷை நாடகக் கலையைப் பற்றிய கட்டுரைகள் தாம். மற்றொரு நல்ல அம்சம், டி.கே.எஸ். நாடக கோஷ்டியைச் சேர்ந்த அனைவரையும் அறிமுகப் படுத்தியுள்ள பகுதியாகும். பம்பாய்த் தமிழ்ச் சங்கம் தொடங்கியது முதல் இன்றுவரையுள்ள சுருக்கமான குறிப்பும் — முக்கியஸ்தர்கள் பலரின் புகைப் படங்களுடன் — மலரில் இடம் பெற்றுள்ளது. மொத்தத்தில், நாடக அபிமானிகள் அனைவரும் விரும்பி பாதுகாக்க நினைக்கும் மலராக அமைந்திருக்கிறது இது.

''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' என்ற கொள்கையைக் கடைப்பிடித்த, அன்னதான சிவனைப் பற்றித் தெரியாதவர்கள் இருக்க நியாயமில்லை. அன்னாரின் நினைவு விழா, பிரதி ஆண்டும் அன்னதான சிவன் ஞாபகார்த்த சங்கத்தாரால் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வருஷக் கொண்டாட்டத்தை ஒட்டி வழக்கம்போல ஒரு மலரையும் வெளியிட்டிருக்கிறார்கள். சிவன் ஞாபகார்த்த சங்கத்தாரால் நடத்தப்படும் மாணவர் இல்லம், சிசுக்கள் நல விடுதி போன்ற பல ஸ்தாபனங்களைப் பற்றிய குறிப்புகளும், புகைப் படங்களும் இம்மலரில் கொடுக்கப் பட்டுள்ளன. அன்னதானத்தின் பெருமையையும், அதை நடத்தி வந்த சிவனின் புகழையும் பற்றிப் பலர் எழுதியிருக்கிறார்கள். முந்திய ஆண்டு விழாவுக்கு உதவிய தர்மசீலர்களின் விபரமும் மலரில் காணப் படுகிறது. இவைகளையெல்லாம் பார்க்கும் போது சிவன் ஞாபகார்த்த சங்கத்தினர் சேவைகளைப் பாராட்டுவதுடன் அது மேலும் சிறப்பாகப் பல தொண்டுகள் செய்ய நிதி உதவவும் யாருக்கும் தோன்றும்.

''மணி விளக்கு'' என்ற முஸ்லிம் மாதப் பத்திரிகை ஈத் பண்டிகையை முன்னிட்டு தனது ஜூன் இதழை ஈத் மலராக வெளியிட்டிருக்கிறது. ஈத் பண்டிகை குறித்து சில கட்டுரைகள், கவிதை, சிறு கதைகள் ஆகியவை இந்த மலரில் இடம் பெற்றுள்ளன. எட்டணா விலையுள்ள இம் மலர் கவர்ச்சிகரமாக அச்சாகியுள்ளது.

தில்லித் தமிழ்ச் சங்கம் ''சுடர் ஜய மலரை'' வெளியிட்டிருக்கிறது. பாலு பிரதர்ஸின் பளிச்சென்ற அட்டைப் படமும், உள்ளே யிருக்கும் ஒரு குறளுக்கான, அவர்களது மூன்று கலர்ப் படமும் மிகவும் சிறப்பாக இருக்கின்றன. இந்தியப் பிரதமரின் வாழ்த்துச் செய்தியுடன் உள்ளடக்கம் ஆரம்பமாகிறது. சுத்தானந்த பாரதியாரின் 'மழைப் பாட்டு' கருத்தமைந்ததாக இருக்கிறது. பிரபல ஹாஸ்யப் பத்திரிகையின் பொறுப்பாசிரியரான ''தேவனி''ன் 'சிரித்து விடுங்கள்' கட்டுரையைப் படித்து சிரிக்காமல் இருக்க முடியவில்லை. அவருக்கே உரித்தான உயர்ந்த ஹாஸ்ய பாணியில் அமைந்திருக்கிறது அக் கட்டுரை. மற்றும் பல கட்டுரைகளும், கவிதைகளும், நாடகங்களும், கதைகளும் தமிழ் நாட்டின் பல எழுத்தாளர்கள் எழுதி யிருக்கிறார்கள். தில்லி தமிழ்ச் சங்கத்தில் நடந்த நிகழ்ச்சி

கள் பற்றிய போட்டோக்களும் மலரில் இடம் பெற்றுள்ளன. மொத்தத்தில், தமிழ் மொழிமீது தில்லித் தமிழ்ச் சங்கத்தினருக்குள்ள பற்றுதலை வெளியிடுவதாகவே அமைந்திருக்கிறது இந்த நேர்த்தியான மலர்.

நல்ல மலர்களுக்கு நடுவில் ஒரு போலி மலரும் மலர்ந்திருக்கிறது. சென்னை, மோகன் அன் கம்பெனியார் வெளியிட்டுள்ள "சொர்க்கவாசல் சிறப்பு மலரை"யே குறிப்பிடுகிறேன். இதை சிறப்பு மலர் என்பதை விட 'பிழைப்பு மலர்' என்று குறிப்பிட்டிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும். இரண்டு ரூபாய் விலை வைத்துள்ள இம் மலரில் "சொர்க்கவாசல்" படத் தயாரிப்பில் சம்பந்தப்பட்ட பலரையும் பற்றிக் குறிப்புகள் கொடுத்திருக்கிறார்கள்; அவ்வளவுதான். ஒரு பிளாக்கையே புத்தகத்தில் திரும்பத் திரும்ப உபயோகித்திருப்பதைத் தவிர ஒரு புதுமையும் இல்லை இம் மலரில்.

வழி பிறந்தது

[ஆசிரியர்: அகிலன்; விலை: ரூ. 2/-: கிடைக்குமிடம்: பழனி பிரசுரம், திருவல்லிக்கேணி, சென்னை-5.]

ஆசிரியர் 'அகிலன்'து சிறு கதைகளுக்கு இலக்கிய உலகிலே என்றுமே ஒரு தனி மதிப்பு உண்டு. படாடோபமான நடையில்லாமல் தெள்ளத் தெளிய கதையைக் கொண்டு செல்லும். அவர் அதைச் சொல்லும் பாணி. இப் புத்தகத்திலுள்ள பன்னிரண்டு சிறு கதைகளும் "சிறு கதையின் லக்ஷணம்-லக்ஷியம் எப்படி இருத்தல் வேண்டும்" என்பதற்கு எடுத்துக்காட்டுகள் போல் இருக்கின்றன. புத்தகத்தின் தலை பெயராகக்கொண்ட "வழி பிறந்தது" கதை, மற்ற எல்லாவற்றையும் விட உயர்வாக இருக்கிறது என்றாலும் மற்ற பதினெரு கதைகளும் கூட தரத்தில் சிறந்து இருக்கின்றன. தமிழ் நாட்டில் ஒரு ஆசிரியரின் ஏழாவது சிறு கதைத் தொகுதி வெளிவருகிறது என்றால் அது ஒரு ஆச்சரியமே. அத்தகைய ஆச்சரிய ஆசிரியர்தான் 'அகிலன்'.

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)

Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 (தபால் செலவு தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.

பிராஞ்ச்: 134, SERANGOON ROAD, சிங்கப்பூர்.

சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES, 82, MAIN ST., கொழும்பு-11.

என் கணவர் பம்பாய்க்கு வேலை தேடிப்போனபோது, வேலை எளிதாகக் கிடைத்து விட்டது. ஆனால், வசிக்க இடம்தான் கிடைக்கவில்லை. எங்கெங்கோ தேடி அலைந்து அலுத்துப் போன பிறகு, அவருடன் வேலை செய்து வந்த ஒருவர், பரேல் என்ற இடத்தில் தமக்குத் தெரிந்த கிழவி ஒருத்தி இருக்கிறாள் என்றும், அவள் தன் வீட்டில் நாலைந்து காலேஜ் பையன்களுக்கு வசிக்க இடமளித்துச் சாப்பாடும் போட்டுக் காலங் கழித்துக் கொண்டிருக்கிறாள் என்றும், தேவையானால் என் கணவருக்கு அவளிடம் சாப்பாட்டுக்கும் இட வசதிக்கும் சிபாரிசு செய்வதாகவும் சொன்னாராம். இவர்தான் எங்கேயாவது தங்க நிழல் கிடைத்தால் போதும் என்றிருந்தாரே! ஆகவே, அன்றே அந்தப் பாட்டியம்மாளின் வீட்டில் இடமும் உணவும் பெற ஏற்பாடு செய்து கொண்டார்.

என் கணவர் சொன்னார்: "ஏதோ ஒரு பாசம், முதல் பார்வையிலே அந்தப் பாட்டியம்மாளிடம் என்னை பய, பக்தி, விசுவாசம் கொள்ளச் செய்தது. நர்மதா, அவள் பெயர் ஹரிமாயி—அவளைப் பார்த்த உடனே, என்னை வளர்த்து ஆளாக்கிவிட்ட உன் அம்மாவின் நினைவுதான் வந்தது. என் பாச நினைவு வீண்போகவில்லை. அங்கே வசித்துவந்த ஆறு பேர்களில், என்னிடம் மாத்திரம் அவர்கள் அதிக அன்பு காட்டி வந்தார்கள். அங்கே குடிபுகுந்த மறுநாளே என்னை அழைத்து அருகில் உட்கார்த்தி வைத்துக்கொண்டு, என் வரலாறு அனைத்தையும் கேட்டு அறிந்துகொண்டார்கள். உடனே என்ன சொன்னார்கள், தெரியுமா? 'பாவம்; பார்வையற்ற அந்தப் பெண்ணைக் கல்யாணமான புதிதிலே தனியே விட்டு வர உனக்கு எப்படியடா அப்பா மனசு வந்தது. என்னதான் பெற்றவள் இருந்தாலும், இந்தப் பிராயத்தில், அதிலும் கர்ப்பமாயிருக்கும் ஒரு இளமங்கைக்கு கணவன் அருகில் இருப்பதுபோன்ற ஆறுதலும் இன்பமும் ஏற்படுமா?'

"ஆனால் மாயி, நான் இங்கே வந்து இந்த வேலையைத் தேடிக் கொண்டிராவிட்டால், குடும்பச் செலவைச் சமாளித்திருக்க முடியாதே" என்று, பதில் சொன்னேன் நான்.

"அப்படியானால், அவளையும் கூடவே அழைத்து வந்திருக்க வேண்டும்" என்றார்கள் ஹரிமாயி.

"சரிதான் போங்கள்; நான் ஒருவன் வசிப்பதற்கே இந்தப் பம்பாயில் இடம் பிடிக்கத் திண்டாட்டமாகப் போய் விட்டது. இந்த அழகில் அவர்களையும் அழைத்து வந்திருந்தால் நாடோடியாக நடுத்தெருவில் வாழ நேரிட்டிருக்கும்."

"அப்படிச் சொல்லிவிடாதேடா அப்பா; கடவுள் கருணையுள்ளவர். உன் மனைவி கண்ணற்றவள் என்பதற்காகவேனும் உங்களுக்கு எங்காவது இடம் கிடைத்துத் தானிருக்கும். போனால் போகிறது; இப்பொழுதுதான் இடம் கிடைத்துவிட்டதே; இனியாவது உடனே புறப்பட்டுப்போய் அவர்களை அழைத்து வந்துவிடேன்."

அவர்கள் அன்பைப் பார்த்து ஆச்சரியமடைந்த நான் "மாயி!" என்று கூவினேன். "நன்றாய்ச் சொன்னீர்கள். அவர்களை அழைத்து வந்து இந்த வீட்டில் குடி வைப்பதென்றால், உங்களுக்குப் பிழைப்பளித்துவரும் இந்த மாணவர்களை வெளியேற்றவேண்டி வருமே."

ஹரிமாயியின் கண்களில் கண்ணீர் பொங்கிற்று. அவர்கள் சொன்னார்கள்: "அப்பா ரங்காராம், மனிதருக்கு வயிறு நிறைந்து விட்டதால் மாத்திரம் மன நிம்மதி ஏற்பட்டு விடுவதில்லை. வயிற்றையும் மிஞ்சிய சில துயரங்களை ஆற்றிக்கொள்ள அவர்கள் மனசு ஏங்கிக் கொண்டிருக்கும் என்பதைச் சிறுவனான நீ அறிந்திருக்க மாட்டாய். உடலை உழைத்து வேலை செய்பவன் எப்படிச் சில சமயங்களில் லாகிரிப் பொருள்களில் தன் கஷ்டத்தை மறக்க முயற்சிக்கிறானோ, அவ்வாறே மனப்பளுவை மாற்றச் சில பேர்கள் எந்த லாகிரியை உபயோகிக்கலாம் என்று தேடி அலைவார்கள். என் கதை உனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால், ஏன் உன் மனைவியை இங்கே வசிக்க அழைத்தேன் என்பதைப் புரிந்து கொண்டிருப்பாய்.

"ரங்காராம், உன் மனைவியை ஒத்த வயசில் எனக்கு ஒரு பெண் இருந்தாள், அப்பா. ஏழையான நான் அரும்பாடுபட்டுப் பணம் சேர்த்து அவளை ஒருவாலிபனுக்கு வாழ்க்கைப் படுத்தினேன். அவ

134148

னும் உன்னைப்போலவே, பிழைப்புத் தேடப் போகிறேன் என்று பட்டாளத்தில் சேர்ந்துவிட்டான். அவன் சைனியத்தில் சேர்ந்த சமயம் என் மகள் கருவுற்றிருந்தாள். கணவனைப் பிரிந்த ஏக்கத்திலே என் கண்மணி பாதி உருகிவிட்டாள். அவன் யுத்த அரங்கிலிருந்து மீண்டு வருவானா என்ற ஏக்கம் அவளைச் சதா வாட்டி வந்தது. கடைசியில் அந்த இடைவிடா ஏக்கத்தினால் அவளுக்குக் கருச் சிதைவு ஏற்பட்டு இறந்து போனாள். அவள் கணவனும் போர் முனையில் உயிர் நீத்து விட்டான். 'பேரன் பிறக்கப் போகிறான்; அவனுக்கு என் கணவரின் பெயரான திவாகரன் என்ற நாமமிட்டு, மடியில் வைத்துக் கொஞ்சி ஆனந்தமடைய வேண்டுமென்று நான் கட்டி வந்த மனக்கோட்டைகள் மடிந்து மண்ணாயின. அது முதல் எனக்கு ஒரு ஏக்கம்; ஒரு ஆசை. என் மகளை ஒத்த பெண் ஒருத்தியை என்னுடன் வைத்து வளர்த்து, அவள் குழந்தைக்காவது நான் இச்சித்த பெயரிட்டுச் சீராட்டி, ஆனந்தமடைய வேண்டுமென்று.

"அதனால்தான் நேற்றுப் பழக்கமான உன்னிடம் வெட்கத்தைவிட்டு இந்தக் கோரிக்கையைச் சமர்ப்பித்தேன். ஆகவே, அப்பா, ஆலோசியாதே; என்னை அயல் மனுஷி என்றெண்ணித் தயங்கவும் தயங்காதே. நேற்று வரையில் நீ அந்தக் கங்கா மாயின் பிள்ளையாக இருந்தாய்; இன்றுதொட்டு நீ என் பிள்ளை; என் மாப்பிள்ளை."

"நர்மதா, ஹரிமாயியின் இந்த அன்புக் கோரிக்கையை உடனே நிறைவேற்றிவிடவே நான் விரும்பினேன். ஆனால் உங்களை அழைத்துவர வேண்டுமென்றால் நான் சாலியத்துக்கு வந்தாக வேண்டுமே! வேலையில் சேர்ந்து முழுதாக ஒரு மாதங்கூட ஆகாத நான் எப்படி அதற்குள் லீவு கேட்க முடியும்? இதை விளக்கி, சந்தர்ப்பம் அனுமதிக்கும்போது உங்களை அழைத்து வந்து ஹரிமாயின் விருப்பத்தை நிறைவேற்றுவதாக வாக்களித்தேன்.

"ஆகவே நர்மதா, நம குழந்தைக்கு ஹரிமாயி விரும்பிய பெயரையே சூட்ட வேண்டும். கிட்டத்தட்ட உன் அம்மாவும் அதே பெயரைத்தானே பிரேரித்திருக்கிறார்கள்? தினகரன் என்பதற்கும் திவாகரன் என்பதற்கும் ஒரே ஒருஎழுத்துத்தானே வித்தியாசம்" என்றார்.

இப்படியாக என் மகனுக்குத் திவாகரன் என்று நாமகரணம் செய்தோம். அந்தப் போக்கிரியோ, அப்பெயரைச் சூட்டிய பாட்டியைக் காணப்போகும் ஆனந்தத்தில் தாயையே புறக்கணிக்கத் தலைப்பட்டு விட்டான்.

நாங்கள் இப்படிப் பேசிக்கொண்டிருந்தபோது, கப்பலில் சாப்பாடு தயாராகிவிட்டதற்கு அறிகுறியாக மணி அடிக்கப்பட்டது. 'சமுத்திர ராணி' பெரிய கப்பல்; ஆகவே அதனுள்ளே ஹோட்டலும் இருந்தது. உணவு தேவையானவர்கள் டிக்கட்டு வாங்கும் போதே குறிப்பிட்ட ஓர் தொகையைக் கட்டிவிட்டால், கட்டுச் சோறு கட்டிச் சுமக்க வேண்டிய சிரமமின்றி, கப்பலிலே சுடச்சுட வேளை தவறாமல் உணவு கிடைத்துவிடும். எங்கள் பிரயாணம் கெடுபிடியில் நிச்சயிக்கப்பட்டதாலும், கைக்குழந்தையுடன் கண்ணற்ற நான் வழிப்பயணத்துக்குப் பெருத்த அளவில் உணவு தயாரித்து எடுத்துக் கொள்ளும் நிலையில் இல்லாததாலும், ஹோட்டல் உணவுக்கே ஏற்பாடுகள் செய்து கொண்டு வந்திருந்தோம். திவாகரனுக்கு மாத்திரம் ஒரு பாட்டில் ஹார்லிக்ஸ் எங்கள் கைவசம் இருந்தது.

கப்பலில்தான் சாப்பாடு ஏற்பாடுகள் எவ்வளவு நேர்த்தியாக இருந்தன! அப்பொழுது மணி பனிரெண்டுதான் ஆகியிருந்தது. 'டாண்' என்று குறிப்பிட்ட நேரத்தில் மணி அடித்துவிட்டார்கள். சாப்பாடும் அப்படி ஒன்றும் மோசமாக இல்லை.

கணவர், குழந்தையை என்னிடம் தந்துவிட்டு, பிளாஸ்கையும் ஸெட்டையும் எடுத்துக் கொண்டு ஹோட்டல் இருந்த கீழ்த் தளத்துக்குச் சென்றார். தமது சாப்பாட்டை முடித்துக்கொண்டு எனக்கு ஸெட்டில் உணவும், திவாகரனுக்கு ஹார்லிக்ஸ் கரைத்துப் புகட்ட பிளாஸ்கில் வெந்நீரும் வாங்கிக் கொண்டு திரும்பி வந்தார்.

வழக்கமாக அவரே ஹார்லிக்ஸைக் கரைத்து என்னிடம் கொடுப்பார்; நான் குழந்தைக்குப் புகட்டுவேன். ஆனால் இன்று அவர் அதைக் கரைத்துவிட்டு, "சரி, குழந்தையை இப்படிக் கொடு"

என்று அவர் சொன்னது என்னை இன்னும் வியப்பிலாழ்த்திற்று.

,,கொஞ்சம் இருங்கள் ஆகாரத்தைக் கொடுத்து விட்டுத் தந்து விடுகிறேன்.''

“ஆகாரம் கொடுப்பதற்குத்தான்; அவனை என்னிடம் கொடு என்றேன்” என்று கேட்டபோது நான் சற்றே வியப்படைந்தேன்.

“என்ன? நீங்களா அவனுக்குப் பால் புகட்டப் போகிறீர்கள்?”

“ஆமாம்; சற்று முன்பு பிரமாதப் படுத்தினையே—வயிறு பசித்தால் உன் ஒருத்தியால் தான் அவனுக்குப் பால் கொடுக்க முடியும் என்று. எங்கே, அவனை இப்படிக் கொடு; எந்த அப்பாவிடம் அவன் ஒட்டிக் கொண்டிருக்கிறானே, அந்த அப்பாவே அவனுக்குப் பால் புகட்டுகிறாரா, இல்லையா, என்பதைப் பார்த்து விடுவோம்.”

“ஐயே! வெட்கமாக இல்லையே உங்களுக்கு இப்படிப் பேச.”

“ஏனம்மா, பெண்கள் மாத்திரம் தான் குழந்தைகளுக்குப் பால் கொடுக்க வேண்டுமென்று சட்டமா, என்ன?”

நான் சிரித்தேன்; “இதுகூடத் தெரியாத நீங்கள் என்ன ஆண்பிள்ளை. நான் அப்பொழுது சொன்னது இந்தப் பால் புகட்டுவதையல்ல.......”

“பின்?”

நான் கேலிக் கோபத்துடன் முகத்தை வளைந்துத் திருப்பிக் கொண்டு, “பார்த்தீர்களா, என்னைச் சீண்டுகிறீர்களே” என்றேன்.

அவருக்கு இப்பொழுதுதான்விஷயம் புரிந்தது; “ஓ அதுவா?” என்று வெட்கம் தோயக் கூறினார்.

குழந்தையை வாங்கி ஆகாரத்தைப் புகட்டி அவன் அப்பாவிடம் கொடுத்துவிட்டு நான் சாப்பாட்டை முடித்துக் கொண்டேன்.

அன்று காலை முதல் வானம் மூடிக் கிடப்பதாக என் கணவர் சொன்னார். அதனால் தானோ என்னவோ காற்று நிலைத் திருந்தது. நாங்கள் தங்கியிருந்த இரண்டாம் தளத்தில் ஒரே புழுக்கமாயிருந்தது. . . . .

“வாயேன் நர்மதா; நாம் மேல் தளத்துக்குப் போய், சற்றுக் காற்று வாங்கி வரலாம்” என என் கணவர் அழைத்தார்.

“சரி” என்று நான் அவர் பின் கிளம்பினேன்.

கட்பலின் மேல் தட்டில் எங்களைப் போலவே பல பிரயாணிகள் காற்று வாங்க வந்திருந்தது, அங்கு கல-கலத்த பேச்சிலிருந்து தெரிந்தது.

“இன்று ஒரு வேளை மழை பெய்தாலும் பெய்யலாம்” என்றார் அவர்.

“மழை” என்ற சொல்லைக் கேட்டதும் என் மனசு துணுக்குற்றது. கல்யாண சமயத்தில் ‘இழவு’ என்ற சொல் எழுப்பும் அபசுரத்தைப்போல அது எனக்கு இந்தச் சந்தோஷ சமயத்தில் ஒலித்தது. ஆம்; என் வாழ்வையே இருள் மயமாய் அடித்துவிட்ட கொடிய சைத்தான் அல்லவா மழை!

“என்ன பேசாமல் இருக்கிறாய் நர்மதா? ஏதாவது பேசு, என் கண்ணே” என்றார் அவர்.

" என்ன பேச?"

" ஏதாவது பேசு. நீ எதைப் பேசினு லும் அது எனக்குத் தேனுகத் தித்திக் கிறது" என்ருர் கொஞ்சலாக.

" இல்லே; மழை என்றதும் எனக்குப் பயமாகப் போய்விட்டது. இந்த நடுக் கடலில் மழை பிடித்துக் கொண் டால்....?"

" பிடித்துக் கொண்டால் என்ன வாம்? இதுதான் வீட்டைவிட உயர் ந்த பாதுகாப்பாயிற்றே நர்மதா. கப்பல் பிரயாணத்தில் மழைக்காகத் துளி கூடக் கவலைப்பட வேண்டியதில்லே; இங்கே பயப்பட வேண்டியது புயல் ஒன்றுக்குத்தான்."

என் கணவர் அந்த வார்த்தையைச் சொல்லி வாய் மூடு முன்பே அதன் முன் அறிவிப்பு வந்து விட்டது. கப்ப லின் சங்கு திடீரென ஒலித்தது. "நடுக் கடலில் காரணமின்றி ஏன் சங்கு ஊது கிறது?" என்று வியந்த என் கணவரு க்கு விடையுடன் அங்கு தோன்றினுன், கப்பல் சிப்பந்தி ஒருவன்.

"மேல் தளத்திலிருக்கும் பிரயாணி கள் எல்லோரும் உடனே கீழ்த் தளத் துக்கு இறங்கி வரவேண்டு மென்று உத்தரவு" எனப் பறையறி வித்தான்.

"எதற்காக?" என்ற வினவுடன் எல்லோரும் கீழே இறங்கிச் சென்ருேம். அங்கே இதரத் தளங்களிலுள்ள பிர யாணிகளும் குழுமியிருந்தனர். ஒரே பரபரப்பும், ஒரே- பேச்சுக் குரலுமாக இருந்தன. ஆம்; அங்கே நின்ற அத் தனை பேர்களின் உள்ளங்களிலும் அப் பொழுது புயல் வீசிக் கொண்டிருந்ததே தான் அதன் காரணம்.

எங்கோ பத்து மைல்களுக்கு அப்பா லிருந்து, எங்கள் கப்பல் செல்லும் திசையை நோக்கி ஒரு புயல் வந்து கொண்டிருக்கிறதாம். அதன் வேகம், சக்தி, நீடிப்பு இவைபற்றி எதுவும் திட்டமாகத் தெரியாததால், முன்னெச் சரிக்கையாக, பிரயாணிகளை மீட்சிப் படகுகளின் மூலம் கரை சேர்த்துவிடப் போகிருர்களாம்.

நாங்கள் சென்ற சமயம் கப்பல் தலே வர் சொல்லிக் கொண்டிருந்தார், "ஒரு வரும் கலவரப்பட வேண்டாம். எங்க ளிடம் பத்து மீட்சிப் படகுகள் இருக் கின்றன. ஒவ்வொன்றிலும் இருபது பிரயாணிகள் ஏறிக் கொள்ளலாம். உங்

களில் ஒருவர் விடாமல் புயலுக்கு முன் பத்திரமாகக் கரை சேர்த்து விடுவோம். நல்ல வேளையாக இப்பொழுது நம் கப்பலில் சிப்பந்திகள் உட்பட இருநூறு பிரயாணிகளுக் குள்ளாகவே இருக்கிறோம். உங்கள் சாமான்களை அப்படி அப்படியே விட்டு விட்டு, வீண் திகில் கொள்ளாமல், அவசரப்படாமல், ஒவ்வொருவராக அடித்தளத்துக்கு இறங்கித் தயாராக நிற்கும் படகுகளில் ஏறிக் கொள்ளுங்கள்! புயல் முடிந்த பிறகு மீண்டும் நம் பிரயாணம் தொடங்கும்.''

"கடவுளே, இது என்ன சோதனை!'' என்று புலம்பினேன், நான். ஆனால் என் கணவர் என்னை அவ்வாறு புலம்பிக் கொண்டிருக்க விடவில்லை. கைகளைப் பற்றி இழுத்துக் கொண்டு நாங்கள் தங்கியிருந்த இடத்துக்குச் சென்றார். திவாகரனின் ஆகாரமான ஹார்லிக்ஸ் பாட்டிலையும், பிளாஸ்கையும் ஒரு பையில் போட்டு என் கைகளில் திணித்தார். பிறகு, என்னை இட்டுக் கொண்டு அடித்தளத்துக்கு இறங்கினார்.

படகுகள் புறப்பட்டன. அனைவரிடையும் "நாம் பத்திரமாகக் கரை போய்ச் சேருவோமா?'' என்ற விசாரம் உதைத்துக் கொண்டுதானிருந்தது. எங்கள் பயத்துக்கேற்ப, அயர்ந்து கிடந்த கடல் கொஞ்சங் கொஞ்சமாக அசைந்து கொடுக்க ஆரம்பித்தது. செத்துக் கிடந்த வான வெளியிலிருந்து சிறு ஊதலாகக் கிளம்பிய காற்று சிறுகச் சிறுகப் பெரிதாகி வந்தது. படகைச் செலுத்தியவர்கள் தங்கள் பலங் கொண்ட மட்டும் துடுப்புகளை வேகமாகவே பாய்ச்சினர். ஆயினும்—

கரையை எட்ட இன்னும் அரை மைல் இருக்கும்போது அந்தக் கொடிய புயல் வந்தே விட்டது. ஐயையோ! அதன் வேகத்தை என்னவென்று சொல்ல? அலையிடைத் துரும்பாகப் படகுகள் ஆடித் தத்தளித்தன. 'சோ' என்ற பேரிரைச்சலுடன் வீசிய சண்டமாருதம் அலைகளைச் சுருட்டிப் படகுகளின் மீது அடித்தது. படகெல்லாம் தண்ணீர். அதிலிருந்தவர்கள் எல்லோரும் தெப்பத்தில் மிதந்தனர். எங்கும் ஒரே பீதிக் கூச்சல்! ஒரே அழுகுரல்! ஒரே பிரலாபம்!

திவாகரன், பாவம் குழந்தை, காற்றின் வேகத்தைத் தாங்கமாட்டாது மிரண்டு கதறிக் கொண்டிருந்தான். அவனை மார்போடு அணைத்துக் கொண்டிருந்தார் என் கணவர். அவரது இடுப்பை வளைத்துக் கொண்டு நான் ஒண்டிக் கொண்டிருந்தேன்.

"ஆண்டவனே, ஆசை காட்டி மோசம் செய்யப் போகிறாயா? அவிந்த விளக்குக்குத் திரியிட்டு, எண்ணெய் விட்டு, ஏற்றி வைத்து, அது எரிய ஆரம்பிக்கும்போது, தூக்கிக் கடலில் விட்டெறியப் போகிறாயா? என் ஆசைக் கனவுகளைச் சிதைத்து என்னை இக்கடலின் அடித்தளத்தில் சிறை செய்யப் போகிறாயா?

"ஐயோ! திவாகரா; முளைத்து மூன்று இலைகள் விடாத உன் முடிவும் அண்மையில் நெருங்கி விட்டதா?

"என் அன்பரே; இந்தக் கபோதியை மணந்து கடுகளவு சுகத்தையும் நுகராத தாங்கள், அவளுடைய தலைவிதி காரணமாக, அவளுடனே இக்கடலில் கலந்துவிடப் போகிறீர்களா?''

நான் புலம்பினேன்; புலம்பினேன்; புலம்பிக் கொண்டே இருந்தேன்.

"நர்மதா'' என்றார் என் கணவர். திடீரென்று என் தோளைப் பிடித்து உலுக்கி, "என்னைக் கெட்டியாகப் பற்றிக் கொள்.''

"ஏன்? என்ன?'' என்று வீரிட்டேன் நான்.

"அதோ! ஒன்று, இரண்டு, மூன்று படகுகள் கவிழ்ந்து விட்டன.''

நான்காவதாக—

ஆம்; அது எங்கள் படகின் முறை. ஒரு சுழற்றல்; அவ்வளவுதான்; மலை போல் எழுந்த ஓர் அலைக்கடியில் அது தஞ்சமடைந்தது. படகு தலைகுப்புறச் சாய்ந்த வேகத்தில் ஏதோ ஒன்று பலமாக என் கைகளைத் தாக்கிக் கணவரின் உடலைச் சுற்றியிருந்த கைகளைத் தள்ளிவிட்டது. நான் மூழ்கினேன்; மூழ்கிவிட்டேன். ஐயோ, மூச்சுத் திணறுகிறதே! என்னைக் காப்பாற்றுவார் யாருமில்லையா? ஓ திவாகரா, நீ எங்கே? எங்கே உன் அப்பா?

இதுதான் என் கடைசிப் பேச்சு; அப்பொழுது விட்ட மூச்சே அன்று என் கடைசி மூச்சு!

(தொடரும்)

சரிகை வேஷ்டி

'மதி'

சின்னம்மா, எதிரில் கிடந்த அழுக்குத் துணிகளை எடுத்து தனித் தனியாகப் பிரித்து இன்னின்ன உருப்படி என்று சொல்லிக் கொண்டிருந்தாள். மாலதி நோட்டுப் புத்தகத்தில் அவற்றின் பெயர்களைக் குறித்துக் கொண்டிருந்தாள்.

"அம்மா! முன் சலவையில் வராத என்னுடைய புது புஷ் கோட்டு இப்போதாவது வந்ததா?" என்று கேட்டுக் கொணடே வந்தான் கிட்டு.

"ஊ ஹூம்..........காணேம்!" என்ருள் மாலதி. "ஏன் சின்னம்மா, உன் மகன் அழகேசனுக்கு என்னுடைய புதிய புஷ்கோட்டை போட்டு விட்டாயா?" என்று சின்னம்மாவைப் பார்த்துக் கேட்டான் கிட்டு. "இல்லீங்கசாமி, அவனுக்கு உங்க புஷ் கோட்டு சரியாகக்கூட இருக்காதே? துறையிலே தோய்க்கும்போது தவறிப் போய் ஆற்ருேடு போய்விட்டோதோ என்னமோ" என்ருள் சின்னம்மா, அழமாட்டாத குறையுடன்.

"ஆமாம், புதுத் துணியாகப் பார்த்து தான் ஆற்றில் போகும். அடுத்த தடவை துணி வந்தால் ஆச்சு, இல்லாவிட்டால் துணி விற்கும் விலையிலே அதற்கு ஐந்து ரூபாயாவது பிடித்துக் கொண்டு விடுவேன். என்ன?" என்ருள் மாலதி.

"அவ்வளவு ரூபா பிடிச்சுக்கிட்டா ஏழையான நான் என்ன அம்மா செய்வேன? ஏற்கெனவே ஒருத்தர் வீட்டிலே பத்து ரூபாய் பிடிச்சுகிட்டாங்க, சரிகை வேஷ்டியைக் காணேமின்னு! தவறிப்போய் யார் வீட்டிலே கொடுத் தேனே? உங்களைப் போல மவராசங் கன்னு திருப்பிக் கொடுத்துடுவாங்க; எந்தப் பனுடை கையிலே ஆப்புட்டுதோ?"

சின்னம்மா சொன்ன இந்த வார்த்தைகள் ஏனே மாலதியின் உள்ளத்தை சுருக்கென்று தைத்தன. அவள் போன பிறகும் கூட அப்படியே பிரமை பிடித்து உட்கார்ந்து விட்டாள் மாலதி. சென்ற மாதம் நடந்த அந்த விஷயத்தைப்பற்றி விவாதிக்கத் தொடங்கியது அவள் மனம்.

ஒரு மாதத்துக்கு முன்னுல் மாலதியின் தம்பி விஜயன் வந்திருந்தான். மாலதி அன்று பீரோவில் துணிகளை அவள் அடுக்கிவைத்துக் கொண்டிருந்தாள்.

"ஏன் அக்கா! இவ்வளவு பட்டையாக சரிகை போட்ட வேஷ்டியை அத்திம்பேர் கட்டுகிருரா?" என்று கேட்டுக் கொண்டே அவன் ஒரு சரிகை வேஷ்டியை எடுத்துப் பார்த்தான். மாலதியும் அப்போதுதான் அந்த வேஷ்டியைப் பார்த்தாள்.

"ஏது? நானே கவனிக்கவில்லை. நீ கவனித்து விட்டாயே! யாராவது அன்பளிப்பாகக் கொடுத்தார்களோ என்னவோ! அத்திம்பேர் இவ்வளவு அகல சரிகைக் கரை போட்ட வேஷ்டியை வாங்கி நான் பார்த்ததேயில்லை!" என்ருள் அவளும்.

"அக்கா, அத்திம்பேர் ஊரில் இருந்தால் அவரையே கேட்பேன். இன்று எனக்கு அவசியம் இந்த சரிகை வேஷ்டி வேணும். இதை வேணுமானல் விலைக்கே எடுத்துக் கொள்ளட்டுமா?"

"விலைக்கா?"

"ஆமாம், அக்கா! புதிதாக வாங்கப் போனல் முப்பது ரூபாய்க்குக் குறையாது. நான் பதினைந்து ரூபாய் தருகிறேன், என்ன?"

"அது சரி, உன் அத்திம்பேர் வந்து கோபித்துக் கொண்டால்...........?"

"கோபித்துக் கொண்டால் எழு

தேன், அக்கா! வேஷ்டியை பார்சல் பண்ணி விடுகிறேன்." அதற்குமேல் மாலதியால் மறுக்க முடியவில்லை. "ஆகட்டும்" என்று உத்தரவு கொடுத்து விட்டாள். விஜயன் ஊருக்குப் போய் இரண்டு நாட்கள் கழிந்தவுடன் மாலதியின் கணவர் வந்தார்.

மாலதி வேஷ்டியைப்பற்றி அவரிடம் சொன்னுள்.

"சரிகை வேஷ்டி! அதுவும் அகலக் கரையா? அம்மாதிரி வேஷ்டியை நான் கட்டுகிற வழக்கமே கிடையாதே! கனவு கண்டாயா என்ன?" என்று சொல்லி விட்டார் அவர்.

"இது என்ன குட்டிச்சாத்தான் வேலையா?" என்று எண்ணினுள் மாலதி. நேற்று சின்னம்மா சொல்லிய அந்த சுடு சொல் அவள் கவனத்திற்கு வந்தது. "ஒரு வேளை அந்த வேஷ்டி அவளுடையதா யிருக்குமா" என்று தோன்றிற்று. உடனே 'எந்த பன்னுடை கையிலே ஆப்புட்டுதோ!' என்று சின்னம்மாள் சொன்ன சுடு சொற்கள் மாலதியின் காதில் ரீங்காரம் செய்தன. பத்து ரூபாய்! சின்னம்மாளுக்கு எப்படிப்பட்ட நஷ்டம் அது. வேஷ்டியைக் கொடுத்து விடலாம் என்ருலும் விஜயன் அதைக் கட்டிக்கொண்டு ஊருக்குப் போய்விட்டான். இரண்டாவதாக "இத்தனை நாளாக உங்கள் வீட்டிலேயா இருந்தது?" என்று கேட்பாளே சின்னம்மாள்! பிறகு அவளுக்கு நம் பேரில் எந்தத் துணி காணமல் போய் விட்டாலும் அவநம்பிக்கை உண்டாகும்? இப்படி யெல்லாம் என்னவெல்லாமோ சிந்தித்துக் கொண்டிருந்த மாலதி ஒரு முடிவுக்கு வந்த பிறகு, "ஆமாம் அப்படித்தான் செய்ய வேண்டும்" என்று தீர்மானித்துக் கொண்டாள்.

அடுத்த நாள், "சாமி உங்க புஷ்கோட்டு ஆப்புட்டுக்கிடுச்சுங்க!" என்று சந்தோஷத்துடன் சொல்லிக் கொண்டே அதைக் கிட்டுவிடம் கொடுத்தாள் சின்னம்மா.

இந்த சமயத்தில் சின்னம்மா கொஞ்சம்கூட எதிர்பாராத விதமாக ஒரு "பத்து ரூபாய்" நோட்டை எடுத்து அவளிடம் நீட்டினுள் மாலதி.

"எதுக்கு அம்மா! சில்லறை மாத்தணுங்களா?" என்று கேட்டாள் சின்னம்மா.

"இல்லையடி, ரொம்பநாளாக உனக்கு இனம் கொடுக்கணும்னு எண்ணம். இன்னிக்குதான் வேளை வந்தது. இந்தா எடுத்துக்கொள்" என்ருள் மாலதி.

சின்னம்மா தன் பல் வரிசையைக் காட்டி "ரொம்ப க்ஷேமமாய் இருக்கணும்" என்று மாலதியை வாயார வாழ்த்தினுள்.

"அம்மா, அன்னிக்கு சரிகை வேஷ்டி காணும் என்று சொன்னேனே, அதுவும் அவர்கள் வீட்டிலேயே இருந்ததாம். தப்பிதமாகச் சொல்லிவிட்டார்களாம்" என்ருள் சின்னம்மா.

"என்னடி உளருகிருய்" என்று கத்தினுள் மாலதி.

"அதுதானுங்க அந்த சரிகை வேஷ்டி அவர்கள் வீட்டில் உள்ள அழுக்குக் கூடையில் இருந்ததாம். நேற்று அவர்கள் வீட்டில் துணி எடுக்கப் போன போது சொன்னுர்கள்" என்ருள் சின்னம்மா.

மாலதிக்குத் தலை சுற்றுவது போல் இருந்தது. மயக்கமாகக் கீழே உட்கார்ந்து விட்டாள்.

அப்பொழுது "தபால்" என்று தபால்காரன் கூப்பிடவே சின்னம்மா அதை வாங்கிக் கொண்டுபோய் மாலதியிடம் கொடுத்தாள். அது விஜயனிடமிருந்து வந்திருந்தது.

"அன்புள்ள அக்காவுக்கு,

அந்த சரிகை வேஷ்டி என்னுடையதுதான். அத்திம்பேர் இங்கு வந்திருந்தபோது தவறுதலாக அதை அங்கு எடுத்துக்கொண்டு போய் விட்டார். எனது வேஷ்டியை நானே ரூபாய் கொடுத்து வாங்கினதைப் பார்தது எனக்கே வேடிக்கையாக இருக்கிறது. இப்படிக்கு, அன்புள்ள தம்பி விஜயன்."

இதைப் படித்த மாலதிக்கு பாதி அழுகையும், பாதிச் சிரிப்பும் கலந்து வந்தன. ஆனுல், சின்னம்மாவின் கையில் இருந்த அவள் கொடுத்த அந்த புத்தம் புதிய "பத்து ரூபாய்" நோட்டு சரிகையைப் போல் மின்னிற்று.

இது செய்தி

சினிமாவை ஆட்சேபித்து மகஜர்

சினிமாக்களினால் ஏற்படும் கெடுதல்களை ஒழிப்பதற்கான தக்க நடவடிக்கைகளை இந்திய சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டுமெனக் கோரி, சென்ற மாதம் 19-ம் தேதி, டில்லியைச் சேர்ந்த தாய்மார்கள் பிரதமர் நேருஜியிடம் ஒரு மகஜரை சமர்ப்பித்திருப்பதாகத் தெரிகிறது. இம்மகஜரில் 13,000 தாய்மார்கள் கையொப்ப மிட்டுள்ளார்களாம். இதற்கான நடவடிக்கைகளை எடுக்க சர்க்கார் போதிய சட்டமியற்ற வில்லையென்றும், ஆகவே, இப்போது சட்டமியற்றப்பட வேண்டியது மிக அவசியமாகிறது என்றும், இந்த மகஜரில் வற்புறுத்தப் பட்டுள்ளதாகத் தெரிகிறது. கையெழுத்துப் போடத் தெரியாத பல தாய்மார்கள், இந்த மகஜரில் கையொப்பம் வைக்க அனுமதிக்கப்படவில்லை யென்றும் கூறப்பட்டது. தற்காலத்தில் சினிமாவினால் குழந்தைகள் எப்படிக் கெட்டழிகின்றனர் என்பதும் இந்த மகஜரில் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

தென் அமெரிக்காவில் "நன்னே முன்னே"

சிறு குழந்தைகள் பற்றிய சோகக் கதையும், தத்தா தர்மாத்காரி டைரெக்ட் செய்ததுமான "நன்னே முன்னே" என்ற ஹிந்திப் படம் தென் அமெரிக்காவிலுள்ள சிலியில் திரையிடப் படுமெனத் தெரிகிறது.

இமயம் முதல் குமரிவரை

இந்தியாவில் அழகும், மனோரம்மியமும் வாய்ந்த இடங்கள், சரித்திர முக்யத்வம் வாய்ந்த இடங்கள் ஆகியவற்றின் தொகுப்பான இந்தியாவைப் பற்றிய அமெரிக்கப் படம் ஒன்று யு. எஸ். விளம்பர ஸ்தாபன புத்தகாலயத்தில் சென்ற மாதம் 4-ம் தேதி திரையிடப்பட்டது. திரையிடப்பட்ட இப் படம் யு. எஸ். விளம்பர ஸ்தாபன கலாசார விவகார உதவி டைரெக்டர் ராபர்ட் ஜே. மாக் அவின்ட்ரால், அவர் இந்தியாவில் இரண்டு வருஷ காலம் தங்கியிருந்தபோது தயாரிக்கப்பட்டது. வடக்கே இமயம் முதல் தெற்கே குமரிவரை உள்ள முக்யமான இடங்கள் இந்தப் படத்தில் அடங்கியிருக்கின்றன.

முதல் தேசீய நாடக விழா

புது டில்லியில் வருகிற நவம்பர் மாதத்தில் நடக்க விருக்கும் முதல் தேசீய நாடக விழாவுக்கு வர சம்மதித்து இதுவரை 300க்கு மேற்பட்ட நாடககோஷ்டிகளிடமிருந்து மனுக்கள் வந்துள்ளனவாம். இன்னும் 200 கோஷ்டிகள் விழாவைப்பற்றித் தகவல் விசாரித்துள்ளன. இந்திய சர்க்காரின் சங்கீத நாடக அகாடமியின் ஆதரவில் டில்லி நாட்டிய சங்கம் இவ்விழாவை நடத்துகிறது. இதற்கு ரூ. 30,000 செலவு பிடிக்கும் எனத் தெரிகிறது. நாடோடி, சம்பிரதாய, நவீன நாடகங்கள் என விழாவில் பாகுபாடாக நாடகங்கள் நடிக்கப்படும். தமிழ், தெலுங்கு, கன்னடம், சம்ஸ்கிருதம், ஹிந்தி, முதலிய பல மொழிகளில் நாடகங்கள் நடிக்கப்படும். தேசீய நாடக விழா கமிட்டி குழந்தைகளுக்கெனத் தனி ஸ்பெஷல் கதம்ப நாடகக் காக்ஷிகளும் நடத்தும்.

பாக். தடை ரத்து

இந்தியா உள்பட எல்லா நாடுகளிலிருந்தும் சினிமாப் படங்கள் இனி பாகிஸ்தானுக்கு வரலாம். எவ்விதத் தடையும் கிடையாது. ஒவ்வொரு அரை வருஷத்திற்கும் வாடகை அடிப்படையில் சினிமாப் படங்கள் வரவழைக்கப் படும். நாட்டுக்கு நாடு பட வாடகை வித்தியாசப்படும்.

இந்தோனேஷியாவுக்கு இந்தியப் படங்கள்

ஆண்டு தோறும் ஆறு இந்தியப் படங்களை இந்தோனேஷியாவில் திரையிடுவது சம்பந்தமாக பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது; கல்கத்தாவிலுள்ள இந்தோனேஷிய கான்ஸல் ஜெனரல் காரியாலயத்திலிருந்து கிடைத்துள்ள செய்தியொன்று மேற்கண்டவாறு தெரிவிக்கிறது. இந்தோனேஷியா பத்திரிகையாளர் தூது கோஷ்டியினர், சமீபத்தில், இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது இந்தியப் படங்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டனராம். இந்தியா-இந்தோ

"நீங்கள் வெகு நாளாக எதிர்பார்த்திருந்த ஏவி. எம். மின் "பெண்" உங்கள் ஊருக்கு வந்திருக்கிறாளே: பார்த்தீர்களா" என்று அப் படத்தில் தோன்றி நடிக்கும் வைஜயந்திமாலா ரஸிகர்களைக் கேட்கிறாரோ?

னேஷியா இடையே உள்ள கலாசார ஒற்றுமையை இந்தியப் படங்கள் சித்தரிப்பதாகவும், ஆகவே இவற்றை தம் நாட்டில் திரையிட இந்தோனேஷிய சர்க்காருக்கு அவர்கள் சிபாரிசு செய்துள்ளதாகவும் தெரிகிறது.

திரையிடத் தடை

பாரமவுண்ட் பிக்சர்ஸாரின் "ஆரோ ஹெட்" என்ற ஆங்கிலப் படம் இந்தியாவில் காட்டப்படக் கூடாதெனத் தடை செய்யப்பட்டுள்ளது. இப்படத்தில் பலாத்காரம், பயங்கரச் சண்டைகள், பல கொலைகள், கொடுமைகள், ரத்தக்களரி ஆகியவை நிறைந்திருப்பதாலேயே தடை விதிக்கப்பட்டுள்ளது.

அகில இந்திய சினிமா டெக்னீஷியன்கள் கௌன்ஸில்

அகில இந்திய சினிமா டெக்னீஷியன்கள் கௌன்ஸில் சார்பில் அதன் பொதுக் காரியதரிசி என். கிருஷ்ணசாமி, மத்திய சர்க்கார் ரயில்வே உதவி மந்திரி ஓ. வி. அளகேசனை சென்ற மாதம் 10-ம் தேதி, பேட்டி கண்டு அகில இந்திய சினிமா டெக்னீஷியன்கள் மகாநாடுகளுக்குச் செல்ல தங்களுக்குக் கட்டணச் சலுகை அளிக்க வேண்டுமென்ற தங்கள் விண்ணப்பம் பற்றி எடுத்துக் கூறினார். மகாநாடுகள் சினிமாப் படங்களின் விஞ்ஞான, தொழில் நுட்பக் கலைத் துறைகளை அபிவிருத்தி செய்வதற்காக நடத்தப்படுவதாக அவர் எடுத்துக் கூறினார். சலனப் பட அகாடமி ஒன்றை ஏற்படுத்தி சலனப் படங்களில் பயிற்சியும் ஆராய்ச்சியும் செய்ய, சென்ற மகாநாட்டின் தீர்மானத்தை எடுத்துக் கூறி இக்கட்டண சலுகை மற்ற இசை நாடக விஞ்ஞான துறைகளுக்கு அளிப்பதேபோல் இதற்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்

கொண்டார். இதுபற்றி கவனிப்பதாக ஸ்ரீ. அளகேசன் தெரிவித்திருக்கிறார்.

மத்ய பில்ம் தணிக்கை போர்டுக்கு புதிய தலைவர்

மத்ய பில்ம் தணிக்கை போர்டுக்கு ஸ்ரீ. பி. டி. மிர்ச்சந்தானி புதுத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். தற்போதுள்ள பில்ம் தணிக்கை போர்டுத் தலைவர் ஸர். கிளிப் போர்டு அகர்வாலா பதவியிலிருந்து விலகியுள்ளார்.

ஜெமினியில் தேஷ்முக் தம்பதி

ஸ்ரீ. தேஷ்முக், ஸ்ரீமதி தேஷ்முக் இருவரும் ஜெமினி ஸ்டுடியோவுக்கு சென்ற மாதம் விஜயம் செய்தனர். எஸ். எஸ். வாஸன் அவர்களை வரவேற்று ஸ்டுடியோவைச் சுற்றிக் காட்டினார்.

ஆண்டு விழா வைபவங்கள்

சென்னை, தியாகராய நகர், நேஷனல் பைன் ஆர்ட்ஸ் கிளப்பின் பத்தாவது ஆண்டுவிழா, சென்ற மாதம் 6-ம் தேதி நடைபெற்றது. நீதிபதி கனம் ஏ. எஸ். பி. அய்யர் இவ் விழாவுக்கு தலைமை வகித்து, கிளப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசு வழங்கினார். விழா நிகழ்ச்சிகளில் ஒன்றாக, எஸ். ஹரிஹரன் என்பவர் எழுதிய "முதல் உதவி" என்ற சமூக நாடகத்தை கிளப் அங்கத்தினர்கள் நடித்தார்கள்.

சென்னை, திருவல்லிக்கேணி ஸ்ரீ நடராஜா கல்விக் கழகத்தினர் ஒன்பதாம் ஆண்டு நிறைவு விழாவை சென்ற மாதம் 19-ம் தேதி நடத்தினார்கள். மந்திரி கனம் எம். ஏ. மாணிக்கவேலு நாயக்கர் தலைமை வகிக்க, விழா இனிது நடந்தது. அவ்வமயம் சீர்காழி எஸ். கோவிந்தராஜனின் இனிய இசைக் கச்சேரி நடைபெற்றது.

கும்பகோணம், ஸ்ரீ பதஞ்சலி யோகாசன அப்யாச நிலையத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழா சென்ற மாதம் 20-ம் தேதி நடைபெற்றது. இவ்விழாவிற்கு குன்றக்குடி ஆதீன கர்த்தர் தலைமை தாங்கி, விமரிசையாக நடக்க ஆசி கூறினார். யோகாசனம் பற்றிய பல சொற்பொழிவுகள் நடந்ததுடன் சிலர் நேரில் ஆஸனங்களை செய்தும் காட்டினார்களாம்.

ஸ்ரீ கிருஷ்ண பிக்சர்ஸ் தயாரித்து வரும் "காவேரி" தமிழ்ப் படத்தில் நடனம் ஆடுகிறார் ராகினி.

நடன அரங்கேற்றங்கள்

சென்ற மாதம் 3-ம் தேதி பேபி கே. எஸ். அம்புஜத்தின் பரத நாட்டிய அரங்கேற்றம், ஸ்ரீ லலிதா கலா நிலையத்தில் நடைபெற்றது. இந்த பேபி, ஸ்ரீ ஸரஸ்வதி கான நிலையத்தின் 41வது மாணவி. அரங்கேற்றம் கொத்தமங்கலம் சுப்பு தலைமையில் நடந்தது.

சகோதரிகளான குமாரிகள் மீனாக்ஷி-சாவித்திரி இவ்விருவரது நடன அரங்கேற்றம் சென்ற மாதம் 11-ம் தேதி, மயிலை, ரஸிக ரஞ்சனி ஸபா ஹாலில் நடைபெற்றது. இந்த இரு சிறுமிகளும் நட்டுவனார் குத்தாலம் எஸ். கணேசம் பிள்ளையிடம் சிக்ஷை பயின்றவர்கள். அன்று தலைமை வகித்த பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி சிறுமிகளைப் பாராட்டிப் பேசினார்.

புதுப் படங்கள்

சென்னையில் புதிதாக ஆரம்பமாகியுள்ள வனிதா பிக்சர்ஸார்,

"வன விளக்கு", "மனக் கோட்டை" ஆகிய தங்கள் இரு தமிழ்ப் படங்களின் ஆரம்ப பூஜை விழாவை, சென்ற மாதம் 11-ம் தேதி நடத்தினர்கள். இந்தப் படங்களின் தயாரிப்பில் காரைக்குடி விஸ்வநாதன் பிக்சர்ஸ் உரிமையாளர் எஸ். எம். விஸ்வநாதன் செட்டியார் அக்கறை காட்டுவாரென்று தெரிகிறது. இப்படங்களை எஸ். கே. வாசகம் டைரெக்ட் செய்யக் கூடுமென்றும், இப்படங்களில் புது முகங்களே நடிப்பார்களென்றும் தெரிகிறது.

பல வருஷங்களுக்கு முன் மயூரா பிலிம்ஸ் என்ற படக் கம்பெனியில் சம்பந்தப்பட்டிருந்த நண்பர்களான எஸ். எஸ். சொக்கலிங்கம் செட்டியாரும், டைரெக்டர் எஸ். டி. எஸ். யோகியாரும் சேர்ந்து பராசக்தி பிக்சர்ஸ் என்ற படக் கம்பெனியை ஆரம்பித்துள்ளனர். இவர்கள் தங்களது முதல் படத்திற்கான பூஜையை சென்ற மாதம் 14ம் தேதி யன்று நடத்தினர்கள்.

"மாங்கல்யம்" படத்தைத் தயாரித்து வெளியிட்டுள்ள எம். ஏ. வி. பிக்சர்ஸார் அடுத்தபடி "டவுன் பஸ்" என்ற தமிழ்ப் படத்தைத் தயாரிக்கப் போகிருர்களாம். இது ஒரு முழு நீள ஹாஸ்யப் படமாக இருக்குமாம். இதில் எம். கருணாநிதி, சுலோசன, ஏழுமலை ஆகியோர் முக்கிய பாகத்தில் நடிப்பார்களாம்.

கிருஷ்ண பிக்சர்ஸார் அடுத்தபடி "தம்பி" என்ற சமூகப் படம் ஒன்றைத் தமிழில் தயாரிக்கப் போவதாக அறிவித்திருக்கிருர்கள்.

ரோஹிணி பிக்சர்ஸார், ஏற்கெனவே வெளிவந்த "கிருஹலக்ஷ்மி" தெலுங்குப் படத்தை அப்படியே தமிழில் தயாரிக்கப் போகிருர்களாம். சிவாஜி கணேசன், மாதுரி தேவி, அஞ்சலி தேவி, மூவரும் பிரதம பாகத்தில் நடிக்கவிருக்கும் இப் படம் எச். எம். ரெட்டியின் மேற்பார்வையில் ஒய். ஆர். ஸ்வாமி டைரெக்ஷனில் ரோஹிணி ஸ்டுடியோவில் படமாக்கப்படும்.

வாழ்த்துகிருேம்

சிவாஜி டாக்கீஸ், நந்தி பிக்சர்ஸ் இவைகளின் உரிமையாளரான கே.எம். நாகண்ணு, தமது புதல்வி செள. சந்திரமதியை, சிரஞ்சீவி எம். எஸ். குரு சங்கரய்யா பி. இ.,க்குத் திருமணம்

செய்து கொடுத்தார். இத் திருமணம் சென்ற மாதம் 11ம் தேதி பங்களூரில் நடைபெற்றது.

கே. அப்துல் லதீப் தமது சகோதரர் ஹாஜி நிஸார் அஹமத்துக்கு, கே.முகம்மது பாஷா ஸாஹிப்பின் புத்திரியை நிக்காஹ் செய்து கொண்டார், சென்ற மாதம் 13ம் தேதி ஆம்பூரில்.

அதே தினம் சென்னையில், கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன், தமது புத்திரர்களான சிரஞ்சீவிகள் சுவாமிநாதன், குமரநாதன் ஆகிய இருவருக்கும் பிரம்மோபதேசம் செய்து வைத்தார்.

நமது பத்திரிகையின் மானேஜர் கே. ராதாகிருஷ்ணனின் தம்பியான சிரஞ்சீவி சுப்ரமணியன் சென்ற மாதம் 14ம் தேதி ஏ. கே. வெங்கட்ராம அய்யரின் மகள் சௌ. கோமதியை மணந்து கிருஹஸ்தரானார். திண்டிவனத்தில் நடைபெற்ற இந்த விவாகத்திற்கு பல நண்பர்கள் விஜயம் செய்து, ஆசிகூறி, பரிசுகளை வழங்கினார்கள்.

நமது விருதுநகர் ஏஜண்டு சிரஞ்சீவி எல். ரெங்கன், தூத்துக்குடி மதுரை மில்லில், வேலை பார்க்கும் எஸ். ராமசுப்ரமணியனின் சகோதரி சௌ. லக்ஷ்மியைத் தமது கிருஹலக்ஷ்மியாகஅடைந்தார்—சென்ற மாதம் 21ம் தேதி.

புதுக்கோட்டை முனிஸிபல் கவுன்ஸிலரும், ஸ்டார் புகையிலை கம்பெனி முதலாளியுமான மீ. ந. அ. முஹம்மது சுல்தான் ராவுத்தர் தமது தமையனார் புதல்வன் முஹம்மது இப்ரஹீமுக்கு, அதே நகரத்தைச் சேர்ந்த ஜனாப் மு. ச. நூர் முஹம்மது ராவுத்தர் புதல்வியை நிக்காஹ் செய்து கொண்டார். இந்த விவாகம் சென்ற மாதம் 21ம் தேதி மிகச் சிறப்பாக நடந்தது.

பிரபல நடன சினிமா நக்ஷத்திரம் குமாரி கமலா சென்ற மாதம் 25ம் தேதி, முதல் 'கமலா லக்ஷ்மணன்' ஆகிவிட்டார். அதாவது ஆர். கே. லக்ஷ்மணன் என்பவரின் மனைவியாகிவிட்டார். ஆர். கே. லக்ஷ்மணன் என்பவர் ஒரு 'கார்ட்டூனிஸ்ட்'. பம்பாய் 'டைம்ஸ் ஆப் இந்தியா'வில் வேலை பார்த்து வருகிறார். சென்னை கில்பாக்கத்தில் கோலாகலமாய் நடந்தது இத் திருமணம்.

அனைவருக்கும் மனமார்ந்த ஆசிகள்.

கால் நூற்றுண்டிலே

[28-ம் பக்கத் தொடர்ச்சி]

நான் எதுவுமே செய்து விடவில்லை. எனது ஒவ்வொரு படம் திரையிடப்படும் பொழுதும், நான் ஏமாற்றமே அடைகிறேன். நான் பூரணத் திருப்திகரமாக நடிக்கவில்லை என்றே நினைக்கிறேன். "நாம் பூரணத்வம் பெற்றுவிடவில்லை. நமது லக்ஷியம் ஈடேறவில்லை" என்றே கருதுகிறேன். நான் நன்ருக நடித்த படம் இன்னும் வரவில்லை என்றே கருதுகிறேன். அப்படித்தான் நான் நம்பவும் செய்கிறேன்.

கடந்த கால் நூற்றுண்டில் நான் என்ன வேலை செய்திருக்கிறேன் என்று கணக்குப் பார்த்தால், நான் செய்திருப்பது மிகவும் குறைவு. இன்னும் நிறையச செய்திருக்கலாம் என்றே நினைக்கிறேன்.

எனது கையைப் பார்த்த பல ரேகை நிபுணர்கள்—அதை நான் நம்புகிறேனு இல்லையா என்பது தனி விஷயம்!—நான் அதிக காலம் ஜீவிக்கமாட்டேன் என்றே சொல்லியிருக்கிருர்கள். அதைப் பற்றி நான் கவலைபடவில்லை. இருந்த வரை என்னை இந்த உலகம் அன்பாக நடத்தியிருக்கிறது. அதற்குமேல் நான் எதிர்பார்ப்பதும் கூடாதுதான்; தவறுதான்.

ஆனல் நான் ஒன்றே ஒன்று இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கிறேன். இனி இருக்கும் காலத்திலாவது எனது வாழ்க்கையை உபயோககரமான முறையில், இந்தத் தொழிலுக்கும், நான் எனது புகழுக்கும் பொருளுக்கும் கடமைப்பட்டிருக்கும் மக்களுக்கும் உழைக்க மன உறுதியும், உடல் உறுதியும் அளிக்கட்டும். கஷ்டத்தின் பிடிகளில் சிக்கி நான் அவதியுற்றிருக்கிறேன். 'தங்கள் கஷ்டத்தைப் பிறர் பகிர்ந்து கொள்வதில்லை' என்று எண்ணும் ஜனங்களின் வருத்தம் எத்தகையது என்பது எனக்குத் தெரியும்.

இந்த உலகிலே எனது பணியினுல், வாழ்வினுல் மேலும் சிறிதளவாவது மகிழ்ச்சியை ஏற்படுத்த முடியுமானல், அதை நான் எனது நன்றியறிதலைத் தெரிவிக்கும் வேலையாக நினைக்கிறேன்.

பி. எஸ். சரோஜா

ஜி. வரலக்ஷ்மி
Partham

இலங்கையில் நாடக வளர்ச்சி

பாடாத பெண்களும் பாடினர்!

முஸ்லீம் நிகழ்த்திய கர்நாடக சங்கீதக் கச்சேரி

நமது இலங்கை கடிதம்

○ ● ○

சமீப சில மாதங்களுக்குள் நாடகக் கலையின் வளர்ச்சி மட்டக்களப்புப் பகுதியில் பிரமிக்கத் தக்க வகையில் முன்னேறி யிருக்கின்றது. ஒவ்வொரு கிராமத்து மக்களும் போட்டி போட்டுக் கொண்டு பல நல்ல சமூக நாடகங்களை நடித்துக் காட்ட முற்பட்டிருக்கின்றார்கள். "கள்ளத் தோணி", "விடுதலை", "பக்தியின் மகிமை", "பராசக்தி", "தண்டனை" "இதய வாழ்வு" "தூக்கு மேடை", "ரத்தக் கண்ணீர்", "ரோமியோ-ஜூலியட்" முதலான பல நாடகங்களை மிகக் குறுகிய காலத்துள் பழகி நடித்துக் காட்டி மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றிருக்கிறார்கள்.

மேற்படி நாடகங்களுக் கெல்லாம் சிகரமாக அமைந்திருந்தது. ஆரைப்பற்றை இளைஞர்களால் கடந்த மே மாதம் 19-ந் தேதி நடித்துக் காட்டப்பட்ட "ரத்தக் கண்ணீர்" நாடகம்.

இப்பகுதியில் நாடகக் கலை வளர்ச்சியில் பெரிதும் ஈடுபட்டவரும், எண்ணற்ற பல புராண-சமூக நாடகங்களை மேடைக்குக் கொண்டு வந்தவருமான இசை ஆசிரியர் ஸ்ரீ. எஸ். கந்தையா இந்த "ரத்தக் கண்ணீர்" நாடகத்தை டைரெக்ட் செய்து எல்லோருடைய கண்களிலும் இன்பக் கண்ணீரைச் சொரியச் செய்தார். இந்நாடகத்தில் ஒரு விசேஷ அம்சம் என்னவெனில் பெண்களும் 'பின்னணி' பாடியது.

மட்டக்களப்புப் பெண்களுக்கு, "பாடாத பெண்கள்" என்ற பட்டப் பெயரும் ஒன்று உண்டு. இங்குள்ள மங்கையர் தங்கள் கனிவாய் திறந்து பாடவே மாட்டார்கள்! இத்தனைக்கும் சங்கீத ஞானம், பாடும் திறன் அவர்களுக்கு இல்லை என்பது பொருளல்ல; இனிமையாகப் பாடும் திறன் பலருக்கும் இருந்தும் சமூகத்தின் சீற்றத்துக்கு அஞ்சி அவர்கள் தங்கள் வாய்களை மூடியிருந்தார்கள்! இந்தக் குருட்டு சட்ட திட்டத்தைத் தவிடு பொடியாக்கி விட்டு எஸ்.சிவபாக்கியம், எஸ். லீலாவதி, பி. லீலா (நேயர்கள் திகைக்க வேண்டாம்! இது பிரபல பின்னணிப் பாடகி பி. லீலா அல்ல!) ஆகிய 'மும்மணி'களும் "ரத்தக் கண்ணீர்" நாடகத்தில் 'கனிர்' என்ற தங்கள் இனிய குரலால் பின்னணி இசைத்துப் பெருமைக்குப் பாத்திரமானார்கள். நாடகத்தின் சிறப்பைக் கண்ட நகர மக்கள் மட்டக்களப்பு 'நகர மண்டபத்திலும்' "ரத்தக் கண்ணீரை" சிந்த வேண்டுமென்று ஏகோபித்து வேண்டியிருக்கிறார்கள். அதற்கொப்ப ஜூலை மாதம் மட்டக்களப்பு நகர மேயர் ஸ்ரீ. டி. வேலுப்பிள்ளை (டாக்டர்) தலைமையில் "ரத்தக் கண்ணீர்" நாடகம் நகர மண்டபத்தில் நடக்க இருக்கின்றது. இந்நாடகத்தில் வசூலாகும் பணம் முழுக்க ஆரைப்பற்றை பரமநைனர் ஆலயத் திருப்பணிக்காகச் செலவிடப்படும்.

மதுரை நாடக கோஷ்டி

யாழ்ப்பாணம் 'மானிப்பாய் வாலிப சங்கத்தின்' ஆதரவில் கடந்த மே மாதம் 27-ம் தேதியும், 30-ம் தேதியும் இரண்டு அருமையான நாடக விருந்துகள் ரஸிகர்களுக்குக் கிடைத்தன.

மானிப்பாய் "மெமோரியல்" ஆங்கிலக் கல்லூரி மண்டபத்தில் "வெனிஸ் வர்த்தகன்" என்ற நாடகத்தையும், "க்ரீன் மெமோரியல்" ஆஸ்பத்திரி மைதானத்தில் "புது வாழ்வு" என்ற நாடகத்தையும் இங்கு வந்துள்ள

'மதுரை நகர் உயர்தர பாடசாலை ஓய். எம். ஸி. ஏ. நாடகக் கோஷ்டி' யினர் மிகவும் சிறப்பாக நடித்துக் காட்டினர். நாடகத்தின் சிறப்பைப் பல பிரமுகர்கள் பாராட்டிப் பேசினர். இந்த இரு நாடகங்களுக்கும் ஏராளமான நாடக ரஸிகர்கள் வந்திருந்தார்கள்.

ஜனாபின் கர்நாடகக் கச்சேரி

இம்மாதம் 5-ம் தேதி சனிக்கிழமை கொழும்பில் ஒரு அதிசயம் நிகழ்ந்தது! முஸ்லிம் கலைஞர் ஒருவர் முறையான கர்நாடக சங்கீதக் கச்சேரியொன்றை மிகவும் உன்னதமான முறையில் நடத்தியதையே குறிப்பிடுகின்றோம்.

கர்நாடக சங்கீதத்தை ஒரு முஸ்லிம் கலைஞர் முறையாகக் கற்று சங்கீத ரஸிகர்களை மகிழ்வித்தார் என்பது இங்கு ஒரு அதிசய நிகழ்ச்சிதான்!

கொழும்பு 'ஈத் விழா' கமிட்டியின் ஆதரவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கச்சேரி, கொழும்பு மேயர் டி. ருத்ரா தலைமையில் கொழும்பு நகர மண்டபத்தில் மிகவும் குதூகலமாக நடந்தேறியது. கச்சேரி செய்த ஜனாப். எம். ஏ. கலந்தர் முகையதீன் லயபாவ சுத்தமாகப் பல கீர்த்தனைகளைப் பாடிச் சபையோர்களை மிக மகிழ்வித்தார்.

இலங்கை உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி கே. ஆழ்வார் பிள்ளை பாடகரைப் பாராட்டிப் பேசியபோது, "சங்கீதம் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினருக்கு மட்டும்தான் உரியது என்ற தவறான கருத்தை முறியடித்து விட்டார் ஜனாப் கலந்தர் முகையதீன் இப்படிப் பட்ட ஆர்வம் மிக்க கலைஞர்களை சங்கீதக் கலைஞர்களும் ரஸிக மகா ஜனங்களும் ஊக்குவித்து உற்சாகமூட்டினால் இசை இன்பத்தில் இலங்கையை ஆழ்த்த முடியும்" என்று உணர்ச்சி ததும்பக் கூறினார்.



இலங்கையில் நடந்த "ரத்தக் கண்ணீர்" நாடகத்தின் டைரெக்டரான — எஸ். கந்தையா —

கம்பளை காவலர் ஜனாப். நல்லதம்பி பாடகருக்கு தங்கப் பதக்கம் ஒன்றைப் பரிசாக வழங்கினார். தற்சமயம் இலங்கை வந்துள்ள பேராசிரியர் ஸ்ரீநிவாஸனும் பாடகரின் திறமையை வெகுவாகச் சிலாகித்துப் பேசினார்.

இலங்கை வரும் பிரபல டைரெக்டர்

இரண்டு வருஷங்களுக்கு முன்னர், "தோட்டக்காரன் மனைவி" என்ற ஆங்கிலப் படத்தை டைரெக்ட் செய்ய இலங்கை வந்திருந்த பிரபல டைரெக்டர் கென் அனெக்கின் இவ்வருட இறுதியில் மீண்டும் இலங்கை வருகின்றார்.

பிரபல படமுதலாளியான ஜார்ஜ் பிச்சர் இலங்கையில் தயாரிக்க விருக்கும் "எலிபண்ட் பில்" என்ற படத்தை டைரெக்ட் செய்யவே கென் அனெக்கின் இங்கு வருகிறார்.

மேல்நாட்டுப் பட உற்பத்தியாளர்கள் இப்படிப் போட்டி போட்டுக் கொண்டு இயற்கை எழில் கொழிக்கும் இலங்கைக்குப் படம் பிடிக்கக் குவியும் போது தமிழ் நாட்டுப் பட உற்பத்தியாளர்கள் மட்டும் இங்கு வர முனையாதிருப்பது இங்குள்ள கலா ரஸிகர்களுக்குப் பெரும்வியப்பை அளிக்கிறது.

சென்ற ஆண்டு தமது கோஷ்டியினரோடு பல நாடகங்களை நடித்துக் காட்ட இலங்கை வந்திருந்த கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் இங்குள்ள தேயிலை மலைக் காட்சிகளில் சொக்கி, இக்காட்சிகளைத் தமது "தோட்டக்காரனில்" பிடித்துப் போட வேண்டும் என்றும் அதற்காக எல்லாப் படம் பிடிக்கும் கருவிகளுடனும் சீக்கிரமே இலங்கை வரவேண்டும் என்றும் கூறிச் சென்றார். அவர் போய்ப் பல மாதங்களாகியும் இதுவரை அது பற்றி எந்தவிதத் தகவலுமே இல்லாமலிருக்கிறது!

'ஹாலிவுட்' செல்லும் இலங்கைக் கலைஞர்

இலங்கையில் தயாரிக்கப் பட்ட 'யானை நடை' ஆங்கிலப் படத்தின் டைரெக்டருக்கு அந்தரங்க உதவியாளராக இருந்தவரும், அந்தப் படத்திலேயே ஒரு எஸ்டேட் கண்டிராக்டராகப் பாத்திரமேந்தித் திறம்பட நடித்

தவருமான பிரபல ரேடியோ சினிமா கலைஞர் பிரேம்நாத் (இவர் வடஇந்திய நக்ஷத்திரம் பிரேம்நாத் அல்ல!) அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் ஹாலிவுட்டுக்குச் செல்வார்.

இலங்கையைச் சேர்ந்த இந்தத் திறமை மிக்க கலைஞர் ஹாலிவுட் சென்று சினிமாத் தொழில் சம்பந்தமான பயிற்சியில் ஈடுபடுவார். டெக்னிக்கலர் படத்தில் நடித்த முதல் இலங்கையரும் இவரே!

''ரத்தக் கண்ணீர்'' நாடகத்தில் பின்னனி பாடிய மும்மணிகள் : எஸ். லீலாவதி, எஸ். சிவபாக்கியம், பி. லீலா.

வலதுபுறம் : யோகியின் வேஷத்தை ஏற்றுநடித்த கே. பொன்னையா.

லண்டன் செல்லும் கலைஞர்!

அரசாங்கத்தின் திரைப்பட இலாகா டைரெக்டரான ஜோர்ஜ் விக்ரமஸிங்கா என்பவர் படத் தயாரிப்பு சம்பந்தமான நுணுக்கங்களில் போதிய பயிற்சி பெறுவதற்காக லண்டனுக்கு அனுப்பப்பட இருக்கிறார்.

இதற்கான உதவிகளையும். ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறு தெற்கு-தென்கிழக்கு ஆசிய தொழில் நுட்ப உதவிச் சங்கத்துக்கு இலங்கை சர்க்கார் வேண்டுகோள் விடுத்திருக் கிறார்கள்.

ஜமயனவுக்கு கௌரவப் பட்டம்!

இலங்கையின் பிரபல சிங்கள சினிமா நடிகரும், நடிகை ருக்மணியின் கணவருமான டி. இ. வி. டபுள்யூ. ஜயமனவுக்கு மகாராணி பிறந்த தினத்தை யொட்டி 'எம். பி. இ' (ஸிவில்) பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது.

பாக்கு நீரிணையை ஊடறுத்து பாரதக் கரையை அடைந்த நீச்சல் நிபுணர் மு. நவரத்தின சாமிக்கும் மகாராணியார் 'சரம்ராஜ்யப் பதக்கம்' ஒன்றை பரிசளித்திருக்கின்றார்.

கந்தானையில் வளரும் '' அகங்கார ஸ்திரி! ''

பெயரைக் கேட்கும் போதே கலக்கமேற்படுகிறது அல்லவா?

கந்தானை ''சுந்த்ரா ஸவுண்டு ஸ்டுடியோவில்'' கன வேகமாகத் தயாராகி வரும் சிங்களப் படத்தின் பெயரே இந்த ''அலங்கார ஸ்திரி!''

''காதலின் கற்பனை'' என்ற சிங்களப் படத்தில் நடித்த பல நடிகர்களுடன் ''ரத்னகுமாரி'' என்ற புது முகமும் இப் படத்தில் தோன்றுகிறார். படப் பிடிப்பு நடந்துவரும் மும்முரத்தைப் பார்த்தால் ''அகங்கார ஸ்திரி'' அடுத்த மாதமே தன் அட்டகாசத்தைச் செய்யப் புறப்பட்டு விடுவாள் போலிருக்கின்றது.

படத்தில் பின்னணி முக்கிய அம்சம். லதா மங்கேஷ்கர், ஏ. எம். ராஜா, ஜமுனா ராணி முதலியவர்கள் பாடியிருக்கும்போது பின்னணி முக்கிய அம்சமாக இல்லாமல் வேறு எப்படி இருக்க முடியும்?

'நவம்''.

"புது யுகம்"—ஒரு மட்ட ரகம்

நல்ல அம்சமே இல்லாத படம்

படங்கள் வெளி வருகின்றன; சில வெற்றி பெறுகின்றன. பல தோல்வி அடைகின்றன. தோல்வி அடையும் படங்களில்கூட ஒரு சில நல்ல அம்சங்கள் இருப்பது உண்டு. ஆனல் "நல்ல அம்சம் எதுவுமே இல்லாத படம்" என்ற 'பெருமை' ஸ்ரீ சாயி காஞம்ருத பிக்சர்ஸின் "புது யுக"த்துக்குத்தான் முதன் முதலாகக் கிடைக்கிறது.

கதையின் பெயரில் புது என்ற வார்த்தை இருப்பதைத் தவிர வேறு எந்தப் புதுமையும் கதைப் போக்கில் இல்லை. கதையின் முடிவு அசம்பாவிதமாக இருக்கிறது. நன்ருகப் படித்த கல்வி அறிவுள்ள ஒரு பெண், தன் காதலனைப் பழிவாங்குவதற்காக ஒரு முழு முட்டாளை மணந்து கொள்வதாக உள்ள கற்பனையை நினைத்தால் சிரிக்காமல் இருக்க முடியுமா?

சேகராக நடித்திருக்கும் எஸ். ஏ. நடராஜனது நடிப்பு சோபிக்கவேயில்லை. அடித் தொண்டையிலிருந்து வரட்டுக் குரலில் பேசுகிருர். அவரது பேச்சும், சிரிப்பும் கேலிக் கூத்தாகவே இருக்கின்றன. இறுதிக் கட்டத்தில் நடிக்க முயற்சித்திருக்கிருர். புரொபஸர், முருகன் கதா பாத்திரங்களாக நடிப்பவர்களும் ஏமாற்றமே அளிக்கின்றனர். டாக்டர் விநோதன், இன்ஸ்பெக்டர் பாத்திரங்களில் முறையே நடிக்கும் நரசிம்ம பாரதிக்கும், முத்துகிருஷ்ணனுக்கும் நல்ல தோற்றம் இருக்கிறது. அவர்களது நடிப்பும் சுமாராக இருக்கிறது.

விதவை செல்லமாக எம். எஸ். திரௌபதி நடிக்கிருர். கூடியவரை சிரமப்பட்டு நடித்திருக்கிருர் என்ருலும் அவரது தோற்றம் அதைச் சோபிக்காமல் செய்து விடுகிறது. இவ்வளவு படங்களில் நடித்த பிறகும்கூட, நாடக மேடைப்பாணி இன்னும் அவரைவிட்டபாடில்லை. புஷ்பாவாக கிருஷ்ண குமாரி வருகிருர். இவரது நடிப்பு அவ்வளவாக சோபிக்கவில்லை யெனினும் இவரிடம் உள்ள நடிப்புத் திறமை சிற்சில கட்டங்களில் வெளிப்படுகிறது. கமலாவாக வரும் எம். சரோஜாவையும், சித்ராவாக வரும் விமலாவையும்பற்றிக் குறிப்பிடாமல் விடுவது நலம். ஹாஸ்ய கட்டங்கள் கலகலப்பை உண்டுபண்ணுகின்றன.

சங்கீத டைரெக்டர் ஜி. ராமஞதன் தயாரித்த படத்தில் நல்ல சங்கீதமாவது இருக்குமென எதிர்பார்ப்பவர்களுக்கு இப்படம் ஒரு ஏமாற்றமே. இப்படத்தை இரண்டு பேர் டைரெக்ட் செய்திருக்கிருர்கள். ஆனல் டைரெக்‌ஷனைப் பொருத்தவரை இரட்டைத் தோல்வி. ஒலி-ஒளிப் பதிவுகளும் படத்தின் தரத்திற்குத் தகுந்தவையாகவே இருக்கின்றன.

—"ஜாம்பவான்"

கிரஹப் பிரவேசம்

விஜயா புரொடக்‌ஷன்ஸின் மானேஜிங் பாகஸ்தரான பி. நாகி ரெட்டி வாஹினி ஸ்டுடியோவை அடுத்துக் கட்டியுள்ள தமது புது பங்களாவின் கிரஹப் பிரவேசத்தை சென்ற மாதம் 3-ம் தேதி நடத்தினர். அன்று இரவு அதை முன்னிட்டு பலமான விருந்து அளித்தார். பட உலக, பத்திரிகை உலகப் பிரமுகர்கள் பலரும் இந்த விருந்தில் கலந்து கொண்டனர்.

பத்திரிகைக் காட்சி

எம். ஏ. வி. பிக்சர்ஸின் "மாங்கல்ய"த்தின் பத்திரிகைக் காட்சி சென்ற மாதம் 18-ம் தேதி சித்ரா டாக்கீஸில் நடைபெற்றது. இப்படம் அன்றுமுதல் சென்னையில் திரையிடப்பட்டுள்ளது. சென்ற மாதம் 11-ம் தேதியே இப்படம் தமிழ் நாட்டின் பல நகரங்களில் திரையிடப்பட்டு ஆதரவு பெற்று வருகிறது.

பூம்புகார்

சிவகாமி பிக்சர்ஸார் என்ற புதிய படக் கம்பெனியார், "பூம்புகார்" என்ற தமிழ்ப் படத்தைத் தயாரிக்கப் போவதாக அறிவித்துள்ளனர். பெயர் தான் புதிதே தவிர கதை பழைய கண்ணகி கதை தான். படத்தின் வசனங்களை மு. கருணநிதி எழுதுகிருர். படத்தை ராமண்ண டைரெக்ட் செய்வாராம்.

"மனோகரா"வின் மகத்தான வெற்றி

சிங்கப்பூரில் மற்றும் ஒன்பது புதுத் தியேட்டர்கள்

ஆசிய பிலிம் விழாவில் மலாயா படங்களுக்குப் பரிசு

கடந்த மே மாதம் 29ந் தேதியும் 30ம் தேதியும் சிங்கப்பூர் விக்டோரியா தியேட்டரில் ஒரு அருமையான நடனக் கச்சேரி நடைபெற்றது.

சென்னையிலிருந்து சிங்கப்பூருக்கு வந்திருக்கும் **குமாரி ஏ. ஸி. கோமளா**வின் பரதநாட்டியக் கச்சேரிதான் அது. இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சொஸைட்டியார் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்ச்சியை, இரு தினங்களும் தியேட்டர் நிறைந்து வழிந்த மகாஜனங்கள் மெய்மறந்து ரஸித்தனர்.

சிங்கப்பூரிலேயே முதன் முதலாக இரண்டரை மணி நேரம் தொடர்ச்சியாக நடனம் ஆடிக்காட்டிய பெருமை குமாரி கோமளாவைத்தான் சாரும். அலாரிப்பு, ஜதிஸ்வரம், சப்தம், வர்ணம் பதம் யாவும் வெகு லாவகமாக ஆடிக் காட்டினர்.

இந்த நடன நிகழ்ச்சிக்கென விசேஷமாக வரவழைக்கப்பட்டிருந்த வழுவூர் ராமையா பிள்ளையின் சிஷ்யை குமாரி சரஸாவின் இனிமையான பின்னணியும் ஸ்ரீ என். கோதண்டராமன் அவர்களின் மிருதங்கமும் நடனக் கச்சேரியை வெகுவாக சோபிக்கச் செய்தன.

பதினன்கு வயது நிறைந்த குமாரி கோமளா, சென்னையில் எஸ். எஸ். எல். ஸி. படித்து வருகிறர். கோடை விடுமுறையில் அவர் தமது பெற்றோரைப் பார்க்க சிங்கப்பூருக்கு வந்துள்ளார். அவரது தகப்பனர் ஏ. ஸி. எஸ். ராஜன் இங்கு ஒரு டாக்டராகப் பணியாற்றி வருகிறர்.

ஆரம்பத்தில் திருவேங்கடம் நட்டுவனரிடமும், பின்னர் வழுவூர் ராமையா பிள்ளையிடமும் சுமார் 5 வருஷங்கள் வரை இவர் பரதநாட்டியம் பயின்றவர்.

குமாரி கோமளாவின் நடனத்துக்கு கிடைத்திருக்கும் நல்ல ஆதரவைப் பார்க்கும்போது, தமிழகத்திலிருந்து நடனமணிகளும் கலைஞர்களும் ஏன் அடிக்கடி இங்கு விஜயம் செய்து திறமையைக் காட்டக்கூடாது என்று இங்கு ரஸிகர்கள் வட்டாரங்களில் வினவப்படுகிறது!

"மனோஹரா" வெற்றி

சென்ற வருஷத்திய தீபாவளிக்குப்பின்னர் ("ஔவையா"ரும் "அன்பு"ம் திரையிடப்பட்ட பின்னர்) மலாயாவில் தமிழ்ப்பட மார்க்கெட் கொஞ்சம் மந்தமாக இருந்தது. ஏதோ வந்தன; தலையைக் காட்டின; மறைந்தன என்னும் ரீதியில் படங்கள் வந்து போயின. ஆனல், சென்ற மாதம் மலாயாவிலும், சிங்கப்பூரிலும் திரையிடப்பட்ட **"மனோஹரா"** படம் ரஸிகர்களிடையே ஒரு பரபரப்பை ஏற்படுத்தி விட்டது.

சிங்கப்பூர் ராயல் தியேட்டரில் இரு வாரங்கள் வரை ஒவ்வொரு காட்சிக்கும் 'டிக்கெட்டுகள் தீர்ந்துவிட்டன' என்ற போர்டு வெளியே காட்சியளித்து, எண்ணற்ற ரஸிகர்களை ஏமாற்றத்துடன் வீடு திரும்பும்படிச் செய்தது.

வீரம் செறிந்த நடிப்பு, கனல் கக்கும் வசனம், பதிபக்தி, பொறுமை, சகிப்புத் தன்மை ஆகிய உயரிய பண்புகளைப் பின்னிய கதைப் போக்கு — எல்லாம் சேர்ந்த இந்த ஜனரஞ்சகமான படம் இப்பொழுது நான்காவது வாரமாக சிங்கப்பூர், கோலாலம்பூர், பினங்கு ஆகிய நகரங்களில் வெற்றிகரமாய் நடைபெற்று வருகிறது.

'சினிமாஸ்கோப்' படங்கள்

சிங்கப்பூருக்குப் படையெடுத்திருக்கும் 'சினிமாஸ்கோப்' படங்களைப் பார்த்தால் எங்கே சாதாரணப் படங்கள் மறைந்துவிடப் போகின்றனவோ என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

இப்பொழுதுதான் சென்னையை நாடியிருக்கும் 'தி ரோப்' என்ற '20ம் நூற்



எஸ். டி. சுந்தரத்தின் "மஹா புத்திசாலி" நாடகத்திற்கு இசை அமைத்துக் கொடுத்த தோடு அதில் நடிக்கவும் செய்தார் சேலம் ஹரிஹரபாகவதர்.

ருண்டு பாக்ஸ் கம்பெனி'யாரின் சினிமாஸ்கோப்—டெக்னிக்கலர் படம், சிங்கப்பூரில் இவ்வருஷ ஆரம்பத்தில் திரையிடப்பட்டது. முதலில் கிடைத்த அபரிமிதமான வெற்றியைத் தொடர்ந்து, மேலும் பல சினிமாஸ்கோப் படங்களை, தயாரானதும் உடனுக்குடன் கொண்டு வந்து திரையிட்டார்கள். அவற்றிற்கெல்லாம் நல்ல வசூல் கிடைத்தது. இந்தப் படங்கள் ஒவ்வொன்றும் 3, 4 வாரங்கள் நடைபெற்றன; நடைபெற்றும் வருகின்றன. சாதாரணமாக இங்கு ஒரு ஆங்கிலப் படம் 5 நாட்களுக்கு மேல் ஓடுவது அபூர்வம்.

நகரிலுள்ள பெரிய தியேட்டர்களிலெல்லாம் சாதாரணத் திரையை எடுத்துவிட்டு, சுமார் 53 அடி நீளத்திலும் 22 அடி அகலத்திலும் பிரம்மாண்டத் திரைகளும், விசேஷ சக்தி வாய்ந்த ஒலிபெருக்கி சாதனங்களும் பொருத்தப்பட்டு, 'சினிமாஸ்கோப்' படங்கள் காட்டப்பட்டு வருகின்றன.

சிறிய தியேட்டர்களில் 'சினிமாஸ்கோப்' வசதி செய்ய முடியாமல் இது வரை இருந்து வந்தது. இதற்குக் காரணம், ஒலியைப் பிரித்து அனுப்பும் சாதன வசதி இல்லாமல் இருந்ததே. ஆனால், அதற்கும் ஒரு பரிகாரத்தை சிங்கப்பூரிலுள்ள ஒரு பட விநியோகக் கமிட்டி கண்டு பிடித்துள்ளது. இதன் மூலம் எல்லாத் தியேட்டர்களிலுமே 'சினிமாஸ்கோப்' படங்களைக் காட்டலாமாம்.

ஷா பிரதர்ஸ் பட விநியோகக் கம்பெனி வார்னர் பிரதர்ஸிடமிருந்து 16 சினிமாஸ்கோப் படங்களை வரவழைத்து சிங்கப்பூரில் திரையிடுவதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது.

ஆங்கிலப் படங்கள் விஷயத்தில் சினிமாவுலகில் இவ்வளவு பெரிய புரட்சியைச் செய்திருக்கும் 'சினிமாஸ்கோப்', நம் இந்தியத் தயாரிப்பாளர்கள் கவனத்தை என்றுதான் கவருமோ தெரியவில்லை. டெக்னிகலர் படம் தயாரிப்பதற்கே துணிவு பிறக்காதிருக்கையில், தமிழில் 'சினிமாஸ்கோப்' படங்கள் தயாரிப்பார்களா என்பது கற்பனைக்கும் அப்பாற்பட்ட விஷயமாகத்தான் இருக்கவேண்டும்!

கனபரிமாணப் படங்களின் கதி

'சினிமாஸ்கோப்' படங்களைப்பற்றிக் குறிப்பிடுகையில், கனபரிமாணப் (த்ரீ டைமன்ஷன்) படங்களைப் பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டியிருக்கிறது.

ஆரம்பத்தில் புதுமையின் காரணத்தாலோ என்னவோ அப்படங்களுக்கு வெற்றி கிடைத்தது. ஆனால் பின் வந்த பல கனபரிமாணப் படங்களுக்கு ஆதரவே கிடைக்கவில்லை. இதற்குக் காரணம், இப்படத்தைப் பார்ப்பதற்கென அணியப்படும் விசேஷ கண்ணாடியினால் தலைவலியும் கண்வலியும் ஏற்படுகிறதென்ற ரஸிகர்களின் புகார் ஒருபுறமிருந்தாலும், கனபரிமாணப் படங்களின் தோல்விக்கு முக்கிய காரணம் படங்களின் தரமேயாகும். ஆனால் 'சினிமாஸ்கோப்' படங்கள் கனபரிமாணப் படத்திற்குள்ள சகல அம்சங்களையும் பெற்றிருப்பதுடன், கண்ணாடி அணிந்து கொண்டு அவஸ்தைப் படாமல் பரந்த திரையில் படத்தை வெகு தெளிவாகப் பார்க்க முடிகிறது.

சிங்கப்பூருக்கு 9 தியேட்டர்கள்

சிங்கப்பூரில் ஜனத்தொகை பெருகப் பெருக தியேட்டர் நெருக்கடியும் (வீட்டு நெருக்கடி தான் எங்கும் உண்டே!) பெருகி வருகிறது. இந்த நெருக்கடியைப் போக்க 5 ஸ்தாபனங்கள்—மொத்தம் சுமார் ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட செலவில், 9 தியேட்டர்களை விரைவில் கட்ட ஆரம்பிக்கும். இவற்றிற்கான பிளான்கள் நகரசபையினால் அங்கீகரிக்கப்பட்டு விட்டன. சிங்கப்பூர் நகரில் இப்பொழுது 36 தியேட்டர்கள் இருக்கின்றன. இவற்றில் 8 தியேட்டர்களில் இந்தியப் படங்கள் திரையிடப்படுகின்றன.

அடுத்த பிலிம் விழா

சமீபத்தில் டோக்கியோவில் (ஜப்பான்) நடைபெற்ற ஆசிய பிலிம் விழாவில் செய்திப் படப் பிரிவிற்காக ஒதுக்கப்பட்ட 4 தங்கப் பதக்கங்களில் இரண்டு மலாயாவிற்குக் கிடைத்துள்ளன. கோலா லம்பூரிலுள்ள மலாய் பிலிம் யூனிட்டினால் தயாரிக்கப்பட்ட இப் படங்களுக்கு, சிறந்த படப்பிடிப்பு முறைக்காக தங்கப் பதக்கங்கள் வழங்கப் பட்டன.

ஏற்கெனவே தெரிவித்திருந்தபடி அடுத்த ஆசிய பிலிம் விழா அடுத்த வருஷம் மே மாதம் சிங்கப்பூரில் நடைபெறப் போகிறது.

இந்த விழாவில் கலந்துகொள்வதற்காக ஹாலிவுட், ஜப்பான் ஆகிய இடங்களிலிருந்து பிரபல சினிமா நக்ஷத்திரங்களை வரவழைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

படங்களை அனுப்புமாறு இந்தியாவிடம் கோரப்படுமாம். ஆனால், இந்திய சினிமா நக்ஷத்திரங்கள் அழைக்கப்படுவார்களா என்பது இன்னும் முடிவாகவில்லை. மலாயா பட மார்க்கெட்டில் முக்கிய ஸ்தானம் இந்தியா வகிக்கும் பொழுது, அங்கிருந்து நட்சத்திரங்கள் வரவழைக்கப் படாவிடில், பெரும்பான்மை ஆசிய ரஸிக கோஷ்டிகளின் அபிலாசையைப் புறக்கணிப்பதாகும்; பிறகு ஆசிய பிலிம் விழா நடத்துவதில் அர்த்தமே இல்லையெனலாம்!

—எஸ். சப்தகிரி சர்மா.



போனிக்ஸ்

விசிறிகள்

சிக்கனம், உழைப்பு

உறுதிக்கும் புகழ் பெற்றது

EWI LTD

RM.S. & CO., LTD.

16. BROADWAY.....MADRAS-1

பிராஞ்சு:

5, மேல கோபுர வாசல், மதுரை

இதயதாகம்!...

அன்பே காஞ்சனா!

அந்த நாள்—! ஆம்! **நாம் இருவர்** சந்தித்த அந்த நாள் ஒரு பொன்னாள்! **ஓர் இரவு** சந்தித்த உடனே **நாம்** இருவரும் **காதல்** கொண்டோம். நாட்கள் ஓடின. நான் வாளாயிருப்பதைக் கண்ட நீ நான் கொண்டுள்ள காதல் தூய்மையானதுதானா -என்று **சந்தேகி**த்தாய். ஆகவே, **ஒரு நாள்** என்னைப் **பெற்ற தாய்**இடம் **அழகியா**கிய உன்னை **திருமணம்** செய்து கொள்வது பற்றிக் கேட்டேன். என் **அம்மா ''என் மகள்** இச்சைக்குத் தடையில்லை'' என்று கூறி **ஔவையார்**கூற்றுக்கொப்ப கற்புக்கரசி **கண்ணகி** போன்ற உன்னை எனக்குக் **கல்யாணம் பண்ணிப் பார்த்து** என் **வீட்டுக்காரி**யாக்கினாள். ஆனால், உன்னிடமிருந்து என் தாய் சீதனமாக எதிர் பார்த்த **வைர மாலை** கிடைக்காததால் நம் இல்லற **வாழ்க்கைக்கு** குறுக்கே நின்றாள். அது சமயம் நான் **கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி**யாக **சம்சார** பந்தமில்லாமல் வாழ்கிறோமே யென்று **கண்கள்** கலங்கி **ரத்தக் கண்ணீர்** வடித்ததுண்டு. ஆனால் உன் பொன்னை **பெண் மனம்** எல்லாம் **பராசக்தி**யின் அருள்தான் என்று நினைத்து **சாந்தி** பெற்றிருக்கும்!

வருஷங்கள் உருண்டன! தன் தவறுகளை **திரும்பிப் பார்த்து** திருந்திய என் தாய் **வாழப் பிறந்தவ**ளாகிய உன்னை **கூண்டுக்கிளி**யாக்கி விட்டோமே என வருந்தி நமக்குப் **புது வாழ்வு** வகுத்து **புனர் ஜென்மம்** எடுக்கச் செய்தாள். ஆயினும் உன் மனக் கலக்கம் மாறாததால் உன் மனதை திருப்தி செய்ய **பணம்** பணம் என்றலைந்து உனக்கு பணம் கொண்டு வந்து குவித்து உன்னை **பணக்காரி**யாக்கி, **நீ என் வீடு** என்று பெருமைப்பட்டுக் கொள்ள ஒரு வீடும் வாங்கினேன். ஆனால் உனக்குள்ள மன வருத்தம் **'நம் குழந்தை** என்று கூறி **அன்பு** காட்ட ஒரு குழந்தை இல்லை' என்பதுதான் என்று அறிந்ததும், என் மனம் எவ்வளவு வேதனைப்பட்டது தெரியுமா? உன் ஏக்கம் நீங்க நீ **மூன்று பிள்ளைகள்** ஒரு **பெண்** ஆகிய **நால்வரை**ப் பெற்று என்னை **தந்தை**யாக்கினாய்.

நம் மூன்றாவது பிள்ளை **தேவதாஸ்** பிறந்தபின் தான் நமக்கு **லக்ஷ்மி** கடாக்ஷம் அதிகமாகி யிருக்கிறது என்று கூறிக் கொண்டு **அவனை செல்லப்பிள்ளை**யாக வளர்த்து **உத்தமபுத்திரன்** என்று புகழ்ந்தாய். உன் இச்சைப்படியே நம் மூத்த குமாரன் **சபாபதி** போலீஸ் **இன்ஸ்பெக்டர்** வேலை பார்க்கிறான். இரண்டாம் பிள்ளை **மோகன சுந்தரம், குமாஸ்தா** வேலையில் சிக்கிக் கொண்டான். உன் **குமாரி—கல்யாணி**க்கு **மனம்போல மாங்கல்யம்** கிடைத்தது. உன் பிள்ளைகளுக்கு மணம் செய்து வைத்து உன் **மருமகள், மாப்பிள்ளை** ஆகியோரைக் கண்டானந்தித்து, உன் **ஆசைமகன்** உன் பெண்ணை **இரத்தபாசம்** குறையாமல் **என் தங்கை** என் தங்கை என்று கூறி **ராஜகுமாரி** போல **அவள்** கண்காணிக்கப்படுவதையும் கண்டபின் **என் மனைவி**யாகிய நீ உயிர் துறந்திருந்தால் என் மனம் சஞ்சலப் படாது. இவைகளை யெல்லாம் கண்டால் உன் **தாய் உள்ளம்** குதூகலமடைந்திருக்குமோ? என் மாண்பு மிக்க **மங்கையர்க்கரசி**யே.

நீ தான் என் வாழ்வுக்கும் வீட்டிற்கும் **ரத்னதீபம்** ஏற்றி என் **இல்லற ஜோதி**யாகத் திகழ்ந்தாய். உன்னைப் பிரிந்து நான் படும் பாடு கொடிது! கொடிது! அது **ஏழைபடும்பாட்டை**விட **பணம் படுத்தும் பாட்டை** விட **பசியின் கொடுமை**யைவிடக் கொடிது! ஏன் உன்னைப் பிரிந்து வாழ என் **மனச்சாட்சி** இடந்தராததால் ஒரு **துளி விஷம்** மூலம் நான் உன்னை அடைந்து விடுவது என்று தீர்மானித்து விட்டேன். நீ மட்டும் இவ்வுலக பந்தத்திலிருந்து **விடுதலை** பெற்று வாழ, நான் மட்டும் உன்னைப் பிரிந்து துன்பத்திற்கு ஆளாகி நம் **குடும்பம்** முழுவதையும் நானே கண்காணித்து, நான் **மனிதன்** என்ற உண்மையை மறந்து துன்பத்தில் உழல வேண்டும் என்பதுதான் இவ் **உலகம்** விரும்புவதா? ஐயகோ! அப்படியானால் என் மனக்கோட்டை **கற்கோட்டை**யாகி என் **கனவு** பலித்து என் **இதய கீதம்** உனக்குக் கேட்டு நான் உன்னை அடைந்து, என் இதயதாகம் தணியும் அந்த **நல்ல காலம்** எப்பொழுது வருமோ?

உன் அன்பன், **மனோகர(ா)ன்.**

நீதிபதியின் மகள்

ராம குமார்

"என் அப்பா! நீங்கள் எங்கேயாவது வெளியில் போய்க்கொண்டிருக்கிறீர்களா, என்ன? ஒரே ஊதல் காற்ருக அடித்துக் கொண்டிருக்கிறதே!" என்று கேட்டுக்கொண்டே கல்யாணி படியேறி உள்ளே வந்தாள்.

ஜஸ்டிஸ் ஜஞர்த்தனம் உண்மையாகவே எங்கேயோ வெளியே போகத்தான் தயார் செய்து கொண்டிருந்தார். கல்யாணியின் கேள்வி காதில் விழவே, அவள் பக்கம் திரும்பிப் பார்த்தார். வயது முதிர்ந்த அவருடைய முகத்திலும் அன்பு நிறைந்த முறுவல் ஒன்று நெளிந்தது. "ஆமாம், நீயும் வெளியில் இருந்து தானே வந்து கொண்டிருக்கிருய்? உன்னை ஊதல் காற்று ஒன்றும் செய்ய வில்லையா?. ஒரு வேளை உன்னுடன் பஞ்சநதம் இருந்திருப்பான். அதனல் தான்........" என்று வாக்கியத்தை முடிக்காமலே நிறுத்தினர். கல்யாணி வெட்கிப்போய் உள்ளே ஓடிவிட்டாள். அவளால் அடுத்த நிமிஷம் அங்கே நிற்க முடியவில்லை. ஏனெனில் அவள் அப்பா சொன்னதில் எள்ளளவும் தப்பு இல்லையே! அவள் அப்பொழுது பஞ்சநதத்துடன் டென்னிஸ் விளையாடி விட்டுத் தான் திரும்பிக் கொண்டிருந்தாள்.

பஞ்சநதம் பிராயம் வந்த நல்ல கட்டிளங் காளை. சதா சிரித்த முகமாகவே இருப்பான். ஜஸ்டிஸ் ஜஞர்த்தனத்திற்கு அவனைப் பார்த்தது முதலே அவன் மீது ஒரு கண் இருந்தது. வீட்டில் பெண்ணை வைத்துக் கொண்டிருந்தால் பெற்ருேர்களுக்குப் பிள்ளைகளின் மீது கண் ஓடுவது இயல்பு தானே! பஞ்சநதத்துக்குக் கல்யாணியைக் கல்யாணம் செய்து கொடுத்து விடலாம் என்று அவர் தம் மனதுள் திட்டமிட்டுக் கொண்டிருந்தார். இல்லை, இல்லை, தீர்ப்பே செய்து வைத்திருந்தார். அவர் நீதிபதி அல்லவா?

ஜஸ்டிஸ் ஜஞர்த்தனம் ஆசையும் அன்பும் நிறைந்த விழிகளுடன், உள்ளக் களிப்பிலே எக்களித்துக் கொண்டு முன்னேறும் கல்யாணியின் காலடிகளைப் பார்த்துக் கொண்டேயிருந்தார், கண்களிலிருந்து அவளுடைய கால்கள் மறையும் வரையில்!

– ஜஸ்டிஸ் ஜஞர்த்தனம் ஹைக்கோர்ட்டின் பிரதம நீதிபதி. பணம் காசு விஷயத்தில் பகவான் அவருக்கு எவ்விதக் குறையும் வைக்கவில்லை. நகரத்தில் அவருக்குச் சொந்தமாக நான்கைந்து பங்களாக்கள் இருந்தன. ஆயினும் கர்வம் என்பது அவரைக் கண் கொடுத்தும் பார்க்கவில்லை. கல்யாணி அவருக்கு ஒரே பெண். அவளை விட்டால் அவருக்கு வேறு குழந்தைகள் கிடையாது. கல்யாணிக்கு இரண்டு வயதாகிய பொழுதே, அவருடைய மனைவி கண் மூடி விட்டாள், இந்தப் பரந்த உலகத்தில் அவரையும் குழந்தையையும் தனியாக விட்டுவிட்டு. எனவே, கல்யாணியைக் காப்பாற்றி வளர்க்கும் பொறுப்பு பூராவாக ஜஞர்த்தனத்தின் தலையிலே விழுந்தது.

நகரத்தின் நாற்சந்தி ஒன்றில் வண்டியை நிறுத்திவிட்டு அவர் இறங்கி

ஞர். வண்டியை வீட்டுக்கும் திருப்பி அனுப்பி விட்டார். பிறகு ஒரு காகிதத் துண்டை எடுத்துப் பார்த்தார். அடுத்த விநாடி பக்கத்திலிருந்த ஒரு தெருவை நோக்கி முன்னேறினார்.

அன்று தான் ஜஸ்டிஸ் ஜனார்த்தனத்துக்குத் தர்மாம்பாளின் கடிதம் ஒன்று கிடைத்திருந்தது. அக் கடிதத்தைப பார்த்ததும் பதினேழு வருஷங்களுக்கு முன்பு நடந்த ஒரு சம்பவம் மின்னலைப் போல் அவர் கண்களில் பளிச்சிட்டது. கடிதத்தைக் கண்ட பொழுது, 'தர்மாம்பாளைப் பார்க்கப் போவதா, வேண்டாமா?' என்று கண நேரம் யோசித்தார். 'வேண்டாம்' என்றது ஒரு மனம்; இன்னொரு மனம் 'போய் வா!' என்றது. 'வாதத்தை விட்டுப் போய்ப் பார்த்து வருவது தான் நல்லது!' என்று தீர்ப்பு அளித்தது அவருடைய நீதிபதி உள்ளம்.

தெருவில நான்காவது வீட்டு வாசலை அடைந்ததும், ஜஸ்டிஸ் ஜனார்த்தனம் சட்டென்று நின்றார். தர்மாம்பாள் அந்த வீட்டு விலாசம் தான் கொடுத்திருந்தாள். ஜஸ்டிஸ் ஜனார்த்தனம் மூக்கில் கைக்குட்டையை வைத்துப் பொத்திக் கொண்டு மிகுந்த கஷ்டத்துடன் உள்ளே நுழைந்தார்.

"அதோ! அந்தப் பக்கமாக மேலே வருவதற்குப் படிக்கட்டுகள் இருக்கின்றன!"

இந்தக் குரலைப் புரிந்து கொள்ளும் விஷயத்தில் ஜஸ்டிஸ் ஜனார்த்தனத்தின் தீர்ந்த காதுகள் தவறு இழைக்கவில்லை. ஆம்! அந்தக் குரல் தர்மாம்பாளுடையது தான்! சிறிதும் சந்தேகமே இல்லை. "வாருங்கள்! நீங்கள் வருவீர்கள் என்று எனககுத் தெரியும்!" தர்மாம்பாள் ஜஸ்டிஸ் ஜனார்த்தனத்தை வரவேற்றுக் கூறி

ளுள். "அட! இதென்ன இது? நீங்கள் மட்டும் தனியாக வந்திருக்கிறீர்களே!'' என்ற கேள்வி அடுத்த கணமே அவளை அறியாமல் பிறந்தது.

"பின்னேடு மகளையும் அழைத்து வருமாறு நீ எழுதியிருந்ததைப் பார்த்தேன். ஆனல் வேண்டுமென்றே தான் நான் அழைத்து வரவில்லை.''

"என்?'' தர்மாம்பாளின் குரலில் திடீரென்று கடுமை தொனித்தது.

ஜஸ்டிஸ் ஜனர்த்தனம் அவளுடைய குரலிலுள்ள கடுமையைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. சாந்தமான குரலிலேயே, "அழைத்து வருவது சரியாகத் தோன்றவில்லை. அதனல் தான் அழைத்து வரவில்லை. இங்கே அழைத்து வராமல் இருப்பதேதான் நல்லது'' என்று பதில் அளித்தார்.

"நல்லது கெட்டதை நான் கேட்க விரும்பவில்லை.''—தர்மாம்பாளின் உள்ளம் கட்டுத் தெரித்துக் கொண்டு விட்டது. கனகடுமையான குரலில், "சொல்லுங்கள்! என் பெண் எங்கே? இன்று பதினேழு வருஷங்கள் கழித்து நான் என் பெண்ணை அழைத்துப் போவதற்காகவேதான் இங்கே வந்திருக்கிறேன். அதற்காகவேதான் அவளை அவசியம் அழைத்து வரவேண்டும் என்று ஒன்றுக்கு நூறு தடவையாக உங்களுக்கு வற்புறுத்தி எழுதியிருந்தேன். அவ்வளவு எழுதியும் நீங்கள் அவளை அழைத்து வரவில்லை. ஏன்? ஏன் அழைத்து வரவில்லை என்று கேட்கிறேன். சொல்லுங்கள், பதில்!'' என்றுள்.

"மெதுவாகப் பேசு, தர்மு! மெதுவாகப் பேசு! பதட்டப்படாதே!''—ஜஸ்டிஸ் ஜனர்த்தனம் அவளைச் சமாதானப்படுத்தும் நோக்கத்துடன் சாந்தமாகவே பேசினர்: "நான் உன் பெண்ணைப் பலவந்தமாக, வலுக்கட்டாயப்படுத்திப் பிடுங்கிக்கொண்டு விடவில்லையே! நீயாகவே தானே என்னிடம் அவளை ஒப்படைத்தாய்?''

இவ்வாறு கேட்டவர் ஒரு நிமிஷம் மௌனம் சாதித்தார். பிறகு கம்பீரமும் துயரமும் நிறைந்த குரலில், "நினைவு இருக்கிறதா, உனக்கு அந்த இரவு?

இன்றைக்குப் பதினேழு வருஷங்களுக்கு முன் நடந்த அந்தச் சம்பவம் நினைவு இருக்கிறதா? அந்தச் சம்பவம் மறக்க நியாயம் இல்லை. என் மனைவி மிகவும் பிரசவ வேதனைப் பட்டுக் கொண்டிருந்தாள். அவ்வளவு வேதனைக்குப் பிறகு அவளுக்கு மரித்த குழந்தை பிறந்தது. அப்பொழுது. தாமு! இரண்டு நாட்கள் முன்பு பிறந்த உன் குழந்தையை என் மனைவியின் கையில் கொடுத்து நீ என்ன சொன்னாய்? மறந்து விட்டதா? 'எஜமானியம்மா! ஏன், இந்தப் பெண்ணை உங்கள் பெண்ணாக நினையுங்கள். இன்றிலிருந்து இவள் எனக்கு ஒரு சொந்தமும் இல்லை, என் வாழ்க்கையின் மிகுந்த நாட்களை உங்கள் குடும்பத்தில் ஊழியம் செய்தே கழித்து விடுகிறேன். அவரே போய் விட்டபின் அவருடைய நினைவுச் சின்னத்தை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வேன்?'' என்று நீ சொல்ல வில்லையா? அதை நீ மறந்து விட்டாயா, தர்மு?'' என்று கேட்டார்.

''எப்படி மறக்க முடியும்?''—தர்மாம்பாளின் குரலில் தொனித்த கடுமை சிறிதும் குறையவில்லை. ''ஆனால் தாங்கள் அப்படிச் செய்ய என்னை எங்கே விட்டீர்கள்! நீங்களும் அந்த விஷயத்தை மறந்திருக்க மாட்டீர்கள் என்றே தான் நம்புகிறேன். எஜமானியம்மாள் இறந்து ஒரு மாதங்கூட ஆகவில்லை. அப்பொழுது என்னைக் கூப்பிட்டு நீங்கள் என்ன சொன்னீர்கள்? நினைவிருக்கிறதல்லவா? 'தர்மு! இந்தா! இந்த ரூபாய்களை எடுத்துக்கொள். இன்றைக்கே இந்த நகரத்தை விட்டு எங்கேயாவது கண்காணாத இடத்துக்குப் போய் விடு. இனி நீ இங்கிருப்பது நல்லதல்ல. கல்யாணி பெரியவள் ஆனதும், நீ தான் அவள் தாய் என்பதை உன் தாயன்பு தப்பித் தவறி வெளியிட்டுவிட்டால்கூட அவள் உள்ளம் உடைந்துவிடும். நீ கண்காணாத இடத்துக்குப் போய்விடுவதில் தான் உனக்கும் நன்மை, உன் குழந்தைக்கும் நன்மை'' என்று நீங்கள் சொல்லவில்லையா? அப்பொழுது கலங்கிய கண்களிலிருந்து நீரைக் கசிய விடாமல் இருதயத்தைக் கல்லாக்கிக்கொண்டு இந்த நகரத்திலிருந்து வெளியேறினேன். எதற்காக? என் பெண்ணின் வாழ்க்கை கெட்டு குட்டிச் சுவராகிவிடக் கூடாது என்பதற்காக.....அவளைப் பிரிந்த இந்தப் பதினேழு வருஷங்களையும் நான் எப்படிக் கழித்தேன் என்பது எனக்குத் தான் தெரியும்; என் மனதுக்குத்தான் தெரியும். நீங்களும் கடந்துபோன இந்த விஷயங்களை யெல்லாம் மறந்திருப்பதற்கு நியாயம் இல்லை!'' என்றாள்.

''இல்லை, தர்மு!''—ஜஸ்டிஸ் ஜனார்த்தனம் முன் போலவே ஸ்திரமான குரலில், ''எல்லா விஷயங்களும் எனக்கு நன்றாக நினைவிருக்கின்றன. ஆனால், 'நான் ஒரு பொழுதும் இந்தப் பக்கம் திரும்பி வரமாட்டேன்' என்று நீ எனக்கு வாக்களிக்க வில்லையா? 'கல்யாணியின் நலனுக்காக நான் அவளையே மறந்து விடுவேன்' என்று கூடச் சொன்னாயே! நினைவில்லையா?'' என்று கேட்டார்.

''அப்படிச் சொன்னது என் தவறு''—தர்மாம்பாளின் குரல் திடீரென்று இறங்கி விட்டது. அவள் வருத்தந் தோய்ந்த குரலில், ''நான் அப்படிச் செய்துவிடலாம் என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் இத்தனை வருஷ அனுபவத்தில் கல்யாணி இல்லாத என் வாழ்வு வீண் என்பதை நன்றாக உணர்ந்து கொண்டு விட்டேன். கல்யாணியைப் பிரிந்த பின் எத்தனையோ மாதங்கள் இரவு முழுவதும் பிழியப் பிழிய அழுதிருக்கிறேன். என்ன முயன்றும் என் மனம் கேட்கவில்லை. எனவே, அவளை என்னுடன் அழைத்துப் போவது என்ற தீர்மானத்துடன் வந்து விட்டேன். தயவு செய்து என் மகளை எனக்குத் திருப்பிக் கொடுத்து விடுங்கள். எனக்கு வேறு ஒன்றும் வேண்டாம். நான் அவளை அழைத்துக் கொண்டு எங்கேயாவது தொலை தூரத்துக்குப் போய்விடுகிறேன்!'' என்றாள்.

''உனக்கு ஒரு வேளை தெரியாமல் இருக்கலாம் தர்மு!''—ஜஸ்டிஸ் ஜனார்த்தனத்தின் குரலில் அலாதியான குழைவு காணப்பட்டது ''நான் கல்யாணியை என் சொந்தப் பெண்ணைக் காட்டிலும் மேலாக மதிக்கிறேன். நான் அவளுக்குத் தந்தையாக மட்டும் அல்ல, தாயாகவும் இருந்திருக்கிறேன். அவள் இதுவரை தாய் என்ற பேச்சையே எடுத்ததில்லை. உண்மையில் அவள் உன்னுடைய மகள் தான் என்

பது அவளுக்குத் தெரிந்து விட்டால் அவள் உள்ளம் உடைந்து விடாதா? அவளுடைய ஆசைக்கனவுகள் அனைத்தும் அழிந்து விடாதா? நான் உன்னை வேண்டிக் கொள்கிறேன்; கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். எத்தனை ரூபாய் வேண்டுமானாலும் கேள், தருகிறேன். ஆனால் கடவுளுக்காக வேண்டி இந்த ரகசியம் ரகசியமாகவே இருக்கட்டும். என் சொல்லைக் கேளு!'' என்றார்.

ரூபாய் என்ற பேச்சைக் கேட்டதும் தர்மாம்பாளுக்குத் தாங்க முடியாத கோபம் வந்து விட்டது. அந்தக் கோபத்தில் அவள் தொண்டை கிழியக் கத்தியே விட்டாள். "பணப் பேச்சையே எடுக்காதீர்கள்; எனக்குப் பணமும் வேண்டாம், கிணமும் வேண்டாம். உங்கள் பணத்தை உங்களிடமே வைத்துக் கொள்ளுங்கள். எனக்கு என் பெண் தான் வேண்டும். எனக்கு என் பெண்ணைத் திருப்பித் தருகிறீர்களா, இல்லையா? சொல்லுங்கள்! இல்லாவிட்டால், உங்கள் பங்களாவுக்கு வந்து அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் இந்த ரகசியத்தை அம்பலப்படுத்தியே தீருவேன்!'' என்றாள்.

"மெதுவாகப் பேசு, தர்மு! மெதுவாகப் பேசு!'' ஜஸ்டிஸ் ஜனார்த்தனம் காலில் விழாத தோஷமாகக் கெஞ்சினார். "தவறிக்கூட அப்படிச் செய்து விடாதே. தர்மு! உனக்குத் தெரியாது. கல்யாணிக்கு ஒரு பெரிய இடத்தில் நான் கல்யாணம் நிச்சயம் செய்து வைத்திருக்கிறேன். பையன் திடகாத்திரனாகவும் நல்ல அழகுள்ளவனாகவும் இருக்கிறான். கல்யாணிக்கும் அவனிடத்தில் கொள்ளை ஆசை. இன்னும் கல்யாணத்துக்குப் பதினைந்தே நாட்கள் தான் இருக்கின்றன. நீயே நிதானித்துப் பார்! இம்மாதிரிச் சந்தர்ப்பத்தில் நீ இந்த ரகசியத்தை வெளியிட்டு விட்டால் என்ன கதியாகும்? வெண்ணெய் திரண்டு வரும்பொழுது தாழி உடைந்த கதையாகி விடாதா? கல்யாணியின் வாழ்க்கை வெறிச்சோடி விடாதா? வாழ்நாள் முழுவதும் அழுகையைத் தவிர அவளுக்கு வேறு என்ன மிஞ்சும்? நீ தாய், தர்மு! நீ தாய்! தாய் தன் பெண்ணுக்கு எங்கேயாவது தீங்கு நினைப்பாளா? தீங்கு நினைப்பவளுக்குத் தாய் என்னும் பட்டப் பெயர் கிட்டுமா? நீயே சொல்லு. நீ என்னதான் விரும்புகிறாய்?'' என்றார்.

ஆனால், தர்மாம்பாள் பேசாமல் இருந்தாள். அவளுக்குப் பேசத் தோன்றவில்லை. ஜஸ்டிஸ் ஜனார்த்தனம் சொன்ன சொற்கள் அவளுடைய உள்ளத்தைக் கிளர்ச்சி கொள்ளச் செய்துவிட்டன. தன் கண்மணி கல்யாணியின் வாழ்க்கையைப் பொறுத்த பிரச்னையாக அல்லவா ஆகிவிட்டது! கல்யாணி ஒரு சாதாரண வேலைக்காரியின் பெண் என்பதை ஜனங்கள் தெரிந்து கொண்டு விட்டால், சுகமாக அவளை வாழ விட்டு விடுவார்களா? அவளுடைய வாழ்க்கைப் பூங்காவிலே தீப்பற்றி துவம்சம் செய்து விடாதா?

ஆனால்.... ஆனால்.—இது என்ன வேடிக்கை? அவளுடைய பெண்ணை அவளே கண்கொண்டு காண முடியாது போயிருக்கிறதே! ஒரு தடவை அன்புடன் "குழந்தாய்!'' என்று கூப்பிடக்கூட அவளுக்கு உரிமை கிடையாது. என்ன கஷ்டம்! என்ன கஷ்டம்! தர்மாம்பாளின் உள்ளக் கடல் கொந்தளித்தது; எண்ணப் புயல் எழுந்தது. அவள் நீர் நிறைந்து முட்டி நின்ற கண்களால் ஜஸ்டிஸ் ஜனார்த்தனத்தைப் பார்த்தாள். அவளுடைய உள்ளத்தை வாட்டிக் கொண்டிருக்கும் வேதனை கண்ணீராக உருப்பெற்றுக் கோத்து நிற்பதைக் கண்டார் ஜஸ்டிஸ் ஜனார்த்தனம். அவர் தாயின் அன்பையும் அதன் பெருமையையும் அறியாதவரா, என்ன? எனவே, அவளைச் சமாதானப்படுத்தும் நோக்கத்துடன், "தர்மு! உன் கஷ்டங்களை நான் நன்கு உணர்கிறேன். ஆயினும் இத்தனை வருஷங்களை ஓட்டியது போலவே, மற்ற நாட்களையும் நீ ஓட்டுவதில்தான் நன்மை இருக்கிறது. அகவே, எவ்வளவு முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் நீ இந்த நகரத்தை விட்டு வெளியேறி விடு. உன் பெண்ணின் நலனை உத்தேசித்து நீ இந்தத் தியாகம் செய்துதான் ஆகவேண்டும். சொல்வதைக் கேள். உன் செலவுக்கு நான் பணம் தருகிறேன். உனக்குத் தேவைப்படும் பொழுதெல்லாம் கடிதம் எழுது. நான் உனக்குப் பணம் அனுப்பி வைக்கிறேன். பணத்துக்காக நீ இங்கே வரவேண்டியதே இல்லை. என்ன, புரிந்ததா?'' என்றார்.

அதைச் சொல்லி முடித்ததும் முடிக்

காததுமாக ஜஸ்டிஸ் ஜனார்த்தனம் ஒரு கத்தை ரூபாய் நோட்டுக்களைத் தர்மாம்பாளின் முன்னால் போட்டார். பிறகு மறு பேச்சுப் பேசாமல் படி இறங்கி விட்டார். தர்மாம்பாள் அப்படியே சிலையாகப் பேசாமல் உட்கார்ந்திருந்தாள். அவள் முன்னால் நோட்டுக் கத்தை கிடந்தது. கண்கள் நீரைப் பெருக்கிக் கொண்டிருந்தன.

* * *

ஜஸ்டிஸ் ஜனார்த்தனத்தின் மாட மாளிகை மின்சார விளக்கின் ஒளியில் 'பளபள' என்று பிரகாசித்துக் கொண்டிருந்தது. பங்களா வெகுப் பிரமாதமாக ஜோடிக்கப்பட்டிருந்தது. ஜஸ்டிஸ் ஜனார்த்தனம், வாசற்படியில் நின்று கொண்டு வரும் விருந்தாளிகளை வரவேற்பதில் முனைந்திருந்தார். கல்யாணிக்குக் கல்யாணம் அல்லவா? ஜஸ்டிஸ் ஜனார்த்தனத்துக்கு ஏற்பட்டிருந்த மகிழ்ச்சிக்கு ஓர் எல்லை கோலி முடியாது. நாகஸ்வரத்தின் இன்னிசையில் அவருடைய மனம் மகிழ்ச்சியுடன் மிதந்து கொண்டிருந்தது. இருந்தாலும் இடையிடையே அவரை ஒரு பீதி ஆட்கொண்டு தூக்கி வாரிப் போடச் செய்து கொண்டிருந்தது. தர்மாம்பாளைப் பற்றி என்ன சொல்ல முடியும்? தன் பெண்ணின் திருமணத்தைக் கண்டு களிக்க வேண்டும் என்ற ஆசையை அடக்க முடியாமல் வந்துவிட்டால்....? வருவதோடு மட்டும் நிற்காமல் இத்தனை பேருக்கும் மத்தியில் குட்டை உடைத்து விட்டால்....? இந்த நினைவு அவருடைய உள்ளத்தை ஆட்டி நிலை தடுமாறச் செய்து கொண்டிருந்தது.

ஆனால் கடவுள் புண்யத்தில் அப்படி பொன்றும் நடைபெறவில்லை. கல்யாணம் நிர்விக்கினமாக நடந்தேறியது. ஏன்? மறுநாள் பொழுதும்கூடச் சந்தோஷமாகவே போயிற்று. பிள்ளை வீட்டார்கள் மறுநாள் காலை ஊருக்குத் திரும்புவதாக இருந்தார்கள். ஜஸ்டிஸ் ஜனார்த்தனம் நிம்மதியான நீண்ட பெருமூச்சு விட்டார். கல்யாணியைப் பிரிய வேண்டுமே என்ற துயரம் ஒரு புறம் அவரை வாட்டிய பொழுதிலும், இன்னொருபுறம் கல்யாணிக்கு நல்ல இடத்தில் கல்யாணம் நடந்ததே என்ற மகிழ்ச்சியும் அவருக்குக்கூடவே ஏற்படத்தான் செய்தது.

நள்ளிரவு கழிந்தும் ஜஸ்டிஸ் ஜனார்த்தனத்துக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. விதம் விதமான எண்ணங்கள் அவருடைய உள்ளக் கடலிலே எழுந்து அலைகளைப்போல் அடங்கிக் கொண்டிருந்தன. படுக்கை கொள்ளாமல் போகவே, எழுந்து வெளியே வந்தார். 'விருந்தினர்கள் சிரமம் ஏதும் இன்றி சுகமாகத் தூங்கிக் கொண்டிருக்கிறார்களா என்று பார்த்து வருவோமே' என்று தோன்றியது அவருக்கு. உடனே சுற்றி வரப் புறப்பட்டார்.

விருந்தினர்கள் அறையைத் தாண்டிச் சென்றவர் ஒரு அறைக்கு அருகிலே சட்டென்று நின்றார். அந்த அறை பஞ்சநதத்தின் தகப்பனருக்காக-அதாவது, கல்யாணியின் மாமனருக்காக ஒழித்து விடப்பட்டிருந்த அறை. இரவு இவ்வளவு நேரமாகியும் அந்த அறையிலிருந்து யாரோ இருவர் பேசும் குரல் கேட்டது. ஜஸ்டிஸ் ஜனார்த்தனம் அப்படியே நின்று அந்தப் பேச்சைக் கவனமாக ஒட்டுக் கேட்கலானார்.

கல்யாணியின் மாமனார் பேசிக்கொண்டிருந்தார். "நான் சொல்வது முற்றிலும் உண்மை. சாம்ப! நம் பஞ்சுவுக்கு இத்தனை பெரிய இடத்தில் கல்யாணம் நடந்ததைக் குறித்து எனக்குப் பரம சந்தோஷம்; மிகத் திருப்தி. ஏனென்று கேட்கிறாயா? இதற்கு ஒரு முக்கியமான காரணம் இருக்கிறது. உனக்குத் தெரியாது. இருபது இருபத்திரண்டு வருஷங்களுக்கு முன்னால் நடந்த சம்பவம் அது....."

ஜஸ்டிஸ் ஜனார்த்தனம் கதவிலேயே காதைப் புதைத்துக் கொண்டு கன சுவாரஸ்யமாகக் கேட்கலானார். பஞ்சநதத்தின் தகப்பனார் என்ன சொல்கிறார் என்று!

"நான் என் மனைவியுடன் க்ஷேத்திராடனத்தை உத்தேசித்துக் காசிக்குப் போயிருந்தேன். ஒரு நாள் வழியில் ஒன்று அல்லது ஒன்றரை வயதிருக்கும், ஒரு குழந்தை கிடந்தது. அது கைகளையும் கால்களையும் உதைத்துக்கொண்டு கத்திக் கொண்டிருந்தது. அதை எடுத்துக் கொண்டு நாங்கள் ஊரெல்லாம் சுற்றினோம், குழந்தையைத் தாய் தகப்பன் கையில் சேர்ப்பித்து விடவேண்டும் என்று. ஆனால் அதன் தாய் தந்தை

யரைக் கண்டு பிடிக்க முடியவில்லை. எனக்கும்தான் குழந்தை குட்டி ஒன்றும் இல்லாமல் இருந்தது. கடவுள் கொடுத்த கருணை மான்யம் என்று தீர்மானித்து, அதை எடுத்து வந்து என் குழந்தையாகவே ஆக்கிக் கொண்டு வளர்க்கலானேன். அந்தக் குழந்தை தான், நம் பஞ்சு! இன்று வரை இந்த ரகசியத்தை இரண்டே இரண்டு பேர்தான் அறிந்திருந்தோம். அதாவது நானும் என் மனைவியும். ஏன்? பஞ்சுவுக்கேகூட இதெல்லாம் ஒன்றும் தெரியாது. இன்றிலிருந்து இந்த ரகசியத்தை அறிந்தவர்களில் மூன்றும் நபர் நீ. ஜஸ்டிஸ் ஜனார்த்தனத்துக்கும் கல்யாணிக்கும் இந்த ரகசியம் தெரியாமலிருக்கக் கடவுள்தான் கருணை புரிய வேண்டும். இல்லாவிட்டால்...."

பஞ்சநதத்தின் தந்தை சொல்லிக் கொண்டே போனார். ஜஸ்டிஸ் ஜனார்த்தனத்துக்கு அதற்குமேல் கேட்கவேண்டும் என்று தோன்றவில்லை. ஓசைப்படாமல் வந்த வழியே திரும்பிப் போய் தம் படுக்கையில் படுத்தார். அவருடைய எண்ணக் குவியல்கள் குமிழியிட்டுக் கொண்டிருந்தன. வானமும் புவியும் ஒன்றுவது போன்ற உணர்ச்சியில் ஜஸ்டிஸ் ஜனார்த்தனம் இரு கண்களையும் இறுக மூடிக் கொண்டார்.

வாழ்த்துகிறோம்

மணலி மிராசுதாரும், பலதேவஸ்தானங்களின் டிரஸ்டியுமான மணலி ஸ்ரீனிவாஸ முதலியார் பி.ஏ.. தமது மகள் சௌபாக்யவதி அலமேலுமங்கையை, அண்ணாமலை முதலியார் என்ற நாகராஜனுக்குத் திருமணம் செய்துகொடுத்தார். இத் திருமணத்தை முன்னிட்டு, சென்னை 'ஓஷியானிக்' ஹோட்டலில் மிகச் சிறப்பான ஒரு வரவேற்பு விழா வைத்து நடத்தினர்.

நமது பத்திரிகையில் சென்ற ஆண்டு வரையில் சிறு கதைகளுக்குப் படங்கள் வரைந்து உதவியவரும், தற்போது 'சந்தமாமா' பபளிகேஷன்ஸில் இருப்பவருமான பிரபல சைத்திரிகர் "சங்கர்" என்ற புனைபெயர் கொண்ட கே.ஸி. சிவசங்கரன் சென்ற மாதம் 25-ம் தேதி கிருஹஸ்தரானார். மணமகள் சௌ. சண்முகவல்லி. சென்னை திருவல்லிக்கேணியில் நடைபெற்றது இத் திருமணம்.

"பெண்" விமர்சனம்

[8ம் பக்கத் தொடர்ச்சி]

நடிப்பில் நாகய்யாவுக்கும், அஞ்சலிக்கும் முதல் ஸ்தானத்தை அளிக்கவேண்டும். நாகய்யா ஒரு சில காட்சிகளில் தோன்றி, நம் உணர்ச்சிகளைத் தூண்டி விட்டுச் செல்லுகிறார்.

அஞ்சலி தேவி கன்னிப் பெண்ணாக நடிப்பதும், அவருக்கு மேக்கப் செய்துள்ளதும் சரியாக இல்லை. கணவனிடமிருந்து எதிர்பாராத கடிதம் கிடைக்கும்போதும், சுந்தரம் துராகிரதமாய் நடந்துகொள்ளும் கட்டத்திலும், தன் தோழியை மணந்து கொள்ளப் போகிறவர் தன் கணவரே என்பதை அறியும் போதும் அஞ்சலியின் நடிப்பு அபாரமாய் இருக்கிறது.

வைஜயந்திமாலா துறுதுறுவென்று படம் பூராவிலும் நடமாடுகிறார்; நடிப்பும் பரவாயில்லை.

ஜெமினி கணேசன் தம் பாகத்தை அழகாக நடித்திருக்கிறார். ஆனால், பாலச்சந்தரின் சேஷ்டைகள் சகிக்க முடியாததாய் இருக்கின்றன; மேலும் ஒரே மிகை நடிப்பு.

கே. சாரங்கபாணி புளித்துப்போன ஹாஸ்யத்தில் மிதக்கிறார். அவரது காலக்ஷேபக் காட்சி நமக்கு ஹாஸ்ய ரஸத்தைவிட சோக ரஸத்தையே உண்டு பண்ணுகிறது. தன் பிள்ளையின் மனதை மாற்றுவதற்கு பாடுபடும் காட்சிகளில் அவரது நடிப்பு நன்றாயிருக்கிறது.

இவருடன்கூட நடிக்கும் சம்பந்தத்தின் நடிப்பு நன்றாயிருக்கிறது. சகஸ்ரநாமத்தின் நடிப்பு கச்சிதமாய் அமைந்திருக்கிறது.

ஆர். பாலசுப்ரமண்யம், சிவதாணு, வி. கே. ராமசாமி, கே. ஆர். செல்லம், கே. என். கமலம் ஆகியோரும் தங்கள் பாத்திரங்களை பொருத்தமாக நடித்திருக்கின்றனர்.

இப்படத்தை டைரெக்டர் எம். வி. ராமன் சிரத்தையுடன் தயாரித்திருக்கிறார். துல்லியமான ஒளிப்பதிவும், மாசற்ற ஒலிப்பதிவும் கவனத்தைக் கவருகின்றன.

பெண் சுத்தமான பொழுது போக்குப் படம். சுமார் மூன்று மணி நேரத்திற்கு மேலாக நேரம் போவதே தெரியாமல் படம் ஓடுகிறது. எல்லோரும் பார்த்துக் கேட்டு ரஸிக்க வேண்டிய ஒரு நல்ல படம் "பெண்".

—"நிழல்"

வாழ்க்கை வர்ணனை

[13ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டார். அதன் விளைவாக வியாபாரத்தில் ஈடுபட்டார். ஆனால் அவரது மனம் என்னவோ நாடக உலகில் ஈடுபட்டிருந்தது. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் நாடகம் பார்ப்பது; நடிப்பது என்ற ரீதியில் எட்டு வருஷங்களைக் கடத்தினார். பிறகு 1938-ம் வருஷத்தில், நண்பர்கள் பலரை ஒன்று சேர்த்துக் கொண்டு; அவர் சொந்தமாகவே ஒரு நாடகக் கம்பெனியை—ஸ்ரீ தேவிகான சபா என்ற பெயரில்—ஆரம்பித்து "உமாமஹேசன்" என்ற நாடகத்தையும் அரங்கேற்றினார். ஆனால் அதில் சம்பந்தப்பட்டவர்களின் ஒத்துழைப்பு நீடித்திருக்காததால் கம்பெனியை சீக்கிரத்திலேயே முடிவிட வேண்டியதாயிற்று.



வீரப்பாவின் புததிரன்
ஹரிஹரன்

சினிமாவில் சேர்ந்து நடிக்க வேண்டுமென்ற எண்ணம் வீரப்பாவுக்கு மௌனப் படங்களைப் பார்த்து வந்த நாட்களிலேயே ஏற்பட்டு விட்டதாம். அந்தக் காலத்தில் பிரபல நக்ஷத்திரங்களான விட்டல், எல் மோலிங்கன், ரிச்சார்டு டால்மாஜ் முதலியவர்களின் தீரச் செயல்களைப் படங்களில் பார்த்த பொழுதெல்லாம், "இவர்களைப்போல் நாமும் சினிமாவில் சேர்ந்து தீரச்செயல்கள் புரியவேண்டும்" என்று துடிப்பாராம். ஆனால், சினிமாவில் சேருவதற்கு எவ்விதம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்; யாரைப் பார்க்கவேண்டும் என்றெல்லாம் புரியாததால் அவர் பொள்ளாச்சியிலேயே மனம் புழுங்கிக் கொண்டிருந்தார்.

கடைசியாக பேசும் படங்கள் நன்கு பிரபலம் அடைந்த பின்னர் அவர் சென்னைக்கு வந்தார். அஸன்தாஸ் கிளாஸிகல் டாக்கீஸார் "மணிமேகலை" படத்திற்கென நடிக நடிகைகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கின்றனர் என்ற செய்தியைக் கேட்ட வீரப்பா நேராகச் சென்று பேட்டி கண்டார். பேட்டி வெற்றியளித்தது. இவரை அவர்கள் ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

"மணிமேகலை" படம் கல்கத்தாவில் மதன் ஸ்டுடியோவில் எம். எல். டாண்டனின் டைரெக்ஷனில் தயாரிக்கப்பட்டது. அதில் நடிப்பதற்காக வீரப்பாவும் நடிக கோஷ்டியுடன் கல்கத்தாவுக்குப் புறப்பட்டுச் சென்றார். கதாநாயகனின் தோழன் சொக்கனாக அப்படத்தில் நம் வீரப்பா நடித்திருக்கிறார்.

"மணிமேகலை"யில் நடித்துக் கொண்டிருந்த பொழுது, சினிமாப் படங்களுக்கு பயன்படக் கூடிய வீரதீரச் செயல்கள் புரிவதில் வீரப்பா தேர்ந்துள்ளதை அறிந்த மதன் ஸ்டுடியோக்காரர்கள் இவரை தங்கள் ஸ்டுடியோவிலேயே நிரந்தரமாக அமர்ந்து விடும்படிக் கேட்டுக் கொண்டனர். ஆனால், பெற்றோரும், உற்றாரும் இந்த தூரதேச வாசத்தை ஆட்சேபித்ததால், படம் முடிந்ததும் வீரப்பா சென்னைக்குத் திரும்பிவிட்டார்.

கல்கத்தாவில் இருந்தபோது வீரப்பாவின் திறமைகளைக் கவனித்தவர்களில் டைரெக்டர் ராஜா சந்திரசேகரும் ஒருவர். வீரப்பா சென்னை திரும்பியதும் ராஜா சேகர் அவரை தாம் தயாரிக்க விருந்த "சித்ராங்கதா" படத்தில் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டார். ஆனால் யுத்த ஆரம்பம் காரணமாக இப் படம் தயாரிக்கப்படாமல் நின்றுவிட்டது.

எனினும், அண்ணாவின் விருப்பத்தை தம்பி டைரெக்டர் ரகுநாத் பூர்த்தி செய்து வைத்தார். "சீதா ஜனனம்" படத்தில் வீரப்பாவை இந்திரனாக நடிக்கச் செய்தார் அவர். இப்படமே வெற்றி பெறாததால் வீரப்பாவை பட உலகில் அழைப்பாரே இல்லை. அதனால் அவர் உடைந்த மனதுடன் ஊர் திரும்பி ஓரிரண்டு வருஷங்கள் சும்மா யிருந்து வந்தார்.

இந்த நிலைமையில் அவருக்கு [illegible]த

யணன்" படத்தில் நடிக்க அழைப்பு வந்தது. அந்த அழைப்பை அனுப்பி வைத்தவர் வீரப்பாவின் பழைய நண்பர் ரகுநாத்தான். "உதயணன்" படத்தில் நடித்து முடித்த சூட்டோடு அவரை ராஜா சந்திரசேகர் "ஸ்ரீ முருகன்" படத்திற்கு ஒப்பந்தம் செய்து வைத்தார். ஆனால் இவ்விரு படங்களிலும் அவரது உழைப்பு சோபிக்கவில்லை.



"சொர்க்க வாசல்" படத்தில் வீரப்பா

பினனர், வீரப்பா வேம்பு டைரெக்ஷனில் தயாரான "மதனமாலா" படத்தில் நடித்தார். படம் சுமாரான வெற்றியையே பெற்றதென்றாலும் வீரப்பாவின் நடிப்பு சோடை சொல்ல முடியாதபடி இருந்தது. இப்படம் முடிந்ததும், வீரப்பா "ஜீவகன்" படத்திற்கு ஒப்பந்தம் ஆனார். இப்படம் பாதியளவு தயாரிக்கப்பட்டு நிறுத்தப்பட்டிருக்கிறது.

வீரப்பா ஐந்து படங்களில் நடித்திருந்தார் என்றாலும், அவரது பெயரை ரஸிகர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய நிலைமை இதனால் ஏற்படவேயில்லை.

எம். கே. டி. பாகவதர் சிறையினின்றும் வெளிவந்தபின் "ராஜமுக்தி" என்ற படத்தைத் தயாரித்தாரல்லவா. அப்படத்தில் நடிப்பதற்கான சந்தர்ப்பத்தை அப்படத்தின் டைரெக்டர் ராஜா சந்திரசேகர் ஏற்படுத்திக் கொடுத்தார். இப்படத்தில் வீரப்பா வெளுத்துக் கட்டி விட்டார்.

"ராஜ முக்தி" வெளியான பின்னர் தான் வீரபபாவின் பெயர் சினிமா ரஸிகர்களின் கவனத்தையும், நடிப்பு அவர்கள் மனத்தையும் கவரத் தொடங்கின.

"ராஜமுக்தி"யில் வீரப்பாவுக்குக் கிடைத்த பெயரை அடுத்தபடியாக நடித்த "மருதநாட்டு இளவரசி" படம் மேலும் ஒரு படி உயர்த்தி வைத்தது. இப்படத்தில் அவரது நடிப்பு நன்கு அமைந்து ரஸிகர்களின் பாராட்டுதலையும் பெற்றது.

ரஸிகர்களின் பாராட்டுதலை மட்டுமென்ன, படத் தயாரிப்பாளர்களின் பாராட்டுதலையும் இப்படம் பெற்றது என்று சொலவது மேலும் பொருத்தமாயிருக்கும். "இதய கீத"த்தை வெளியிட்ட ஜோஸப் தளியத்தின் பார்வை வீரப்பாமீது விழுந்தது. தளியத் ஒரு தனிரகத் தயார்ப்பாளர். தயாரிபபு அம்சம் ஒவ்வொன்றையும் தாமே தீர அலசிப் பார்த்து திருப்தியடையும் வழக்கம் உடையவர் அவர். எனவே, அவர் வீரப்பாவை பிரதாபன் பாத்திரத்திற்குத் தேர்ந்தெடுத்ததே முதலில் பெருமைப்படத்தக்க விஷயமாகும்.

தளியத் வீரப்பாவுக்கு "இதய கீத"த்தில் தகுந்ததோர் பாத்திரத்தை அளித்து, தாம் தேர்ந்தெடுத்த வீரப்பா ஒரு சிறந்த நடிகர்தான் என்பதை நிரூபித்துக் காட்டிவிட்டார். வீரப்பா என்றதும் நமக்கு "இதய கீதம்" படம் ஞாபகத்திற்கு வருவது இதனால்தான்.

"சொர்க்கவாசல்"

"இதய கீத"த்திற்குப் பிறகு வீரப்பாவுக்கு சினிமா உலகில் இருந்த மதிப்பும் வெகுவாக உயர்ந்துவிட்டது. "மதன மோஹினி" படத்திலும் வீரப்பாவுக்கு நடிப்பதற்கு நிறையசந்தர்ப்பம்கிடைத்தது. ஆனால், இப் படம்தான் வெற்றியைப் பெறவில்லை. ஆனால், இதற்கு அடுத்தபடியாக நடித்த "மாப்பிள்ளை" நல்ல வெற்றிபெற்றது. "உலகம்" படத்தில் வீரப்பாவின் நடிப்பைப்பற்றி அதிகம் சொல்லுவதற்கில்லை.

வீரப்பா அபாரமான சிரத்தையுடன் நடித்த படங்களுடன் "ஜெனேவா", "நாம்", "சொர்க்கவாசல்" ஆகிய மூன்றையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். இப்படங்களில் வீரப்பாவின் நடிப்பு பாராட்டத்தக்கபடி அமைந்திருந்தது.

வீரப்பா தற்போது "காவேரி", "உலகம் பலவிதம்" ஆகிய இரு படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார். மற்றும் ஓரிரண்டு படங்கள் சம்பந்தமாகப் பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன.

வீரப்பா போன்ற நடிகர்களை எப்பொழுதும் அபாயம் சூழ்ந்து நிற்கும் என்று சொல்ல வேண்டியதில்லை. வீரப்பாவே சில அபாயங்களுக்கும், கஷ்டங்களுக்கும் உள்ளாகி யிருக்கிறார்.

"ஜெனேவா" படத்திற்காக நாகலாபுரத்தில் மலைப்பிரதேசத்தில் வெளிக் காட்சிகள் தயாரிக்கப்பட்டன. மலையுச்சியில் எம். ஜி. ராமச்சந்திரனும், வீரப்பாவும் சண்டையிடும் காட்சி. இருவரும் ஆவேசமாக சண்டையிடுகின்றனர். ஒரு சந்தர்ப்பத்தில் பின்வாங்கிய வீரப்பாவை எம். ஜி. ஆர். சட்டெனப் பிடித்து நிறுத்தாமலிருந்தால், பின்னுலிருந்த பள்ளத்தாக்குச் சுனையில் விழுந்து வீரப்பா இறந்திருக்க வேண்டியிருக்கும். நல்ல வேளையாய் பிழைத்தார்.

"நாம்" படத்தில் நடிக்கும்போது தீப்பிடிக்கும் காட்சியில் ஒரு கட்டத்தில் பீரோவைத் தள்ளிவிடும்போது அது இவர் காலில் விழுந்துவிட்டது. அதன் விளைவாக இவரது வலது கால் கட்டைவிரல் முறிந்து விட்டது.

"சொர்க்க வாசல்" படத்திற்காக இவர் ஒரு நாள் வயிற்றுக் கடுப்பையும் அலட்சியம் செய்துவிட்டு ஷூட்டிங் இற்குச்சென்றார். கே. ஆர். ராமசாமியும் இவரும் குதிரை சவாரிசெய்யும் காட்சி படமாக்கப்பட்டது. தேக அசௌக்கியத்தினால் வீரப்பா குதிரையினின்றும் விழுந்து மயக்கமுற்றார். பிறகு உடம்பு குணமாவதற்கு ஒரு மாத காலம் ஆயிற்றும். ஆனால், என்ன துரதிருஷ்டம்! இவ்வளவு சிரமத்தை அளித்த அந்தக் காட்சி படத்தில் சேர்க்கப்படவேயில்லை!

வீரப்பாவுக்கு முதலில் வாள் பயிற்சி அளித்தவர் எம். ஜி. ராமச்சந்திரன் தான் என்பது குறிப்பிடத்தக்கது. பிறகு அவர் ஸ்டன்ட் சோமுவிடம் பயிற்சி பெற்றார். வீரப்பா முதன் முதலாகப் படங்களில் கத்திச் சண்டை செய்யத் தொடங்கியது "ஜீவகனி"ல்தான்.

சென்னையிலேயே தற்போது வாசம் செய்துவரும் வீரப்பா ஒரு பெண்ணிற்கும், ஒரு ஆணிற்கும் தகப்பனார் ஆகியிருக்கிறார். பெண்ணிற்கு விவாஹமாகி புருஷனுடன் வாழ்க்கை நடத்துகிறாள். சுமார் எட்டு வயதான அவரது புத்திரன் ஹரிஹரன் பள்ளியில் படித்து வருகிறான். பெற்றோர் இருவரும் சொந்த ஊரில் சுகமே வாழ்ந்து வருகின்றனர்.

சுமார் ஐந்தரை அடி உயரமும், கம்பீரமான தோற்றமும், உடலமைப்பும், மா நிறமும் உடைய வீரப்பா அசல் வாழ்க்கையில் ஆட்டுக்குட்டி போன்ற சாதுவான குணம் உடையவர் என்பதை அறிந்தால் ஆச்சரியம் அடைவீர்கள்.

வீரப்பா நடிக்கும் படம் என்றால் கத்திச்சண்டை, குத்துச்சண்டை, தாவுதல், குதித்தல் முதலிய மயிர்க்கூச்செரியச் செய்யும் விஷயங்களுக்குக் குறைவு இருக்காது என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. ஆனால், அவர் இதர சாதாரண ஸ்டன்ட் நடிகர்களைப் போலன்றி தம் வீரச் செயல்களுடன் நடிப்புத் திறமையையும் சேர்த்தே வெளியிட்டு வருகிறார். ஆனால், அவருக்கு இதுவரை நடித்த பாத்திரங்களெல்லாம் திருப்தியை உண்டுபண்ணவேயில்லையாம். "சோகமான பாத்திரத்தை எனக்கு அளித்தால் நான் மிகச் சிறப்பாக நடித்துக் காட்டுவேன். ஆனால், இதுவரை எனக்கு அதுமாதிரி சந்தர்ப்பம் கிடைக்கவே யில்லையே" என்று வருத்தத்துடன் கூறுகிறார் வீரப்பா.

சோக நடிப்பைக்கேட்கும் இந் நடிகர் சோகமுறாமல் இருக்கும்படியாய் அவருக்கு நம் படமுதலாளிகள் சோக பாத்திரம் ஒன்றைக் கொடுத்துப் பரீக்ஷிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

பிரம்ம லோகம்

"சுகம் எங்கே"யின் படப்பிடிப்பு சேலம் மாடர்ன் தியேட்டர்ஸில் நடைபெற்று வருகிறது. அவர்களது இப்படத்தை கே. ராம்னாத் டைரெக்ட் செய்து வருகிறார். இப்படத்தின் கதை வசனத்தை ஏ. கே. வேலன் என்பவர் எழுதியிருக்கிறார். படத்தில் கே. ஆர். ராமசாமி, சாவித்திரி, கே. ஏ. தங்கவேலு, முத்துலக்ஷ்மி ஆகியோர் பிரதம பாகங்களில் நடித்து வருகின்றனர். இப்படத்தை தீபாவளியன்று வெளியிட மாடர்ன் தியேட்டர்ஸார் திட்டமிட்டிருக்கிறார்களாம்.

காவேரி

தீபாவளிக்கு மூன்று நாட்களுக்கு முன்னதாகவே,—அக்டோபர் மாதம் 22-ம் தேதி—"காவேரி" ரஸிகர்களை மகிழ்விக்க பவனிக்குக் கிளம்பிவிடும் என்பது நிச்சயமாகி விட்டது. கிருஷ்ணா பிக்சர்ஸின் இத் தயாரிப்பின் கதை ஏ. எஸ். ஏ. சாமியால் எழுதப்பட்ட கிராமியக் கதையாகும். தமிழ்ப் படத்தின் வசனத்தை ஏ. எஸ். ஏ. சாமி எழுதியுள்ளார். இதே படம் தெலுங்கிலும் "விஜய கௌரி" என்ற பெயரில் படமாக்கப்பட்டு வருகிறது. தெலுங்குப் படத்தின் வசனம், பாட்டு இவைகளை சமுத்ராலா (ஜூனியர்) எழுதியுள்ளார். லலிதா. பத்மினி, ராகினி, குசலகுமாரி, எம். சரோஜா, ருஷ்யேந்திரமணி, சிவாஜி கணேசன், டி. ஆர். ராமச்சந்திரன், எம். என். நம்பியார், பி. எஸ். வீரப்பா, ஆர். பாலசுப்ரமண்யம், டி. பாலசுப்ரமண்யம் ஆகப் பலர் நடிக்கிறார்கள் தமிழ்ப்படத்திலே. தெலுங்குப் படத்திலே சிவாஜி கணேசன், டி. ஆர். ராமச்சந்திரன் இவ்விருவருக்கும் பதில் என். டி. ராமராவும் ரேலங்கியும் நடிக்கின்றனர். மற்றவர்களெல்லாம் தமிழ்ப் பட நடிகர்களே தான். தமிழ்ப் படத்தின் பாட்டுகளை உடுமலை நாராயணக் கவி எழுதியுள்ளார். சங்கீத டைரெக்ஷன் பொறுப்பு விஸ்வநாதன்-ராமமூர்த்தி இருவரிடமும் விடப்பட்டிருக்கிறது. தமிழ்-தெலுங்கு இரு படங்களையும் டி. யோகானந்தா டைரெக்ட் செய்து வருகிறார்.

துளி விஷம்

இம் மாதம் 30-ம் தேதி தமிழ் நாட்டின் பல நகரங்களிலும் திரையிடப்படவிருக்கிறது "துளி விஷம்". சரித்திரப் பின்னணியைக் கொண்டு பின்னப்பட்ட கற்பனைக் கதையாம் இது. ஏ. எஸ். ஏ. சாமி எழுதிய இது ஏற்கெனவே நாடகமாக நடிக்கப்பட்டுள்ளது. நாடகத்தை திரைக் கதையாக மாற்றி வசனங்களை எழுதியிருக்கிறார் ஏ. எஸ். ஏ. சாமி. நரசு ஸ்டுடியோவில் தயாராகி வெளி வரும் அவர்களது முதல் சொந்தப் படமாகும் இது. தமது முதல் படம் முதல் தரப் படமாக அமைய வேண்டுமென மிகவும் சிரத்தையெடுத்துக்கொண்டிருக்கிறாராம் தயாரிப்பாளர் வி. எல். நரசு. சிவாஜி கணேசனும், கே. ஆர். ராமசாமியும் ஒரு படத்தில் சேர்ந்து நடிப்பது இதுவே முதல் முறையாகும். மற்றும் கிருஷ்ணகுமாரி, பி. கே. சரஸ்வதி, எஸ். டி. சுப்புலக்ஷ்மி, முக்கமாலா, ரங்கராவ், டி. வி. நாராயணஸ்வாமி ஆகப் பலர் நடிக்கும் படம் இது. இதே படம் "அமிர்த பிந்து" என்ற பெயரில் தெலுங்குப் படமாகவும் தயாராகியுள்ளது.

மலைக் கள்ளன்

தமது "மலைக்கள்ளன்" தமிழ்ப் படத்தை இம்மாத இறுதியில் (அநேகமாக 26-ம் தேதி) திரையிட்டுவிட நிச்சயித்திருக்கிறாராம் பக்ஷிராஜா ஸ்டுடியோ முதலாளியும் டைரெக்டருமான ஸ்ரீராமுலு நாயுடு. நாமக்கல் கவிஞரின் இந்தப் பிரபலமான கதையை திரைக்கேற்றவாறு அமைத்து வசனங்களை எழுதியுள்ளார் மு. கருணாநிதி. இப்படத்திற்கென ஆனைமலைக்குச் சென்று பல அருமையான வெளிப்புறக் காட்சிகளைப் படமாக்கி வந்திருக்கிறார் டைரெக்டர். எம். ஜி. ராமச்சந்திரன், பானுமதி ஸ்ரீராம், டி. எஸ். துரைராஜ், சந்தியா. பி. எஸ். ஞானம் பாலசரஸ்வதி, இப்படியாகப் பலர் நடித்துவரும் படம் இது. படத்தில் திடுக்கிடும் சம்பவங்

கள் பல இருக்குமென்று தெரிகிறது. இதே படம் தெலுங்கிலும் "அக்கிரா முடு" என்ற பெயரில் தயாரித்து வருகிறார் நாயுடு. தெலுங்குப் படத்தில் பானுமதி, என். டி. ராமராவ், ரேலங்கி, முக்கமாலா, ருஷ்யேந்திரமணி ஆகியோர் நடித்து வருகிறார்கள்.

134148

என் மகள்

அநேகமாக படப் பிடிப்பு முடிவடைந்து விட்டது என்ற நிலையை அடைந்து விட்ட படங்களில் அசோகா பிக்சர்ஸின் "என் மகள்" ஒன்றாகும். பல வருஷங்களுக்குப் பிறகு மீண்டும் ரஞ்சன் நடிக்கும் முதல் தமிழ்ப் படம் "என் மகள்" தான். இப்படத்தில் இவர் புது மாதிரியான ஒரு பாத்திரமாக நடிக்கிறாராம். மற்றும் எஸ். வரலக்ஷ்மி, எம். என். நம்பியார். மைனாவதி, ஆகியோரும் படத்தில் நடிக்கின்றனர்.

கூண்டுக் கிளி

"கூண்டுக் கிளி"க்கு விடுதலை கிடைக்கப் போவது ஆகஸ்ட் மாதத்திலாக இருக்குமென்று தெரிகிறது. இந்தப் படம் ஆர். ஆர். பிக்சர்ஸின் இரண்டாவது தயாரிப்பாகும். சிவாஜி கணேசனும்-எம். ஜி. ராமச்சந்திரனும் முதன் முறையாக இப்படத்தில் சேர்ந்து நடிக்கின்றனர், இது நாள் வரை சிறு சிறு பாகங்களில் நடித்து வந்த குசலகுமாரி நல்லதொரு பாகத்தில் நடித்து வருகிறார் இப்படத்தில். மற்றும் பி. எஸ். சரோஜா, கே. சாரங்கபாணி, ஆகியோரும் நடித்து வருகின்றனர். "கூண்டுக் கிளி"யின் கதை வசனத்தை "விந்தன்" எழுதியிருக்கிறார். படத்தை ராமண்ணா மிகுந்த சிரத்தையுடன் டைரெக்ட் செய்து வருகிறார்.

போன மச்சான் திரும்பி வந்தான்

மெர்குரி பிலிம்ஸாரின் "போன மச்சான் திரும்பி வந்தான்" எட்டாயிரம் அடிகள் வளர்ந்துவிட்டதாம். "துமிலன்" எழுதியுள்ள "புனர் ஜன்மம்" கதையை திரைக் கதையாக்கி, அதற்கு வசனம் எழுதியிருக்கிறார் வி. சீதாராமன். இப்படத்திற்கான பாட்டுகளையும் அவரே எழுதியுள்ளார். சங்கீத டைரெக்ஷனை எம். எஸ். விஸ்வநாதன் ஏற்றிருக்கிறார். ஸ்ரீராம், குசலகுமாரி இப்படத்தில் காதல் ஜோடியாக நடிக்கின்றனர். இவர்கள் தவிர பிரண்ட் ராமசாமி, தங்கவேலு, கே. எஸ். அங்கமுத்து ஆகப் பலர் படத்தில் நடித்து வருகின்றனர். ஸ்ரீனிவாஸராவ என்பவர் படத்தை டைரெக்ட் செய்து வருகிறார். படம் நியூடோன் ஸ்டுடியோவில் தயாராகி வருகிறது.

கனவு

இம் மாதம் திரைக்கு வரக் கூடிய படங்களில் "கனவு" ஒன்றாக இருக்கும். கே. ஆர். கே. புரொடக்ஷன்ஸாரின் தயாரிப்பாகும் இது. லலிதா, செல்லம், வி. கே. ராமசாமி, சாயிராம், ஆர். பாலசுப்ரமணியம், சிவசூரியன் ஆகியோர் நடித்துள்ள படம் இது. ரேவதி ஸ்டுடியோவில் தயாரிக்கப் பட்ட இப் படத்தை பி. வி. கிருஷ்ணன் டைரெக்ட் செய்திருக்கிறார். "கனவி"ன் திரைப் படக் கதை பிரபல மலையாளக் கதை ஒன்றைத் தழுவி எழுதப்பட்டதாம்.

தூக்குத் தூக்கி

பழைய கதைதான் என்றாலும் புதிய பாணியிலே இருக்குமென்று தெரிகிறது அருணா பிலிம்ஸின் "தூக்குத் தூக்கி" தமிழ்ப் படம். இப்படத்தைத் திரையிட அடுத்த மாதம் 6-ம் தேதியை நிச்சயப்படுத்தி விட்டார்கள் தயாரிப்பாளர்கள். சிவாஜி கணேசன், டி. எஸ். பாலையா, பி. பி, ரங்காச்சாரி, லலிதா, பத்மினி, ராகினி, எம். எஸ். எஸ். பாக்கியம் ஆகியோர் பிரதம பாத்திரங்களில் நடித்துள்ள இப்படத்தை ஆர். எம். கிருஷ்ணஸ்வாமி டைரெக்ட் செய்திருக்கிறார்.

என் விதி

டார் ஆர்ட் பிலிம்ஸ் என்ற படக் கம்பெனியார் "என் விதி" என்ற ஒரு சமூகப் படத்தைத் தமிழில் தயாரித்து வருகிறார்கள். நியூடோன் ஸ்டுடியோவில் இது பாதிக்கு மேல் படமாகி விட்டதாகத் தெரிகிறது. கிருஷ்ணகுமாரி, குமரேசன், விமலா, ஏழுமலை, சுலோசனா, வேணுபாய் ஆகியோர் படத்தின் முக்கிய பாகங்களில் நடித்து வருகிறார்கள். படத்தை டார் என்பவர் டைரெக்ட் செய்து வருகிறார். இப்படத்தின் வசனங்களை ராஜு என்ற ஒரு புது எழுத்தாளரும், பாட்டுகளை டி. வி. சுவாமியும் எழுதி யிருக்கிறார்களாம்.

Edited and Published by P. R. S. Gopal (Gundoosi) at 26, Godown St., Madras—1. Printed by S. Sriraman at the Commercial Printing and Publishing House, 46, Armenian Street, Madras—1.

தந்தி : "எவரஸ்ட்" போன் : 2894

"எவரெஸ்ட்"

போர்டிங் & லாட்ஜிங்

21–6–54 முதல் புதிய நிர்வாகத்தின்கீழ் திறக்கப்பட்டுள்ளது

அவரவர்கள் சவுகரியத்துக் கேற்றவாறு தக்க வசதியுடன் 135–அறைகள் அமைந்துள்ள "ஜெயா மான்ஷன்" விடுதி சாலை கோடையிலும் குளிர் தென்றல் வீசுகிறது.

சென்னை சென்ட்ரலுக்கும் எழும்பூருக்கும் இடையே மத்திய நகரில் மகோன்னத மாடிக் கோர்வை தங்குபவர்களுக்கு தரத்திலுயர் சாப்பாடும், பக்குவ பலகார சிற்றுண்டியும் தக்க பாதுகாப்பளித்து உபசரிக்க உரிமையாளர்கள் உள்ளன்புடன் வரவேற்கிறோம்.

வியாபார வர்த்தகர்கள், உத்தியோக உறுப்பினர்கள், உல்லாச பிரயாணச் செல்வர்கள் யாவருக்கும் எங்கள் நன்றி.

மாணவர்கள் மாதவாரியாக தங்குவதற்கு தனி சலுகை உண்டு.

உங்கள் வருகை நல்வரவாகுக!

உரிமையாளர்கள்.

CHARI

GUNDOOSI Regd. No. M. 4924 July 1954
Registered as a News Paper in Ceylon.

இந்தியாவின்
இணையற்ற பட்டணம் பொடி தொழிற்சாலை



N.V. ஷண்முகம் கம்பெனியார்
பட்டணம்பொடி தொழிற்சாலை
த.பெ.555. மதராஸ்-21.

Slb: 37-5-99
29/5/2000